
கல்கி
KALKI 23-6-1957
30 நயா பைசா

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 16 } இதழ் 47 }

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

{ ஹேவிளம்பி ஆனி 9

சமாதான தூதரின் திக்விஜயம்

சென்ற வாரத்தில் ஆரம்பமாகியுள்ள பாரதப் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்களின் திக்விஜயத்தை எல்லோரும் மிகுந்த ஆர்வத்துடன் கவனித்து வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

லண்டனில் ஜூன் மாதம் இருபத்தாறும் தேதி நடக்கப் போகும் காமன் வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் புறப்பட்டுள்ள நேருஜி சிரியாவுக்குச் சென்று விட்டு, ஸ்காண்டிநேவிய நாடுகளில் இப்பொழுது சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்.

நேருஜியின் விஜயத்தினால் அந்த நாடுகளில் இந்தியாவின் மதிப்பும் செல்வாக்கும் உயர்ந்திருக்கின்றன.

அங்கு நமது தலைவருக்கு அளிக்கப்பட்ட அமோக வரவேற்புகளிலிருந்தும், ராஜோபசாரங்களிலிருந்தும் அந்த நாடுகளின் தலைவர்களுடைய அரிய பிரசங்கங்களிலிருந்தும் மேற்படி உண்மையை அறிந்து கொள்ளலாம்.

திரைகடல்களோ, பெரும் கண்டங்களோ, மாமலைகளோ, கலாசார வேற்றுமைகளோ, டென்மார்க் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் உள்ள நட்புக்கு எவ்விதத்திலும் இடையூறாக இல்லை என்பதை, நேருஜியை அன்புடன் வரவேற்றுப் பேசிய டென்மார்க் பிரதமர் ஹான்ஸன் சுட்டிக் காட்டினார்.

டென்மார்க் செல்லும் வழியில் நேருஜி சிரியாவில் தங்கியபோது அரபு நாடுகள் நேருஜி மீதும் இந்தியாமீதும் கொண்டுள்ள மதிப்பு தெளிவாயிற்று.

இந்தியாவுக்கு விரோதமாக ஐரோப்பிய நாடுகள் செய்து வரும் அக்கிரமமான பிரசாரம் அரபு நாடுகளிலும் ஸ்காண்டிநேவிய நாடுகளிலும் மக்களிடையே எவ்வித மனமாற்றத்தையும் உண்டு பண்ணவில்லை என்பதும் நேருஜி விஜயத்தின் போது ஐயமற வெளியாயிற்று.

பாரதநாட்டின் நடுநிலைமைக் கொள்கை சுயநலத்தையோ, சூழ்ச்சியையோ அடிப்படையாகக் கொண்டதல்ல என்பதையும், சர்வதேச அரசியல் அரங்கில் இந்தியாவின் ஒரே இலட்சியம் உலக சமாதானம்தான் என்பதையும் நேருஜி ஐயம் திரிபுக்கு இடமின்றி விளக்கிக் கூறினார்.

"நவீன உலகைப் பல பயங்கரமான பிரச்னைகள் எதிர்நோக்கி நிற்கின்றன. அணு குண்டு, ஹைட்ரஜன் குண்டுப் பிரச்னையும் அவற்றில் ஒன்றாகும். அரசியல் துறையில் உலகம் முழுவதையும் பீதி கவிந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் உலகம் வாழ்வதா அல்லது வீழ்வதா என்பது, சமாதானமா அல்லது யுத்தமா என்ற கேள்வியையே பொறுத்திருக்கிறது. ஆயுத பலத்தை அடிப்படையாகக் கொண்ட மிரட்டலினாலோ, துவேஷப் பிரசாரம் செய்வதாலோ சமாதானம் ஏற்பட்டு விடாது. சமாதானம் என்ற உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கான முறைகளும் உயர்ந்தவையாக இருக்க வேண்டும்."

இவ்விதம் பாரதப் பிரதமர் டேனிஷ் சர்க்கார் அளித்த விருந்து உபசாரத்தின் போது இன்றைய உலகத்தின் பரிதாப நிலையை விவரித்துக் கூறினார்.

இந்தியா திடீரென்று உலக நாடுகளுக்குச் சமாதான உபதேசம் செய்ய முற்பட்டு விடவில்லை என்பதையும், சென்ற இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளாக இந்தியாவின் கொள்கை அதுதான் என்பதையும் நமது தலைவர் டென்மார்க் பிரமுகர்களுக்கும் மக்களுக்கும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்.



பாரதப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு, லண்டனில் நடைபெறும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் புறப்பட்டபோது புது தில்லி பாலம் விமான நிலையத்தில் எடுத்த படம். நேருஜியை வழியனுப்புவதற்காகச் சென்றிருந்த பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன், உள் நாட்டு மந்திரி பண்டித பந்த், உபஜனாதிபதி ஸ்ரீ எஸ். ராதாகிருஷ்ணன், ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத், காங்கிரஸ் அக்ராசனர் ஸ்ரீ யு. என். தேபர் முதலியோரைப் படத்தில் காணலாம்.

புத்தர் பிரானும் அசோக சக்கரவர்த்தியும் காட்டிய வழியைப் பின்பற்றிய காந்திமகான் அன்பு முறையால் வலிமை வாய்ந்த வல்லரசின் ஆயுத பலத்தை வென்றார். துவேஷமும் பகையும் போரும் மறைந்து சமாதானமும் சுபிட்சமும் நிலவும் புதிய உலகத்தை உருவாக்குவதற்கு அடிகோலினார்.

எனவே, காந்திஜியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வரும் நேருஜியை, சிரியாவில் ஒரு கவி "மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் சமாதான தூதர்" என்று வர்ணித்திருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்று அரபு நாடுகளிடையே சிரியா கேந்திர ஸ்தானத்தில் இருந்து வருகிறது.

அந்த நாட்டிலும் பாகிஸ்தான் ஸ்தானிகர் காரியாலயத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியாவுக்கும் நேருஜிக்கும் விரோதமாகத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டுப் பிரசாரம் செய்தார்கள். ஆனால், அந்தப் பிரசாரத்தை சிரியா தலைவர்களோ, மற்றவர்களோ சிறிதும் பொருட்படுத்தவில்லை என்று அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

அதற்கு மாறாக, சிரியா நேருஜிக்குக் கௌரவப் பட்டம் அளித்துத் தனது நட்பையும் நல்லெண்ணத்தையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறது.

சிரியாத் தலைவர்களும் நேருஜியோடு அளவளாவியதுடன், அரபு நாடுகள் சமாளிக்க வேண்டிய பிரச்னைகளைப் பற்றியும் நேருஜியின் அரிய யோசனைகளைக் கேட்டனர்.


அதிக ஆயுதபலத்தினால்தான் உலக சமாதானத்தைப் பாதுகாக்க முடியும் என்பது ராட்சத பலம் படைத்த வல்லரசுகளின் கூற்றாக இருந்து வருகிறது. இந்நிலையில் இந்தியாவின் உலக சமாதான இலட்சியத்தை ஆதரிக்கும் நாடுகளின் தொகை அதிகமாகி வருவது பாரத நாட்டுக்குப் பெருமை என்பதுடன் உலக மக்களுக்கும் நம்பிக்கையூட்டும் விஷயம் அல்லவா?

ஏற்கனவே இந்தியாவின் பெருமுயற்சி காரணமாக ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் உள்ள பல நாடுகளும் சமாதான வழியை ஆதரித்து வருகின்றன. ஸ்காண்டிநேவிய நாடுகளும் ஒருமித்து அதை ஆதரிக்குமாயின், போர்மண்டல நாடுகளைக் காட்டிலும் சமாதான மண்டல நாடுகளின் தொகையே அதிகமாகி வரும் என்பதில் ஐயமில்லை.

வருஷந்தோறும் லண்டனில் சம்பிரதாயமாக நடைபெறும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டினால் யாதொரு உருவான பலனும் ஏற்பட இடமில்லை.

எனினும் நேருஜி விஜயம் செய்யும் மற்ற நாடுகள் இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கையையும் சமாதான இலட்சியத்தையும் உணர்ந்து கொண்டால், அதுவே போதுமானது. அதையே பாரத நாட்டுக்கும் உலக சமாதானக் கொள்கைக்கும் கிடைக்கும் ஒரு மாபெரும் வெற்றியாகக் கொள்ளலாம்.

சிக்கனம்!



ஜனாதிபதி தமது சம்பளத்தைக் குறைத்துக் கொண்டார்.
ரூ. 1000/-
தேசிய சேமிப்பு
பிரதமர் நேருஜியும் தமது சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு சிறு வீட்டில் குடி போகப் போகிறாராம்.
தலைவர்கள் எளிய வாகனங்களில் பிரயாணம் செய்யப் போகிறார்களாம்.
.....ஆனால் நிர்வாகத்தில் நடைபெறும் வீண் விரயம் மட்டும் பழையபடியே இருக்கும்.
தேசத்தின் செல்வம்
வீண் விரயம்

திட்டத்துக்கு மிச்சமில்லை

புது வரிகளைப் பற்றி இதுவரையில் எல்லாக் கட்சியினரும் பத்திரிகைகளும் சொல்லி வந்ததைத் தவிர ஒரு புது அம்சத்தை எடுத்துக் காட்ட வேண்டியது அவசியமாகிறது.

''திட்டம், திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்'' என்று கோஷமிட்டுக் கொண்டு வரிகளைப் பற்றி இயல்பாகக் கிளம்பிய ஆட்சேபணைகளைச் சர்க்கார் தரப்பினர் புறக்கணித்து வந்தார்கள்.

''எப்படியும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். நாட்டுக்கு நலன் தரும்படியான திட்டத்தை நிறைவேற்ற செலவைச் சமாளித்துத்தான் ஆகவேண்டும்'' என்று கூறி, பெரும் கிளர்ச்சியாகக் கிளம்பிய ஆட்சேபணைகளை, தேசத் தலைவர் ஜவாஹர்லால் நேருவைக் கொண்டு அடக்கி விட்டார்கள்;


திட்டத்தை மாற்றவோ குறைக்கவோ முடியாது. இவ்வளவு விளம்பரங்கள் செய்துவிட்டு இப்போது குறைத்தால் ஏமாற்ற முண்டாகும். ஏராளமான வெளிநாட்டு வியாபாரிகளுடனும் உள்நாட்டு கண்டிராக்டர்களுடனும் செய்து கொண்ட ஒப்பந்தங்களை இப்பொழுது எப்படிக் கைவிட முடியும் என்று பார்லிமெண்டில் சொல்லி விட்டு நேருஜி ஐரோப்பாவுக்குச் சென்று விட்டார். காங்கிரஸின் 'கீழ் - அந்தஸ்து' அதிகாரிகள் 'வரிகள் நியாயமே' என்று கீழ் ஸ்தாயியில் பிரசாரமும் செய்து வருகிறார்கள்.

திட்டம் எப்படியாயினும் வருஷாந்திர வரவு செலவுக்கணக்கை ஆராய்ந்து பார்த்தால் ஒரு விஷயம் வெளிப்படும்.

இந்த வருஷம் பட்ஜெட்டில் போடப்பட்ட புதுவரிகளின் மூலம் வருவாகப் போகும் தொகை 75 கோடி ரூபாய். அதற்கு என்ன செலவுத் திட்டம் போடப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் ராணுவச் செலவில் இந்த வருஷத்துக்கு அதிகப்படியாக 50 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது தெரிய வருகிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தினாலும் புது வரிகளினாலும் நாட்டில் ஏற்பட்டிருக்கும் உணவுப் பொருள்களின் விலைகள் ஏறி வருவதைக் கண்டு அதற்கு மருந்தாக இந்த வருஷத்தில் பல விதங்களில் செலவு செய்வதற்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆக, 75 கோடி ரூபாக்கும் கணக்கு தீர்ந்தது. புது வரிகளினால் வருவாகும்

புதிய பூதம்!



''லான்ஸெட்'' என்னும் உலகப் புகழ் பெற்ற பிரிட்டிஷ் வைத்தியப் பத்திரிகை உலகில் பரவி வரும் ''ப்ளு'' ஜுரத்துக்குக் காரணம் ஆசியாவிலும் ரஷ்யாவிலும் நடைபெற்ற அணுகுண்டு சோதனைகள்தாம் என்று கூறியிருக்கிறது.

எல்லாருக்கும் நல்லவர்!



பணத்தை இப்படி ராணுவத்துக்கும் விலைவாசிகளின் ஏற்றத்தைச் சமாளிக்க மான்ய மளிப்பதிலும் செலவிடத் திட்டமிட்டு விட்டு, ஐந்தாண்டுத் திட்டம் காரணமாகத்தான் அதிக வரிகள் போட வேண்டியிருக்கிறது என்று சர்க்கார் தரப்பில் சொல்லுகிறார்கள். இதன் காரணம் என்ன?

திட்டத்தைப் பற்றிப் பேசினால் ஆட்சேபணைகளைச் சமாளித்து விடமுடியும். அதிகப்படி ராணுவச் செலவையோ அல்லது விலைவாசி ஏற்றத்தையோ சொன்னால் ஆட்சேபணைகள் கடினமாகிவிடும். சமாளிப்பது கஷ்டம். இந்தக் காரணத்தினால் புது வருமானம் 75 கோடி ரூபாய் எந்த விதத்தில் செலவாக வேண்டியிருக்கிறது என்பது திரை போட்டு மூடப்பட்டிருக்கிறது.

55 - 56ம் ஆண்டில் ராணுவச் செலவு 32 கோடிரூபாய் அதிகப்படியாகச்செலவாயிற்று.

56-57-ல் அதற்கும் மேலாக 50 கோடி ரூபாய் செலவு. இந்த ஆண்டு பட்ஜெட்டில் அதையும் மிஞ்சி இன்னொரு 50 கோடி ரூபாய் செலவிடத் திட்டம் வகுத்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டிலும் இன்னொரு ஐம்பது கோடி ரூபாய் அதிகப்படி செலவாகும் என்பதையும் எதிர்பார்க்கலாம்.

இதைத் தவிர, ராணுவத்தில் வருஷாந்திரச் செலவுக்கு மேல் மற்றொரு செலவும் உண்டு. வருஷம் தவறாமல் மூலதனமாக ராணுவ இலாகாவில் செலவு செய்து வருகிறார்கள்.

இந்த வகையில் 55-ம் ஆண்டு முதல் 57-ம் ஆண்டு வரையில் 39 கோடி ரூபாய் செலவாகி யிருக்கிறது. இந்த வருஷத்துப் பட்ஜெட்டில் இதற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

ராணுவச் செலவைப் பற்றி லாப நஷ்டத்தைப் பார்ப்பதற்காவது, நிர்வாக ஊழல்களைப் பற்றியாவது பேச்செடுக்கச் சட்டசபை அங்கத்தினர்களுக்காவது மற்ற மந்திரிகளுக்காவது வாய்ப்பு எளிதில் கிடைப்பதில்லை. அந்த நிர்வாகத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியும், அதில் எவ்வளவு ஊழல்கள், எவ்வளவு திருட்டுகள், எவ்வளவு மோசடிகள் நடைபெறுகின்றன என்பது.

இந்தியாவைக் காப்பதற்காக ராணுவ விஷயத்தில் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் செலவு செய்யலாம் என்று மக்கள் ஒப்புக் கொள்வார்கள்.

பாகிஸ்தானுக்கு மேனாட்டு வல்லரசுகள் கொடுத்து வரும் சலுகைகளினால் நம்முடைய ராணுவச் செலவு அதிகமாகி விட்டது என்று மக்களுக்கும் உலக வல்லரசுகளுக்கும் எடுத்துச் சொல்லி இந்தப் புது வரிகளைப் போட்டிருந்தால் நிலைமை வேறு விதமாக இருக்கும். ஊழல்களையும் வீண் செலவுகளையும் குறைப்பதற்குத் தகுந்த ஆராய்ச்சிக் குழுவையும் ஏற்படுத்தியிருக்கலாம். ஐந்தாண்டுத் திட்டம் என்று சொல்லி நிர்வாகப் பிரச்னையை மழுப்பியிருக்க வேண்டியதில்லை.

வம்புச் சாவடி

வெங்கு

பாரதப் பிரதமர் மந்திரிகளுக்குக்கொடுக்கும் சம்பளம் அப்படி யெல்லாம் அதிகமாக இல்லை என்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் வாதாடினார். சற்றும் ஒளிவு மறைவின்றித் தமது வரவு செலவுக் கணக்கை அங்கத்தினர்கள் முன்னிலையில் சமர்ப்பித்தார். இதெல்லாம் பார்த்தபோது தமது பிரதமர் மந்திரிகள் சம்பளக் குறைப்புக்கு இணங்கமாட்டார் என்றுதான் எண்ணியிருப்பார்கள். ஆனால் பாரதப் பிரதமர் பொதுஜன அபிப்பிராயத்துக்கு எப்போதுமே மதிப்புக் கொடுப்பவர். ஆதலால் உடனே தமது சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு விட்டார். அதையொட்டி மற்ற மந்திரிகளும் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் பாரத சர்க்காருக்குப் பல லட்ச ரூபாய் மிச்சப்படுகிறது.

சம்பளத்தைக் குறைத்துக் கொண்டதோடு மற்றொரு காரியமும் பாரதப் பிரதமர் செய்திருக்கிறார். அதாவது தமது தற்போதைய மாளிகையைத் துறந்து விட்டு ஒரு சிறு மாளிகைக்குப் போகப் போகிறாராம். சிறு மாளிகை என்றால் ஏதோ ஏற்கனவேயுள்ள பழைய மாளிகைக்குக் குடி போவார் என்று நீங்கள் எண்ணலாம். அதுதான் இல்லை. புதுக் கட்டடம் கட்டிக் கொண்டு போகப் போவதாகச் செய்தி வந்திருக்கிறது. இது புதுதில்லி கண்டிராக்டர்களுக்கு யோகமாக முடியும்! அவ்வளவுதான்!

★

இலங்கை தமிழ் மறைக் கழகத்தின் தலைவர் திரு க. பொ. இரத்தினம் பொல்லாத மனிதர். அவர் திருவள்ளுவர் திருவிழாவை உலக விழாவாகக் கொண்டாடப் பெரு முயற்சிகள் சென்ற சில ஆண்டுகளாக எடுத்துக் கொண்டு வருவது தமிழர் அறிந்த விஷயம். அதற்கேற்ப உலக அறிஞர்களின் கவனத்தை யெல்லாம் வள்ளுவர்பால் திருப்ப முயன்றிருக்கிறார். சமீபத்தில் இலங்கையில் நடைபெற்ற திருவள்ளுவர் திருவிழாவுக்கு ஜெர்மனிய தேசத்து மாபெரும் விஞ்ஞானியும்உலகம் போற்றும் அறிஞருமான டாக்டர் ஷ்வீட்ஸரிடமிருந்து அருமையான வாழ்த்துச்செய்தி இவ்விழாவுக்கு வந்திருக்கிறது.

'நான் முதன் முதலில் குறளைப் படித்த போது, அக் குறட்பாக்களின் கருத்துக்களில் என் உள்ளத்தைப் பெரிதும் பறிகொடுத்து விட்டேன். குறள்பாக்களை மிக உன்னத நோக்கமுடைய ஒரு மகானின் உணர்ச்சி மிகுந்த வாக்குகள் என்றே கருதுகிறேன்.

இந்த நூலைப் படித்துப் பார்க்கும்படி ஐரோப்பாவிலுள்ள என் நண்பர்கள் பலருக்கு அறிமுகப்படுத்தி யிருக்கிறேன். அவர்கள் கூட இதைப் படித்து உள்ளம் நெகிழ்ந்து, குறளாசிரியரிடம் பெருமதிப்பும் வியப்பும் கொண்டிருக்கிறார்கள்.

வள்ளுவரின் அறநெறியை உலகம் பின்பற்றி நடந்தால் எவ்வளவு மேலாக இருக்கும்!

★

ஒரு நண்பர் ''ரயில்வேக் காரர்கள் கால 'அட்டவணை என்று ஒரு புஸ்தகம் ஆறு மாதத்துக்கு ஒரு தடவை ஏன் வெளியிடுகிறார்களோ தெரியவில்லை'' என்றார்.

'' அவர்கள் அந்தக் காலஅட்டவணை போடாவிட்டால் ரயில் வண்டிகள் எத்தனை மணி நேரம் தாழ்ந்து வருகின்றன என்பது எப்படித் தெரியும்?'' என்று பதில் கூறினார் மற்றொரு நண்பர்.

ஆம், இப்பொழுதெல்லாம் ரயில்கள் நான்கு மணி நேரம் ஐந்து மணி நேரம் என்று நேரம் தாழ்ந்து வருவது தினப்படி நிகழ்ச்சியாகி விட்டது. ஒரு வண்டியாவது குறித்த நேரத்தில் வந்தது என்பது கிடையாது!

சென்ற வாரம் ஞாயிற்றுக்கிழமை சென்னை தினசரிப் பத்திரிகைகளில் பெரிய எழுத்துக்களில் ஒரு மகத்தான செய்தி வெளியாயிற்று!

அது என்ன தெரியுமா? ஜூன் 15ம் தேதியன்று கல்கத்தா மெயில் சென்டிரல் ஸ்டேஷனுக்குள் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தது. மூன்று மாதங்களுக்குப் பிறகு இன்றுதான் முதல் தடவையாகக் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தது. சென்ற 90 நாட்களாக மூன்று மணி நேரத்துக்குக் குறைவில்லாமல் காலம் தாழ்ந்து வந்திருக்கிறது என்று வெளியாகி யிருக்கிறது.

அப்படியானால் அன்றைக்கு வந்த ரயில் உண்மையாகவே அன்றைக்கு வரவேண்டிய வண்டியா அல்லது அதற்கு முதல் நாள் வரவேண்டிய வண்டியா என்று கேட்கிறார் ஒரு ஹாஸ்யப் பிரியர்.

★

வளரும் தமிழுக்கு ஊட்டம் அளிப்பது தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆண்டுதோறும் நடத்தும் மகாநாடுகள். இந்த மகாநாடு பலதரப்பட்ட எழுத்தாளர்கள் ஒன்றுகூடி அளவளாவி, தங்கள் கருத்துக்களை ஒருவருடன் ஒருவர் பரிமாறிக் கொள்ள நல்ல வாய்ப்பளிக்கிறது. இந்த வருஷமும் அத்தகைய வாய்ப்பு தமிழ் எழுத்தாளர்களுக்கு அளிக்கத் தமிழ் எழுத்தாளர் சங்கம் முடிவு செய்திருக்கிறது. சங்கத்தின் இவ்வருஷத்திய மகாநாடு ஜூன் 22, 23 தேதிகளில் சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெறுகிறது. மகாநாட்டை ராஜாஜி துவக்கி வைக்கிறார்கள். இவ்வருஷம் மகாநாட்டில் முதுபெரும் ஆசிரியர்களான, நாடகப் பேராசிரியர் ப. சம்பந்த முதலியார் அவர்களையும், நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களையும் சென்னை நகர வீதிகளில் ஊர்வலமாக அழைத்து வந்து, கேடயங்கள் வழங்கிகௌரவிக்கத்திட்டமிடப்பட்டிருக்கிறது. இன்னும் பல சுவைமிக்க நிகழ்ச்சிகள் இவ்விரண்டு நாட்களிலும் நடைபெற இருக்கின்றன. தமிழ் எழுத்தாளர் அனைவரும் உற்சாகமாக இம்மகாநாட்டில் பங்கு பற்றுவார்கள் என்று எழுத்தாளர் சங்க வரவேற்புக் கமிட்டியார் எதிர்பார்க்கிறார்கள்!

வட்ட மேஜை

ஆசிரியர்களின் கஷ்டம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஏற்பட்ட பயிற்சியில்லாத ஓராசிரியர்களுக்கு (எஸ். எஸ். எல். ஸி. தேர்ச்சி பெற்றவர்களுக்கு) ஏப்ரல் மாதத்துக்கு முன்பு 40+21 ரூபாயாகச் சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது 30+18 ஆகக் குறைந்தது என்னைப்போன்ற ஆசிரியர்களுக்கு வெகு துன்பமாக இருக்கிறது. இவ்வாறு சம்பளம் குறைந்தது ஏன் என்பது புரியவில்லை.

மேலும் இவ்வாசிரியர்களை மூன்று ஆண்டுகள் கழித்து ஒரு சலுகையும் இல்லாமல் விட்டு விடுவது மிக வருந்தத்தக்கதே யாகும். மற்றவர்களையும், மூன்று ஆண்டுகள் ஊழியம் புரிந்த ஓராசிரியர்களையும் ஒரே தரமாக நிர்ணயித்துக் கொள்வதும் ஏனோ? தேர்தலுக்கு முன்பு வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்க ஓராசிரியர்களை நியமித்தார்கள். ஆனால் பிறகு, விலைவாசிகளெல்லாம் ஏறும் இந்தச் சமயத்தில், சம்பளத்தைக் குறைத்துப் பணக் கஷ்டத்தை உண்டு பண்ணுவது மிக வருந்தத் தக்கதே யாகும்.

இதை எண்ணி இனிமேலாவது சம்பளத்தைப் பழையபடி அளிக்க வேண்டுமென்றும், மூன்று ஆண்டுகள் வேலை செய்த பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு ஒரு ஆண்டு காலத்துக்குப் பயிற்சி கொடுத்து ஆசிரியர் வேலைக்கு நிரந்தரமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

10—6—57
ஆத்தூர்

ஆர். முத்து நாயக்கர்

வரவேற்கிறோம்

கல்கியின் தலையங்கங்கள் ஆதார பூர்வமாகவும், மக்கள் நலனுக்கு உகந்ததாகவும், விறுவிறுப்புடனும் இருக்கின்றன.

ஆசிய நாடுகள் ஒருமித்து எதிர்த்து வரும் அணுகுண்டு ஹைட்ரஜன்குண்டு சோதனையைப் பற்றி ஆதாரத்துடன் ஆணித்தரமாகக் கண்டித்து எழுதியிருக்கும் சென்ற வாரத் தலையங்கத்தை யார்தான் பாராட்ட மாட்டார்கள்?

அத்துடன் ஆட்சியாளர்களின் சர்வாதிகாரத்தை மறைமுகமாகக் கண்டித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம்.

12—6—57
சென்னை

எம். பி. எம். அன்பரசன்

இன்புளுயன்ஸா பேய்

இன்புளுயன்ஸா என்ற பேய் சென்னை நகரத்தைக் கிடுகிடுக்க வைத்து விட்டது; தலைக்கு வந்த ஆபத்து, தலைப்பாகையோடு போகாமல் தலையையும், கழுத்தையும் சேர்த்துகொண்டு போகப் பார்த்ததுபோலும்! சென்னை நகரம் மட்டுமல்லாமல் திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி மாவட்டங்களிலும் பிடித்து ஆட்டி வைக்கிறது. ஏன்? தமிழ்நாடு முழுவதிலும் மூலை முடுக்குகளில் எல்லாம் அந்நோய் வந்து மனத்தை வதைக்கிறது. எத்தனையோ பேர்கள் குடும்பத்தோடு ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். இதன்காரணமாகத்தானோ என்னவோ ரயில்கள் தாமதம், பஸ்கள் தாமதம், தினசரி பத்திரிகைகள் தாமதம். எங்கும் எதிலும் தாமதம்! காரணம் இன்புளுயன்ஸா கரம்.

நகரங்களில் சிலர் அரை குறை சுரத்தோடு காரியாலயங்களுக்குச் செல்லுகிறார்கள். காரணம், சம்பளப் பிடித்தம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம்தான்! சென்னையிலும் அதைச் சார்ந்த தமிழ் நாடு முழுவதிலும் இன்புளுயன்ஸாவினால் பாதிக்கப் பட்டவர்களுக்குச் சம்பளப் பிடித்தம் செய்ய மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

சென்னை, மதுரை, திருச்சி, கோவை இந்த நகரங்களில் ஓடும் பஸ் சொந்தக்காரர்களும் சென்னை சர்க்கார் பஸ் அதிகாரிகளும் இதில் சிரத்தை எடுத்து வேண்டிய வசதிகள் செய்வதுமல்லாமல் சம்பளப் பிடித்தம் செய்யாமல் வழக்கம்போல் சம்பளப் பட்டுவாடா செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தாம்பரம்
7—6—57

அ. பிரகாஷ்

குழந்தைக் கதைகள்

'இன்றையச் செய்களே நாளைய நாட்டின் கைகள்' என்ற சொல்லுக்கொப்ப 'கல்கி' குழந்தைகளுக்கு மிகப் பெரிய சேவை செய்து வருகின்றது. நம் தமிழ் நாட்டில் குழந்தைகளுக்கென நடத்தப்படும் பத்திரிகைகள் மிகவும் சொற்பம். இந்த நேரத்தில் 'கல்கி' குழந்தைகளுக்கென ஏழு பக்கங்களை ஒதுக்கி, சிறந்த குழந்தை எழுத்தாளர்களின் கவிதைகளையும், கதைகளையும் குழந்தைகள் படித்துப் பரவசமடையும் வண்ணம், பார்த்துக் களிக்கும் வண்ணம் பல வண்ணப் படங்களுடன் வெளியிட்டு வருவதைப் பாராட்டுகிறோம்.

கொழும்பு 13
10—6—57

ஜோ. ஏ. எம். தாஸ்

கண்ணில் படவில்லையா?

சமீபத்தில் வெளியான 'கல்கி'யில் 'எழும்பூர் கூட்ஸ் ஷெட்டை' மாட்டுத் தொழுவத்துக்கு ஒப்பிட்டு ஒரு இரயில்வே ஊழியர் எழுதியிருந்தது மிகவும் பொருத்தம். ஆனால் ஒரே ஒரு வேறுபாடு. மாட்டுத் தொழுவத்தில் மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டி இருக்கும். ஆனால் சென்னை கடற்கரை (பீச்) கூட்ஸ்ஷெட்டில் தகிக்கும் வெய்யிலில் தாகத்தால் தவிக்கும் ஊழியருக்குத் தாகத்தைத் தணித்துக் கொள்ளத் தண்ணீரே கிடையாது! வேதனை, வெட்கம்!

மேலும், இந்த 'கூட்ஸ் ஷெட்'டில் 'இயற்கையின் அழைப்பு'க்கு ஒருவித ஏற்பாடும் செய்துதரப்படவில்லை. ஹோட்டலுக்கும், சினிமாவுக்கும், இந்த வசதிஅமைத்துத் தரப்படாவிட்டால் அனுமதி தர மறுக்கும் சென்னை நகராண்மைக் கழகத்துக்கு, 'பீச் கூட்ஸ் ஷெட்' மட்டும் ஏனோ கண்ணில் படவில்லை!

சென்னை
3-6-57

'அரசு'

உண்ணாவிரத விநோதம்

கொழும்பு, ஜூன் 15வ.

பாஷா பெரமுன என்ற கடும் வகுப்புவாத ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஸ்ரீ ராஜரத்ன, ஸ்ரீ ஜயசூரியா ஆகிய இருவரும் இவ்வாரம் ஒரு அநீதியான உண்ணாவிரதத்தை ஆரம்பித்ததினால் நெருக்கடியான நிலைமை உருவாகிக் கலகமும் ரத்தக்களரியும் ஏற்படுமோ என்று அஞ்சப்பட்டது. குழப்பம் நடக்குமென்று எதிர்பார்த்துப் பெரும்பாலான தமிழர்கள் எச்சரிக்கையுடன் இருந்தார்கள். அநேகம் தமிழர்கள் தங்களுடைய கடைகளை மூடிவிட்டனர். நல்ல வேளையாகப் பிரதம மந்திரியின் உறுதியான நடவடிக்கையினால் கொந்தளிப்பு ஏற்படுவது தடுக்கப்பட்டதோடு உண்ணாவிரதமும் கைவிடப்பட்டது.

சென்ற வருடம் தனிச் சிங்களச் சட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றிய பொழுது, சிங்களத்தோடு தமிழ் மொழிக்குச் சரிசம அந்தஸ்தைக் கொடுக்காவிட்டாலும் கூட, தமிழ் மொழியை ஓரளவு உபயோகிக்க வசதி செய்யப்படுமென்று பிரதம மந்திரி வாக்களித்தார். இந்த வாக்குறுதியை நிறைவேற்ற நான்கு அம்சத் திட்டம் ஒன்றையும் அவர் வெளியிட்டார். சிங்களத்துடன் தமிழ் மொழிக்குச் சரிசம அந்தஸ்து ஏற்படுவதற்குக் குறைவான வேறு எவ்வித யோசனையையும் தமிழ் அரசுக் கட்சியினர் ஒப்புக் கொள்ளத் தயாரில்லை என்பதை அறிவித்து ஆகஸ்டு 20-ம் தேதி சட்டமறுப்புப் போராட்டத்தை நடத்த அவர்கள் ஏற்பாடு செய்து வருகையில், தமிழர்களுக்குப் பிரதமர் அளிப்பதாகக் கூறிய சொற்பச் சலுகையையும் அளிக்கக் கூடாதென்றும் அந்தச் சலுகைகளைப் பிரதம மந்திரி உடனே வாபஸ் பெறவேண்டும் என்றும் கோரி பாஷா பெரமுனையைச் சேர்ந்த ஸ்ரீ ஜயசூரியாவும், ஸ்ரீ ராஜரத்னவும் இவ்வாரம் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்கள்.

அவர்கள் கால்பேஸ் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடத்திப் பெரிய ஆர்ப்பாட்டங்கள் செய்யத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் கால்பேஸ் திடலில் கூட்டம் நடத்துவதைப் பிரதம மந்திரி தடை செய்ததோடு, எவரும் அந்தப் பக்கம் வரமுடியாதபடி கட்டுக்காவலும் ஏற்படுத்தி விட்டார். இதன்பின் உண்ணாவிரதிகள் முனிசிபல் சபை வராந்தாவில் போய்ப் படுத்துக் கொண்டார்கள். நகர மேயர் அங்கிருந்தும் அவர்களை விரட்டிவிடவே, தெரு ஓரத்தில் படுத்து உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினர். அவர்களுக்கு அரசாங்கம் இம்மியும் விட்டுக் கொடுக்காது என்பது கண்டிப்பாகத் தெரிந்த பின்னர், ஏதோ சில சாக்குப் போக்குகளுடன் தங்கள் உண்ணாவிரதம் வெற்றி பெற்று விட்டதாக அறிவித்து விட்டு, உண்ணாவிரதத்தை நிறுத்தி வெற்றி விழாக் கொண்டாடி விட்டு வீடு போய்ச் சேர்ந்தார்கள்!

இவ்வாரம் பார்லிமெண்டின் திறப்பு விழாவில் கவர்னர் ஜெனரலின் சிம்மாசனப் பிரசங்கத்தில் பிரதம மந்திரியின் நான்கு அம்சத் திட்டத்தைப் பற்றிப் பிரஸ்தாபமிருக்காது என்று உறுதி கூறப்பட்டதாயும், ஆகையால்தான் உண்ணாவிரதப் போராட்டம் நின்றதென்றும் கூறப்பட்டது. ஆனால் அதற்கு மறுநாள் கவர்னர் ஜெனரல் சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்திய பொழுது, அதில் பிரதம மந்திரியின் திட்டம் குறிப்பிட்டிருந்ததோடு அந்தத் திட்டத்தை விரைவில் அமுல் நடத்திச் சிறுபான்மை மக்களின் குறைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை யெடுக்கத் தீர்மானித்திருப்பதும் பலமாக வலியுறுத்தப் பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து பாஷா பெரமுன வகுப்புவாதிகள் மீண்டும் அமளி செய்ய முயற்சிப்பார்களோ என்று அஞ்சப்படுகிறது. எவ்வித நிலைமையையும் சமாளிக்க அரசாங்கம் தயாராகவே இருக்கிறது.


பாஷைப் பிரச்னையைச் சமரசமாகப் பேசித் தீர்க்க வேண்டுமென்ற அபிப்பிராயம் இப்பொழுது நாட்டில் பலப்பட்டு வருகிறது. தமிழ் அரசுக் கட்சியினரும்கூட, பிரதம மந்திரியுடன் சமரசப் பேச்சுக்கள் நடத்தத் தயாராயிருப்பதாக அறிவித்திருக்கின்றனர். தமிழரசுக் கட்சியினரும் பிரதம மந்திரியும் முரண்பட்ட கருத்துகளைக் கொண்டவர்களாயிருந்தாலும்கூட மனம் விட்டுக் கூடிப் பேசினால் ஒரு சுமுகமான உடன்பாடு ஏற்படலாமென்றும் அபிப்பிராய வேற்றுமை யிருக்கும் பொழுதுதான் சமரச மகாநாட்டுக்கு அவசியம் ஏற்படுகிறதென்றும் இலங்கைப் பத்திரிகைகள் எடுத்துக்காட்டி இருக்கின்றன.

* * *

இலங்கை தமிழ் மறைக் கழகத்தினர் பிரதி வருடமும் நடத்தி வருவதைப் போல இவ்வருடமும் வைகாசி அனுஷத்தில் திருவள்ளுவர் திருவிழாவை நான்கு தினங்கள் வரையில் சிறப்பாக நடத்தினார்கள். கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்குத்தமிழன்பர்கள்தினசரி திரண்டு சென்று இலக்கியச் சொற்பொழிவுகளைக் கேட்டு ரஸித்தனர். கடைசி நாள் 'கடமையின் பரிசு' என்ற ஒரு நாடகத்தையும் மாணவ மாணவிகள் உணர்ச்சியோடு நடத்திக் காட்டினர். இவ்விழாவின் வெற்றிக்குத் தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிட் கா. பொ. இரத்தினமே மூலகாரணமாகும். அவருடைய நன்முயற்சியினால் திருவள்ளுவர் திருநாள் கொழும்பில் மட்டுமின்றி, இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெற்று வருவது குறிப்பிடத் தகுந்தது.

இவ் விழாவுக்குச் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. வருவதா யிருந்தார். கடைசி நேரத்தில் அவர் வர முடியாமற் போய் விட்டது. பலருக்கும் பெரிய ஏமாற்றம். தமிழரசுக் கட்சியினரின் சத்தியாக்கிரக இயக்கத்தில் பீதியடைந்திருக்கும் இலங்கை அரசாங்கம் திரு ம. பொ. சிவஞானம் அவர்களின் வருகையைத் தடைசெய்து விட்டது. ஆட்கள் வருவதையும் போவதையும் வேண்டுமானால் அரசாங்கம் தடுக்கலாம். கரைபுரண்டோடும் தமிழர்களின் உணர்ச்சி வெள்ளத்தை அணைபோட்டுத் தடுத்துவிட அரசாங்கத்துக்குச் சக்தி ஏது? — ரஜனி.

மாதர்குல திலகங்கள்



நம் ஹிந்து சமூகம் அநாதிகாலம்தொட்டு வளர்ந்து வரும் ஓர் ஆல விருட்சத்தைப் போன்றதாகும். கோடையில், குளிர் நிழல் தரக்கூடிய இந்த ஆல விருட்சத்தடியில் படுத்துக் கொண்டு, கடவுளின் சிருஷ்டி விநோதத் தன்மையை உணர்வதென்றாலும் உணரலாம். அல்லது கடவுளை நிந்தனை செய்வதென்றாலும் அதற்கும் இடம் உண்டு. ''இவ்வளவு பெரிய விருட்சத்தை உண்டாக்கிய கடவுள், இதன் கனிகளை மட்டும் இவ்வளவு சிறியனவாகப் படைத்தானே? இதென்ன பகுத்தறிவு? கடவுளுக்குப் பகுத்தறிவு போதாது என்பதற்கு இந்த ஆலவிருட்சமே போதிய சான்று!'' என்று விதண்டாவாதம் பேசுவதென்றாலும் பேசலாம்.

செந்தமிழ் நாட்டில், இரண்டாவதாகக் கூறப்பட்ட விதண்டாவாதம் செய்வதற்கென்றே முப்பது ஆண்டுகாலமாக ஒரு கட்சி தோன்றி வந்திருக்கிறது. அந்தக் கட்சியினர் தங்களைச் சமூக சீர்திருத்தவாதிகள் என்று சொல்லிக் கொள்ளவும் தலைப்பட்டனர்.

அதே சமயத்தில் தமிழ் நாட்டில் ஹிந்து மதத்தின்மீது பற்றுதல் காரணமாக ஆல விருட்சத்தில் தோன்றிய புல்லுருவிகளை நீக்குவதில் சில உண்மையான கடவுள் தொண்டர்கள் ஈடுபட்டு வந்தார்கள். இவர்கள் தேசபக்தி வாய்ந்தவர்களாகவும் திகழ்ந்தார்கள். இதன் விளைவாக, தமிழ் நாட்டில் இரண்டு விதமான சீர்திருத்தக் கட்சிகள் தோன்றின. ஒன்று, கடவுளுக்குப் பகுத்தறிவு போதாது என்ற கட்சி. மற்றொன்று, கடவுள் பக்தி, தேசபக்தி மிகுந்த கட்சி.

ஸ்ரீமதி நீலாவதி ராம சுப்பிரமணியம் அவர்கள் சிறுவயதிலேயே தெய்வபக்தி மிகுந்தவர். நாயுடு வகுப்பினர். ஹிந்து மதத்துக்குப் புல்லுருவிகளாக விளங்கிய சாதித் துவேஷப் புதர்கள், குரோத முட்கள் முதலிய கேடுகள் சூழ்ந்திருப்பதை உணர்ந்தார். அவற்றைப்போக்குவதில் தாமும் சேவைசெய்ய வேண்டுமென்று ஆவல் கொண்டார். சுய மரியாதை இயக்கக்காரர்களின் பொய்க் கூற்றுக்களைத் தகர்த்தெறிய, உண்மையான சீர்திருத்தவாதியாக வேண்டுவதின் அவசியத்தை உணர்ந்தார். அதன்படி, நகரத்தார் வகுப்பைச் சேர்ந்த அறிவாளர் ஸ்ரீ ராம சுப்பிரமணியம் அவர்களை 1930-ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். திருமணத்துக்கு முன்னதாகவே அம்மையார் அவர்கள் தேசியத் துறையில் ஈடுபட்டு வந்தார். தேசியத் துறையில் அம்மையார் அவர்களைக் காந்திமகான் அவர்கள்தான் திருப்பினார்கள் என்றுகூறவேண்டும். இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் காந்திஜி தமிழ்நாடு சுற்றுப் பிரயாணம் மேற்கொண்ட போது, ஸ்ரீமதி நீலாவதி அம்மையார் அண்ணலைப் பேட்டி கண்டு, தேசநிலைமை குறித்தும் சமூக சீர்திருத்தங்களைப் பற்றியும் உரையாடினார். ''காங்கிரஸுக்கு உங்களை அர்ப்பணம் செய்துகொள்ளுங்கள்! உங்களைப் போன்ற சீர்திருத்த நோக்கமுடைய மாதர்களின் சேவை காங்கிரஸுக்கு மிகவும் தேவையாயிருக்கிறது!'' என்று காந்தி மகான் கூறினார். அதிலிருந்து, ஸ்ரீமதி நீலாவதி தேசியப் பொது வாழ்வில் ஈடுபடலானார். காங்கிரஸ் நடத்திய போராட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டார். வேலூர் சிறையில் சிறைவாசப் பரிசும் பெறலானார்.

தேசியப் பாதையில் ஸ்ரீமதி நீலாவதி ராம சுப்பிரமணியம் அவர்களைத் திருப்பியவர் காந்தி மகான் என்றால், தெய்விகத் தமிழ் இலக்கியப் பாதையில் அம்மையாரைத் திருப்பியவர் ரசிகமணி டி. கே. சி. அவர்களாகும்.

ஸ்ரீமதி நீலாவதி அவர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகச் செய்து வரும் தொண்டுகள் பல. ஸ்ரீமதி நீலாவதி சிறந்த எழுத்தாளர், சிறந்த பேச்சாளர், இலக்கியத் துறையில் சிறந்த பணியாளர். எல்லாவற்றுக்கும் மேலாகத் தேசபக்தியும் கடவுள் பக்தியும் மிகுந்தவர். ''சௌபாக்கியம்'' என்ற மாதர் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை ஏற்று அதைத் திறம்பட நடத்தி வருகிறார். ஸ்ரீமதி நீலாவதி அவர்களுக்கு 45-வயது ஆகின்றது. அவருடைய சேவை தமிழ் நாட்டுக்கும் தமிழ் மாதர் குலத்துக்கும் இன்னும் பல காலம் கிடைத்துவர வேண்டுகிறோம்.



யார் ஏழை?

சத்தியம் எது என்று உணராதவனை ஏழை என்பான் ஞானி. அழகுணர்ச்சியும், பண்பும், வாழ்க்கையிலே தேட்டமும் இல்லாதவனை ஏழை என்று இரங்குவான் கவிஞன். உலகியல் அறிவு இல்லாதவனை ஏழை என்று பேசுவான் விஞ்ஞானி. ஆனால், பொதுவாக, வாழ்க்கை வசதிகள் இல்லாமல், அவற்றைப் பெறுவதற்கான பணமோ வாய்ப்போ இல்லாமல், வறுமையில் உழலும் ஒருவனையே ஏழை என்று இந்த உலகம் கூறுகிறது.

இப்படிப்பட்ட ஏழைகள் இருப்பது சமுதாயத்திற்கே அவமானம் அல்லவா? ஆம், அவமானந்தான். பிச்சை எடுத்து உயிர் வாழும்படியான நிலையில் ஒருவன் இருந்தால், அவனை ஏழையாக வைத்துள்ள சமுதாயம் மாத்திரம் இல்லை, அந்த சமுதாயத்தைப் படைத்த கடவுளுங் கூட அழிய வேண்டியதுதான் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த வள்ளுவர் பேசினார்:

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்

[உலகியற்றியான் - உலகத்தைப் படைத்த கடவுள், பரந்து கெடுக-அவனும் (அதாவது கடவுளும்) அவன் இயற்றிய அனைத்தும் அழிந்து போகட்டும்.]

நேற்றிருந்த பாரதியாரோ,

தனி ஒருவனுக்கு உணவிலை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

என்று வீர முழக்கம் செய்தார்.

அதெல்லாம் சரி, ஏழையின் நிலையைக் கண்டு இரங்கி, வறுமைப் பேயை இந்த உலகத்தை விட்டு விரட்ட வேண்டும் என்று எண்ணிய கவிஞர்கள் பேச்சு இது. ஏழைகள் என்ன சொல்லுகிறார்கள்? என்ன சொல்லுவார்கள், அவர்களுக்குக் குரல் ஏது?

இதோ கவிஞன் ஒருவன், ஏழையின் குரலாக நின்று பேசுகிறான். அவனோடு கிராமத்துக்குப் போகிறோம். போன வருஷம் ஒரே கருவேலங்காடாக இருந்த இடம் இப்போது மாயமாய் மாறி விட்டது. காட்டைத் திருத்திக் கழனியாக்கி, குப்பை கூளத்தை ஒதுக்காமல் எருவாக்கி, அந்த வறண்ட தரிசு நிலத்தை, பொன் விளையும் பூமியாகச் செய்து விட்டார்கள். செய்தது யார்? நெற்றி வியர்வை நிலத்தில் விழ, நாள் முழுதும், வெய்யிலிலும், மழையிலும், சேற்றில் அழுந்தி உழைக்கும் உழவர்கள் தாம். அவர்களுடைய சலியாத முயற்சி தான், பொன் போன்ற தானிய மணியைக் கண்டது, அதை உலகத்துக்குத் தந்து, மக்கள் எல்லோரையும் காத்தது. இது உழவர்கள் பெருமை. 'இருக்கலாம், அது எங்களுக்குத் தெரியும்; இருந்தாலும், முடிவில் எங்கள் பெருமை வேறு' என்கிறான் உழவன்.

அவன் சொல்வது ஒரு பாட்டாக வருகிறது. பாட்டைக் கண்டு இலக்கியத்தில் ஈடுபட்ட நீங்களும் என்ன, வெருண்டு ஓடி விடப் போகிறீர்களா? இல்லை. பாட்டையே பார்ப்போம்:

நெற்றி வியர்வை நிலத்தினிலே விழ
நேர முழுதும் உழைத்திடுவோம்.
கற்றிய காட்டினைச் சூறையிட்டுக் குப்பைச்
சூளில் மணிப்பொன் விளைத்திடுவோம்.

பத்தி எரியும் வெயிலினிலே சேற்றுப்
பாழில் அழுந்தி இப் பார் அளிப்போம்.

அற்றத்தில் எங்கள் பெருமை பேசும் பண்ணை
ஆண்டையின் காலடி என்றறிவோம்.

[அற்றத்தில் - முடிவில்]

'இது என்ன அக்கிரமம்?' என்று நினைக்கிறோம். அதற்குள் ஏழை சொல்கிறான்: 'அக்கிரமமா? கிரமந்தான், ஐயா, கிரமந்தான். சாத்திரங்கள் சொல்வதெல்லாம் பொய்யாகுமா? ஏழை ஏழையாக இருப்பதற்கு மனிதனுடைய பேராசையா காரணம்? இல்லவே இல்லை. பிறகு? வேறு எத்தனையோ காரணங்களை மெத்தப் படித்தவர்கள் சொல்கிறார்கள். நாம் என்னத்தைக் கண்டோம், சின்னப் பயல்கள்? ஏதோ நம்முடைய உழைப்பால் எல்லோருக்கும் சோறு கிடைக்கிறது என்பதற்காக, பந்தியிலே போய் நாமும் குந்திக் கொள்வதா? 'நீரார'மாவது போடுங்கள் என்று நம்முடைய கையை நீட்டுவதா? அட, சே! அப்படி எல்லாம் செய்துவிட்டால் சாத்திரங்கள் என்னவாகும், எண்ணிப் பார்க்க வேண்டாமா? சோறு நமக்கு எதற்கு? காற்று இருக்கிறது, காற்று. அதைப் பத்தியமாகக் குடித்தால்-ஆமாம், அளவுக்கு மீறினால் அமுதமும் விஷம் அல்லவா - இந்த வயிறு நிரம்பி விடாதா?

மெத்தப் படித்தவர் சொல்வதைக் கேள் அட
மேலான சாத்திரம் பொய்யாமோ?

சித்திரப் பேச்சு நாம் பேசுவதோ வெறும்
சின்னப் பயல்களும் சீறுவதோ?

பத்தியமாகவே காற்றைக் குடித்தால்
பாவி வயிறு நிரம்பாதோ?

நித்தியம் சோறு பிறர்க் களித்தால் கையும்
'நீராரம்'- போடென நீளுவதோ?

['நீராரம்' - நீரிலே இட்ட சோறு, பழஞ் சோற்றுக் கரைசல்]

மேலும் பேசுகிறான் அந்த ஏழை: 'கடலுக்குள்ளே குதித்து, அதன் வயிற்றிலிருந்து முத்துக்களைப் பிய்த்துக்கொண்டு வருகிறோம். காட்டில் நுழைந்து, யானையை மடக்கிப் பள்ளத்திலே அதைத் தள்ளி, அதன் தந்தத்தை உருவிக்கொண்டு வருகிறோம். முத்தாலும் தந்தத்தாலும் பல்லக்கு ஒன்று செய்கிறோம். செய்தால்? நாமா பல்லக்கில் ஏறுவது? நமக்குப் பல்லக்கு எதற்கு? பணம் எதற்கு? அதெல்லாம் வீண் தொந்தரவல்லவா? இதை எண்ணித் தானே மேலிடத்தார் நம்மை ஏழைகளாகவே வைத்திருக்கிறார்கள்? பல்லக்-

அருள்வாக்கு

நான் ஊரூராகச் சுற்றிக் கொண்டு வருவதில் ஒவ்வொரு கட்டடத்தில் இறக்கி விடுகிறார்கள். கூரை வீடுகளிலும் இறங்குவதுண்டு. கோவில் மண்டபங்களிலும் இறங்குவதுண்டு. சில இடங்களில் புகை ஜாஸ்தியாக இருக்கும். ஸ்வாமிக்கு நைவேத்தியம் சமீபத்தில் வைக்க வேண்டி விருப்பதால் பூஜை செய்யும்போது புகை அதிகமாக இருக்கும். இதிலிருந்து தப்பித்துக் கொள்ள அனுபவத்தில் ஒரு வழி கண்டு பிடித்தேன். அடுப்பண்டையில் படுத்துக்கொண்டு விட்டால் அங்கு புகையிராது. கள்ளர்கள் அதிகமாக உள்ள ஊரில் குடி புகுந்துவிட்டால், நமக்குக் கள்ளர் பயமில்லை. எது உபத்திரவமோ அதனடியில் போய்விடின், உபத்திரவமிராது.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

கைச் செய்து விட்டால் போதுமா, அதைத் தூக்கிச் செல்வதற்கு நம்மைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள். வா, தம்பி, முணுமுணுக்காதே. தூக்கு பல்லக்கை!

ஆழ நெடுங்கடல் ஆகும் பிணந்தே
ஆணிமுத் தீங்கு குவித்திடுவோம்.
வேழ மருப்பை உருவி வந்தோம் அதில்
வித்தைச் சிவிகை சமைத்திடுவோம்.
தோழமை மேவலர் பேசிடுவர் செல்வம்
சேர்ந்தரவு என்று நமக்கு அவியார்.
ஏழையராய் உள்ள பேறு பெற்றோம் பணம்
ஏதற்குப் பல்லக்கை ஏந்திடுவோம்.

'பல்லக்கிலே ஏறிச் செல்வது என்பது என்ன விளையாட்டா? எல்லையில்லாத பணத்தைக் கட்டிக் காப்பது எளிதான காரியமா? இதையெல்லாம் நம்முடைய அரசர் எப்படியோ சாதித்து விடுகிறாரே! எவ்வளவு பெரியவர், எவ்வளவு நல்லவர்! நல்லவர் இல்லையா? டேய், இதுதானே வேண்டாம் என்கிறேன். ஏறுமாறாக ஒன்றும் பேசாதே. நல்லவர் இல்லா விட்டால், நம்மையும் ஒரு பொருட்டாக எண்ணி, ஏதோ நாலைந்து தீர்வையோ வரியோ தினம் போடுவாரா? வரி போடா விட்டால் அவர் வகுத்துள்ள திட்டங்கள் எப்படி நிறைவேறும்? அதற்குள் நாம் அழிந்து விட்டால் என்ன செய்வது. வாழ்வதற்கு நமக்கு உரிமை இல்லையா என்றெல்லாம் வீண் உரிமைப் புராணம் படிக்காதே. ஏழைகளுக்கு உரிமை ஏதடா? இதுகூடத் தெரியாமல் பேச வந்து விட்டாயே?

பல்லக்கிலே எங்கள் பார்த்திபன் மாமுடி
பட்டப் பகலை மின்னுதடா!
எல்லையில்லாச் செல்வம் தாங்குகிறர், பாவம்,
ஏறுமாறில்லா திருந்திடடா!
நல்லவர் நம்மைப் பெரிதென எண்ணி
நாலைந்து தீர்வை தினம் விதித்தால்
தொல்லை என்றே அதைத் தூற்றுவதோ ஏழை
சொந்த உரிமை பாராட்டுவதோ?

[பார்த்திபன்-அரசன்; மாமுடி-பெருமை உள்ள கிரீடம்.]

மாலை வெய்யிலும், இளவேனிற் பனியும், வான நிலவும் ஒன்றாக நெய்து ஆக்கிய அற்புதங்களோ என்னும்படியான ஆடைகள் ஆயிரம் ஆயிரம் ஆலையிலே இயந்திர விலங்கோடு போராடி ஏழைகள் படைக்கிறார்கள். ஆனால் அவர்கள் உடம்பை மறைக்க ஒரு முழக் கோடி வேட்டிகூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை. 'அதனால் என்ன? இதை எண்ணி வருத்தப்பட நாங்கள் என்ன, அப்படி ஒன்றும் தெரியாதவர்களா? ஓ, எங்களுக்குத் தெரியுமே. காலச் சகடம், கன்ம வினை முதலிய கோடி கோடியாம் காரணங்களினால்தான் நாங்கள் ஏழையராய் இருக்கிறோம் என்பது நன்றாகத் தெரியுமே!' என்று சிரிக்கிறான் ஏழை.

மாலை வெயில் இளவேனிற் பனி மழை
வான நிலவு இவை நெய்தே
ஆலை விலங்கொடு போராடிப் பல
ஆயிரம் ஆடை சமைத்திடுவோம்.
மேனிக்கு ஒரு முழ வேட்டி இல்லை என
மென்று விழுங்கி உழல்வோமோ?
காலச் சகடம் கன்ம வினை முதல்
காரணம் கோடி தெளிவோமோ?

'ஏழையாய் இருப்பதிலே ஒரு நன்மை இருக்கிறது. அன்பைக் குழி தோண்டிப் புதைத்து விட்டு, பிறர்மேல் ஆதிக்கம் செலுத்த எங்களுக்குத் தெரியாது. இங்கே இந்த உலக வாழ்க்கை நரகமாய் இருந்தால் என்ன? நாளைக்கு, செத்த பிறகு சிவலோகம் கிடைக்குமே, அது போதாதா?' என்று முடிக்கிறான் ஏழை:

ஆழக் குழி வெட்டி அன்பைப் புதைத்தே
ஆதிக்கம் தாங்கும் வகை அறியோம்
ஏழையர் ஏதிலர் கீழ்மக்களே நாம்
எந்த நிலையிலும் ஏழைகளே.
வாழ வசதிகள் இல்லை இங்கே உயிர்
வாடிச் சருகென வீழினும் என்?
சூழும் நரகம் தொலைத்திடும் ஏழைக்கும்
சொர்க்கம் வரும் எனத் தேறிடுவோம்.

ஏழையின் குரல் ஈட்டி போலக் குத்துகிறது. நேரடியான ஆத்திரத்தையும் சினத்தையும் விட, இங்கே, நையாண்டியும், கசப்பும் சொற்களுக்கு மிகுந்த வேகத்தைத் தருகின்றன. இப்பாடல்கள் ஆங்கிலப்பாடல் ஒன்றின் தமிழ் வடிவம்.

ஜூன் 14ஆம் தேதி முதல்

சென்னையில்

சித்ரா
பிரபாத்
காமதேனு
ஸரஸ்வதி

மற்றும் தென்னாடெங்கும்



ஜூபிடர்

கற்புக்கரசி

டைரக்ஷன்

A.S.A.சாமி

விநியோகஸ்தர்கள்

● சென்னை நகரம்: பெல் பிக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் – 2 ● மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி: ஜயந்தி பிலிம்ஸ், மதுரை ● கோயமுத்தூர் & சேலம்: ஜோதி பிக்சர்ஸ், திருப்பூர் ● திருச்சி, தஞ்சாவூர்: திருச்சி பிக்சர்ஸ், திருச்சிராப்பள்ளி ● வட, தென் ஆற்காடு, செங்கற்பட்டு & சித்தூர்: ஆனந்தா பிக்சர்ஸ், வேலூர் ● மைசூர்: ராகவேந்திரா பிக்சர்ஸ், பெங்களூர் ஸிட்டி ● கேரளம்: சந்திரதாரா பிக்சர்ஸ், எர்ணாகுளம் ● ஸிலோன்: ஸிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட், கொழும்பு ● எப். எம். எஸ்.: ஜியான்ஸிங் & கம்பெனி லிமிடெட், சிங்கப்பூர் ● பர்மா: அகேட் பிக்சர்ஸ், மதராஸ்

ஈழ நாட்டுப் பிரயாணம்.24

உதய சூரியனும்



சென்ற பொதுத் தேர்தலின் போது தமிழ்நாட்டின் பல ஊர்களில் ஒரு காட்சியைக் கண்டோம். தெரு வீதிகளில் நின்று பார்த்தால் ஒவ்வொரு வீட்டுச் சுவரிலும் ஒரு உதய சூரியன் படம் போடப்பட்டிருந்தது. இதற்கு என்ன காரணம் என்பது முதலில் யாருக்கும் தெளிவாகத் தெரியவில்லை. உதய சூரியன் போட்ட இடங்களில் எல்லாம் ஒரு அதிசயமும் நடைபெறவில்லை. ஆனால் இந்தமாதிரி உதயசூரியன் படத்தைப் போடாவிட்டால் ஏதாவது அபாயம் ஏற்பட்டு விடுமோ என்று எண்ணிப் பலர் தங்கள் வீட்டுச் சுவர்களில் எல்லாம் உதயசூரியன் படத்தைத் தாங்களே எழுதி வைத்துக் கொண்டார்கள்.

மே மாதம் பதினெட்டாம் தேதி இலங்கைத் தீவில்*உள்ள கம்பளைக்குப் போயிருந்தபோது அம்மாதிரி, ஆனால் கொஞ்சம் வித்தியாசமான உதயசூரியனைப் பார்த்தேன்.

கண்டி என்னும் சிறு பட்டணம் நடனத்துக்குப் பெயர் போனது. ஈழ நாட்டில் வேலை வெட்டி செய்யாமல் அலைகிறவர்களைப் பார்த்து, 'என்ன கண்டி நடனம் செய்கிறாயோ?' என்று சொல்லுவார்களாம். இன்னும் புத்தர் தந்த ஆலயம் அங்கிருக்கிறது என்பதைச் சரித்திரத்தில் கவையுள்ளவர்கள் தெரிந்திருப்பார்கள். அப்பேர்ப்பட்ட கண்டிப் பட்டணத்துக்குப் பக்கத்தில் உ ள் ள கம்பளையில் நடந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மகாநாட்டுக்குப் போயிருந்தேன். அப்போதுதான் மேலே சொன்ன அற்புதமான காட்சியைக் கண்டேன்.

கம்பளையின் ஒவ்வொரு வீட்டிலும், வெளிச் சுவரிலும் மூன்று வர்ணக் கொடியின் மத்தியில் உதயசூரியன் சித்திரம் வரையப்பட்டிருந்தது. அது ஏன் என்று விசாரித்ததில், அதுதான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்த ஆண்டில் தங்கள் கட்சியின் சின்னமாகத் தயாரித்திருக்கும் கொடி என்று அறிந்தேன்.

கம்பளையின் வீட்டுக் கூரையிலும், தெருச் சந்துகளிலும் மேற்படி உதயசூரியன் பொறித்த மூவர்ணக்கொடி பட்டொளி வீசி ஆடிப் பறந்தது. மகாநாட்டுப் பந்தலிலும் கம்பீரமாகப் பறந்தது.

கம்பளையில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மகாநாட்டு ஊர்வலக் காட்சிகளையும்

உலகத் தொழிலாளர்களும்

பகீரதன்

பத்து மைல், இருபது மைல், முப்பது மைல்தூரத்திலிருந்து கும்பல் கும்பலாக மகாநாட்டுக்கு வந்த தொழிலாளர்கள் மேற்படிச் சின்னம் தாங்கிய மூவர்ணக் கொடியைப் பிடித்துக் கொண்டு, ''தன் மானத்தை இழக்காதீர்!'' ''தமிழன் உயர்வை மறக்காதீர்!'' ''மலைநாட்டுத் தமிழர்களுக்கு நாடற்றவர்என்ற பட்டம் கட்டாதீர் !'' ''மலைநாட்டை வளப்படுத்தியவன் பாட்டாளியே!'' என்று கோஷமிட்டுக் கொண்டு வந்தார்கள். ''உதயசூரிய மூவர்ணக் கொடி வாழ்க !'' என்ற கோஷங்களும் அடிக்கடி எழுந்தன. மேற்படி காட்சிகள், உணர்ச்சியூட்டும் கோஷங்கள் எல்லாம் எனக்குப் பெரும் வியப்பை அளித்தன.

தேயிலைத் தோட்டத் தொழிலாளருக்கும் உதய சூரியன் பொறித்த மூவர்ணக் கொடிக்கும் என்ன சம்பந்தம்?

இலங்கையில் மலை நாட்டில் வாழும் ஏழைத் தோட்டத் தொழிலாளிக்கும் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் இருந்து ஒழித்துக் கட்டிய பாரதத்தின் மூவர்ணக் கொடிக்கும் என்ன சம்பந்தம்?

தொழிலாளர்கள் இலங்கை சர்க்காரின் சிங்கக் கொடியைப் பிடித்துக் கொண்டு வந்தால் அல்லவா அது பொருத்த மாகவும் அர்த்த முடையதாகவும் இருக்கும்.

உதயசூரியன் பொறித்த மூவர்ணக் கொடியை இவர்கள் ஏன் பிடித்துக் கொண்டு வருகிறார்கள்? அந்தக் கொடியை ஏன் இவ்வளவு உரத்த குரலில் வாழ்த்துகிறார்கள்?

இப்படி யெல்லாம் நான் அதிசயப்பட்ட போதிலும் அதற்குக் காரணம் கண்டு பிடிப்பது அவ்வளவு கஷ்டமாக இல்லை.

இரண்டு காரணங்கள் மட்டும் சந்தேகத்துக் கிடமின்றி மிகத் தெளிவாகத் தெரிந்தன.

அவற்றில் ஒன்று அங்குள்ள தொழிலாளர்கள் இயக்கத்தில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை; இரண்டாவது மலைநாட்டுத் தமிழ் மக்களின் துயரம் நிறைந்த அவல நிலை.

பரம சாதுக்களான மலை நாட்டுத் தமிழ் மக்களை, தோட்டத் தொழிலாளர்களை ''தன்மானத்தை இழக்காதீர்!'' ''தமிழன் உயர்வை மறக்காதீர் !'' என்று புரட்சிக் கோஷம் இடுபவர்களாக, உதய

மகாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்களையும், இரு பக்கங்களிலும் உள்ள படங்களில் காணலாம்.



சூரிய மூவர்ணக் கொடியைத் தூக்கிப் பிடிப்பவர்களாக மாற்றுவதற்குக் காரணமாயிருந்து வருவது என்ன என்று கேட்டால்:—

"சென்ற சில வருஷங்களாக இலங்கை சர்க்கார் இலங்கைத் தமிழ் மக்களுக்கு இழைத்து வரும் கொடுமை; அவர்களுடைய வோட்டு உரிமையைப் பிடுங்கியது: அவர்களுடைய தமிழ் மொழியை அரசியல் அந்தஸ்திலிருந்து இறக்கியது; அவர்களை நாடற்றவர்களாகச் செய்தது: இந்தியாவில் உள்ள அவர்களுடைய உற்றார் உறவினர்களுக்குப் பணம் அனுப்ப முடியாமல் செய்தது: அவர்களைப் போய்ப் பார்த்து விட்டுத் திரும்பி வராமல் தடுத்துவிட்டது. ஆகிய இவையெல்லாம்தான்.

எனினும் இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட சூழ்நிலையானது செவிடன் காதில் ஊதிய சங்கைப் போல் ஒரு பிரயோசனமும் இல்லாமல் போயிருக்கும், இலங்கை சர்க்கார் மட்டும் கொஞ்சம் நிதானத்துடனும் தாராள புத்தியுடன் நடந்திருந்தால்.



திரு தொண்டமான்

இலங்கைத் தீவில் உள்ள மலைநாட்டுத் தமிழ் மக்களும், இதர தமிழ் மக்களும் புரட்சிக்காரர்களாக மாறி வருவதற்கு முக்கிய காரணம், அடிப்படையான காரணம் இலங்கை சர்க்காரின் விதண்டாவாதமான பிடிவாதம்தான்.

அது என்ன?

இலங்கைத் தமிழ் மக்கள் அற்புதமாக உழைக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பால் இலங்கையின் பொருளாதாரம் உயர்கிறது. இலங்கை சர்க்கார் பணத் தட்டு இல்லாமல் இருக்க முடிகிறது.

ஆனால் இவ்வளவு இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்தி என்ன பிரயோசனம்?

தமிழ் மக்களுக்கு உரிமையில்லையே!

தங்கள் வாக்குகளை உபயோகப்படுத்தித் தங்கள் தலைவர்களை அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்க முடியவில்லையே!

எனவே அவர்கள் ஆத்திரமுன்று கிடக்கிறார்கள். ஆனால் வெறும் ஆத்திரம் மட்டும் என்ன செய்ய முடியும்?

ஒரு பக்கத்தில் தொழிலாளர்களுக்குள் இரண்டு கட்சிகள். எவ்வளவோ ஆர்வத்துடன் தொழிலாளர்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஆர்வத்தை ஒன்று திரட்டி ஒரே குரலாகச் செய்யத் தலைவர்களுக்குள் ஒற்றுமையில்லை.

மற்றொரு பக்கத்தில் இது நாள் வரையில் இலங்கையின் அரசியல் மொழியாக இருந்து வந்த தமிழ் இப்பொழுது அரசியல் அந்தஸ்திலிருந்து தள்ளப்பட்டு விட்டது. மொழிக்கும் ஆபத்து ஏற்பட்டு விட்டது.

ஐயோ! உரிமையில்லையே! உரிமை இருந்தால் நமது வோட்டுகளை உபயோகப்படுத்தி இலங்கை சர்க்காரில் பலமான எதிர்க்கட்சியை உண்டாக்கி இந்த அவல நிலை ஏற்படாமல் தடுக்கலாமே. இந்தக் காலத்தில் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் ஏற்பட்டிருக்கும் ஆபத்தைத் தடுக்காவிட்டால் வேறு எந்தக் காலத்திலும் இதைத் தடுத்து நிறுத்துவதற்கு முடியாமல் போய் விடுமே!

உரிமை! உரிமை! உரிமை!

உரிமை யார் கொடுப்பார்கள்?

இலங்கையின் சுதந்திரத்துக்கு நாங்களும் இரத்தம் சிந்தினோமே. எங்கள் தியாகத்தையும் கொடுத்துத் தானே இலங்கையின் சுதந்திரத்தைப் பெற்றோம். இப்பொழுது ஆட்சியில் இருக்கும் சர்க்கார் இதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறார்களா? ஈழநாட்டுத் தமிழ்மக்களையும், அவர்கள் உயிரினும் மேலான தமிழையும் அமுக்கி அழித்து விடப் பார்க்கிறார்களே!

ஏன் எங்களுக்குப் பிரஜா உரிமை தர மாட்டேன் என்கிறார்கள்? அப்படித் தருகிறவர்கள் ஒரு குடும்பத்தில் பிள்ளைகளுக்கு மட்டும் கொடுத்து விட்டுப் பெற்றோருக்கு இல்லை என்கிறார்களே!

இந்த அநியாயம் உண்டா? இந்த உலகில் இதைப் பற்றிக் கேட்பார் இல்லையா? ஏதோ அன்பு என்கிறார்களே? புத்த பகவான் என்கிறார்களே! புத்த ஜெயந்தி கொண்டாடுகிறார்களே! இவைகள் எல்லாம் வெறும் ஆடம்பரமா? வெளி வேஷமா?

இதற்காக ஒரு சர்க்காரா? கடவுளே! நீயாவது இந்த அநியாயத்தைக் கேட்கக் கூடாதா? எங்களுக்குப் பிரஜா உரிமை வாங்கிக் கொடுக்கக் கூடாதா? இவ்வாறெல்லாம் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் எண்ணி எண்ணி ஏங்கித் தவிக்கிறார்கள்.

அப்பா! மகாராஜாக்களே! வாருங்கள்! என்ன சொல்கிறீர்கள்? பாரத நாட்டில் எல்லாருக்கும் வோட்டுரிமை கிடைத்திருக்கிறதல்லவா? எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுத்திருக்கிறதல்லவா? அவர்கள் என்ன, நாமும் பிரிட்டிஷாரை இலங்கையில் இருந்து விரட்டுவதற்கு இந்த மூவர்ணக் கொடியைத் தானே தூக்கிப் பிடித்தோம்! அதே கொடியை இப்பொழுது நமது உரிமைக்காகத் தூக்கிப் பிடிப்போம். நம்முடன் சிலர் ஒத்து வர மாட்டேன் என்கிறார்களா? பாதகமில்லை. அவர்களுக்காகவும் சேர்த்து நாம் பலமான தொழிற்சங்கம் அமைப்போம்.

ஆகா! இந்தத் தொழிலாளர் சங்கத்தில் நாங்கள் எல்லாம் சேருகிறோம். சந்தா கட்ட வேண்டுமா? கட்டுகிறோம்! மகாநாடு கூட்ட வேண்டுமா, கூட்டுகிறோம்! உதய சூரியன் பொறித்த மூவர்ணக் கொடியைத் தூக்கிப் பிடிக்க வேண்டுமா? பிடிக்கிறோம்! உலகத் தொழிலாளர் ஸ்தாபனத்திலும் இணைய வேண்டுமா? இணைந்து விடுகிறோம். உதய சூரியனும் உலகத் தொழிலாளரும் வாழ வேண்டும் என்று கோஷமிட வேண்டுமா? கோஷமிடுகிறோம். எங்களுக்காக மட்டுமல்ல,

உலகத் தொழிலாளர்களுக்காகவும் பாடுபடவே தயாராக இருக்கிறோம்.

எப்படியாவது எங்களுக்குப் பிரஜா உரிமை கிடைத்தால் போதும். இவ்வாறெல்லாம் பாடுபட்டு வரும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு, தோட்டத் தொழிலாளர்களுக்குப் பிரஜா உரிமை கிடைக்குமோ இல்லையோ?

பரம சாதுக்களான தோட்டத் தொழிலாளர்கள் தன்மானமுள்ள புரட்சிக்காரர்களாக மாறிய வரலாறு மேற்கண்டதுதான்.

கம்பளை என்னும் சின்னஞ்சிறு ஊரில் இரண்டு லட்சம் பேர்கள் கொண்ட மகாநாடு நடந்தது. அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டைப்போல் விமரிசையாக நடந்ததற்குக் காரணமும் மேலே கூறியதுதான்.

இதையெல்லாம் நான் சொல்லவில்லை. மேற்படி மகாநாட்டின் தலைவர்; இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களின் பேரன்புக்கும் பெரு மதிப்புக்கும் பாத்திரமான தலைவர் திரு தொண்டமான் அவர்கள் சொன்னதைத் தான் திரும்பச் சொல்கிறேன்.

தமிழ் மக்களின் துயரம்

கம்பளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பதினேழாவது மகாநாட்டில் நான் கண்டது, கேட்டது, பிறகு சாவகாசமாக ஈழ நாட்டில் விசாரித்துத் தெரிந்து கொண்டது ஆகியவற்றைச் சுருக்கமாக நேயர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தேயிலைத் தோட்டம்தான் இலங்கையின் முக்கியமான தொழில்.

இலங்கையில் பிரிட்டிஷார் ஆட்சி நடத்திய காலத்திலே, பிரபுத்துவ சகாப்தத்திலிருந்த அடிமைகளைப் போலத் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைத் தேயிலைத் தோட்டத்துக்குச் சென்ற தமிழ் மக்கள் ஒப்பந்தக் கூலிக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர் கும்பலாகக் கருதப்பட்டனர். ஆனால் இன்றைய நவீன சகாப்தத்திலும் இந்தத் தொழிலாளர்கள் அதே கஷ்டங்களை வேறு போர்வையின் கீழ், வேறு பெயர்களின் கீழ் அநுபவிக்கின்றனர்.

அந்தக் காலத்தில் தேயிலைத் தோட்டத்திலே மக்கள் படும் அவதிகளை இந்தியாவிலும் சரி, இலங்கையிலும் சரி, காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள் அனைவரும் தங்களுடைய பிரசங்கங்களில் பிரலாபிப்பது வழக்கம். அதையே சுயராஜ்யக் கிளர்ச்சிக்கு முக்கிய காரணமாகக் கூறுவதும் உண்டு.

தற்சமயம் சுதந்திரம் பெற்ற இலங்கையில் பயங்கரமான அடக்குமுறை தமிழ் மக்களின் மேல் ஏவப்பட்டிருக்கிறது.

சிங்களப்பகுதியில் தமிழ் மக்கள் தாராளமாக உலாவ முடியாதபடி அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது. கம்பளை காங்கிரஸ் மகாநாடு நடந்து கொண்டிருக்கும்போதே இந்தக் காட்சியைக் காண முடிந்தது. சிங்களக் குண்டர்கள் மகாநாட்டுக்கு வந்த பல தமிழ் மக்களை அடித்து மண்டையை உடைத்து விட்டனர். அடிபட்ட தொண்டரை மகாநாட்டுக்குத் தூக்கி வந்து போட்டுக் கதறிய காட்சி இன்றும் கண் முன்னே நிற்கிறது. அப்பொழுது மகாநாட்டில் சிறு குழப்பம் ஏற்பட்டு விட்டது. தொழிலாளர் தலைவர் திரு தொண்டமான் மிகுந்த ஆவேசத்துடன் வந்து குழப்பத்தை அடக்கினார்.

இந்த நிலைமைக்குக் காரணம் என்ன?

இலங்கைத் தமிழ் மக்களுக்குப் பிரஜா உரிமையும் அங்கு தமிழ்மொழி ஆட்சி மொழியாக இல்லாததும்தான்.

இந்த நிலைமையை உடனே மாற்றத்தான் வேண்டும். அதுதான் இலங்கைத் தமிழ் மக்களுக்கு இப்பொழுது முக்கிய விஷயம்.

தமிழ் மக்களுக்குப் பிரஜா உரிமையும், தமிழ் மொழிக்கு அரியாசனமும் கிடைக்காததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. ஒன்று இலங்கைத் தமிழ் மக்களுக்குள் போதிய ஒற்றுமை இன்மை. இரண்டு சிங்கள சர்க்காரில் பதவியில் இருப்பவர்களின் சிங்கள வெறி.

சில தமிழ்த் தலைவர்கள் தங்கள் சுய கௌரவத்துக்காக எதிர்காலத் தமிழ் மக்களின் நலன்களை எண்ணிப் பார்க்காது தாங்கள் பிடித்ததே பிடியாக இருக்கிறார்கள். அதனால் தமிழ் மக்களுக்குள் ஒற்றுமை குறைந்து பிளவு ஏற்பட்டு வருகிறது.

தமிழ் மக்களுக்குப் பிரஜா உரிமையும் தமிழ் மொழிக்கு அந்தஸ்தும் கொடுத்து விட்டால் எங்கே சிங்கள மொழிக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்று சிங்களவர்களுக்குப் பயம்.

சிங்கள அரசியல்வாதிகள் இப்பொழுது சுலபமாக மக்கள் மத்தியில் சிங்கள வெறியை



நன்றி அறிவிப்பு

விழுப்புரத்தில் 2-6-57 ஞாயிறு அன்று செ. இராஜமாணிக்கப் பத்தர் தௌஹித்திரியும் சி. இரத்தின சபாபதி பத்தர் ஜேஷ்ட குமாரத்தியுமான சௌ. உமையாள் பார்வதிக்கும், மதுராந்தகம் க. நடேசப் பத்தர் குமாரன் சிரஞ்சீவி சுவாமிநாதனுக்கும், (சென்னை டைரக்டர் ஆப் அக்ரிகல்ச்சர் ஆபீஸ்) நடந்த திருமணத்திற்கு வந்து வாழ்த்தியவர்களுக்கும், வாழ்த்துக்கள் அனுப்பிய பெரியோர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். **வாழ்க. உமா - சுவாமிநாதன்**

ரத்தின சபாபதி — கமலம்மாள்



மெனசிஸ் சேஷசாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் காரியதரிசி திரு பி.பி. வெங்கட சுப்ரமணியம் அவர்களின் குமாரி பி.வி. லலிதாவுக்கும் திரு எம். என். சேஷாத்ரிக்கும் திருச்சியில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க லலிதா—சேஷாத்ரி!

உபயோகப்படுத்தி அரசாங்கத்தைக் கைப்பற்றியிருக்கின்றனர்.

இம்மாதிரி எதிர்காலத்தில் நடப்பதற்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்று தமிழ் மக்களுக்குப் பிரஜா உரிமையும் தமிழுக்கு அந்தஸ்தும் கொடுக்க மறுக்கிறார்கள்.

ஆக்கூடி இலங்கைத் தமிழ் மக்களின் துயரத்தைத் தீர்க்கப் பாடுபடுபவர்கள் இல்லாமலே போய் விட்டது.

இப்பொழுது நிலைமை சற்று மாறி வருகிறது. தமிழ்த் தலைவர்களில் சிலர் தங்கள் பொறுப்பை உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள். தமிழ்த் தலைவர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டுத் தமிழ் மக்களின் துயரம் தீரக் கடவுள் கருணை புரிய வேண்டும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மகாநாட்டில் தொழிலாளர்கள் நலனைப் பற்றிப் பேசியதுடன், தீர்மானம் போட்டதுடன் நிற்கவில்லை. இலங்கை சர்க்கார் கொண்டு வந்திருக்கும் நெற் சட்டத்தை, அதாவது இலங்கையில் பாடுபடும் விவசாயிகளின் பொருளாதார நலனை உயர்த்தும் சட்டத்தை வரவேற்றுப் பாராட்டியும் தீர்மானம் நிறைவேற்றி யிருந்தார்கள்.

இதில் விசேஷம் என்னவென்றால் அத்தனை ஆயிரம் தொழிலாளர்களும் தீர்மானம் என்ன சொல்கிறது என்பதை நன்கு தெரிந்து கொண்டு விட்ட பிறகு வோட்டுச் செய்து நிறைவேற்றியதாகும்.

ஆம்; சென்னை முதலிய நகரங்களில் படித்துப் பட்டம் பெற்ற ஜனங்கள் கூடும் கூட்டங்களில் அரசியல் பிரச்னைகளை எவ்வளவு நன்றாய்த் தெரிந்து கொள்வார்களோ, அதைப் போலவே கம்பளை காங்கிரஸ் மகாநாட்டுத் தொழிலாளர்களும் தங்கள் அரசியல் பிரச்னைகளை வெகு நுட்பமாக நுயந்திரிபுக்கு இடமின்றித் தெரிந்து கொண்டிருந்தார்கள்.

மகாநாட்டில் பிரதிநிதிகள் பேசும்போது இது விஷயம் நன்றாய்த் தெரிந்தது. சபையோருக்குப் பிடித்தமான அரசியல் விஷயங்களைப் பிரசங்கிகள் வெளியிடும்போது காது செவிடுபடும்படியான கரகோஷம் சபையில் எழுந்தது. சபையோருக்கு அவ்வளவாகப் பிடிக்காத விஷயங்கள் சொல்லப்படும் போதோ சபை நிசப்தமாக இருந்தது.

தோட்டத் தொழிலாளர்களிடம் இருந்த அரசியல் ஞானம் உண்மையில் அதிசயிக்கத் தக்கதுதான். அவர்களை இவ்வளவு அரசியல் நிபுணர்களாகச் செய்திருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு தொண்டமான், திரு ராஜலிங்கம், திரு வெள்ளையன், திரு அண்ணாமலை ஆகியவர்களைப் பாராட்ட வேண்டும்.

ஆம்; இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தான் தோட்டத் தொழிலாளர்களின் கட்டுப்பாடான முன்னேற்றத்துக்குக் காரணமானது. எனவே மகாநாட்டை ஒட்டி நடந்த ஊர்வலம், கண்டி நடனங்கள், கரக ஆட்டங்கள், காவடி நடனங்கள், சிலம்ப விளையாட்டுக்கள், மேடை அலங்காரங்கள், ஊர்வலத்தில் பவனிவந்த யானைகளின் அலங்காரங்கள் எல்லாமே ஒரே குஷி மயமாக இருந்ததில் ஆச்சரியமில்லை.

ஊர்வலம் வந்த வீதிகளில் தலைவர்களுக்குப் போட்ட மாலைகள் மலையாகக் குவிந்திருந்தன. வீட்டுக்கு வீடு தலைவர்களை நிறுத்தி அவர்களுக்கு மங்கள ஆரத்தி எடுத்து நெற்றியில் குங்குமத் திலகம் இட்ட காட்சி, போருக்குப் புறப்படும் வீரர்களுக்கு ஊர் மக்கள் வாழ்த்துக் கூறி அனுப்புவது போலிருந்தது.

உதய சூரியன் பொறித்த மூவர்ணக் கொடியைப் பாரத நாட்டில் இருந்து வந்த சோஷலிஸ்ட் தலைவர் திரு அசோக் மேத்தா மகாநாட்டுப் பந்தலில் ஏற்றி வைத்தார்.

கம்பளை எம்.பியும் நகரசபைத் தலைவருமான திரு ஆர். எஸ். பெல்கபால மகாநாடு நிர்மாணிக்கப்பட்டிருந்த பெரிசுந்தர நகரைத் திறந்து வைத்தார். இலங்கைத் தொழில் மந்திரி திரு இலங்கரத்ன மகாநாட்டைத் திறந்து வைத்தார். உணவு மந்திரி திரு பிலிப் குணவர்த்தன, திரு ராமாநுஜம், திருமதி சரோஜினி ராமாநுஜம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு ராஜாராம் நாயுடு, ஆசியத் தொழிற் சங்கக் காரியதரிசி திரு மாபரா, திருமதி மரகதம் சந்திரசேகரன் ஆகியோர் மகாநாட்டில் பேசினார்கள்.

இந்த மகாநாட்டில் கலந்து கொண்டு இந்த அறிஞர்களின் சொற்பொழிவைக் கேட்ட தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வின் நோக்கமே விரிந்து அவர்களுடைய உள்ளம் விசாலமாகி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்தத் தொழிலாளர் காங்கிரஸ் மகாநாட்டில் கலந்து கொண்ட தொழிலாளி பழைய தொழிலாளியே அல்ல; புதுக் கருத்துக்களை உடைய புதிய மனிதர்தான்!

கடைசியாக ஒரு விஷயம். சாதாரணமாகத் தொழிற் சங்கத்துக்கு ஒரு பெரிய கேடு உண்டு. "தொழிற் சங்கத்தை நடத்துகிறோம்; தொழிலாளர்களுக்காக உயிரை விடுகிறோம்" என்று வெளியிலிருந்து சிலர் முன் வந்து தொழிற் சங்கத்தில் சேர்ந்து கொள்வார்கள். ஏழைத் தொழிலாளிகள் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுத் தேடி, தங்கள் வயிற்றைக் கட்டி

பீத்துக் கொடுத்த சந்தாத் தொகையைச் "களவயம்" வைக்கத்தொடங்கி விடுவார்கள். இன்னும் சில சமயங்களில் தங்கள் சொந்த நலம் கருதித் தொழிலாளர்களுக்குத் துரோகம் செய்து விடுவார்கள்.

இலங்கைத் தொழிலாளர்கள் இது விஷயத்தில் மிக்க பாக்கியம் செய்தவர்கள். சுயநலம் அறவே அற்ற, தொழிலாளர்கள் நலத்துக்காகவே தம் வாழ்நாளைத் தியாகம் செய்த திரு தொண்டமான் போன்ற தலைவர்களைப் பெற்றிருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய பரிபூரண நம்பிக்கையையும் திரு தொண்டமான் பெற்றிருக்கிறார். திரு தொண்டமான் பெயரைச் சொல்லும் போதே தொழிலாளர்கள் முகம் மலருவதைக் கண்டேன். இவ்வளவு ஒற்றுமையுடனும் பரஸ்பர நம்பிக்கையுடனும் நடைபெறும் இலங்கைத் தொழிலாளர்கள் காங்கிரஸ் மூலமாக இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் மேன்மையடையப் போகிறார்கள் என்ற நம்பிக்கையுடன் திரும்பினேன்.

*** *** ***

நேயர்கள் இனி ஈழ நாட்டின் இதர பகுதிகளைச் சுற்றிப் பார்க்கத் தயாராக இருக்க வேண்டியது தான். நாளையதினம் காதல் நகரமான கண்டியில் உள்ள உலகப் புகழ் பெற்ற பெரதேனியா தோட்டத்துக்குப் போகலாம். இதோ கார் வந்து விட்டது. ஏறிக் கொள்ளுங்கள். (தொடரும்)

பேராசிரியர் ஞானமுத்து

சில வாரங்களுக்கு முன், 'மாதர் குல திலகங்கள்' வரிசையில் ஸ்ரீமதி பொன்னம்மாள் திரவியம் பிள்ளை அவர்களைப் பற்றிய குறிப்பு ஒன்று வெளியானது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். திருநெல்வேலி ம. தி. தா. இந்து கல்லூரிக்கு, அவர்களும், அவர்கள் கணவரான ஸ்ரீ திரவியம் பிள்ளையும் செய்த பண உதவியினால், அக் கல்லூரி நிலைபெற்றது என்ற விவரம் திருநெல்வேலிச் சீமையில் உள்ள அனைவருக்கும் தெரியும். அதுபோலவே இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன், அக் கல்லூரி பணக் கஷ்டத்தால் மூடப்படும் தறுவாயில் இருந்தபோது, தளராத ஊக்கத்துடன், சலியாத உழைப்புடன் கல்லூரியைக் கட்டிக் காத்தவர் ஒருவர். அவர் வீடு வீடாகச் சென்றார்; மாணவர் கோஷ்டியுடன், 'கல்விக்கு உதவுங்கள்' என்ற கொடியுடன், தெருத் தெருவாக அலைந்தார்; மக்களுடைய ஆதரவைத் திரட்டினார்; கூட உழைத்த ஆசிரியர்களுக்குப் புதிய திரத்தைத் தந்தார். கல்லூரி வறுமையால் வாடிய போதிலும், ஞானச் செல்வத்துக்கு அங்கே குறைவில்லை என்ற உண்மையை யாவரும் அறிய எடுத்துக் காட்டினார்.



வாழ்க நெல்வேலியின் இந்துக் கல்லூரி
வாழ்க கல்வி வளர்க்கும் செல்வக்குமரி

என்று மனமார வாழ்த்தினார்; வாழ்வதற்கு வழி வகுத்தார். வறுமைக் கடலில் அழுந்திக் கொண்டிருந்த கல்லூரி நிமிர்ந்து நின்றது. மாணவர் பெருகினர். ஆசிரியர் தளராது பணியாற்றினர். பழம் பெரும் கல்வி ஸ்தாபனம் ஒன்று புதிய உயிர் பெற்றது.

இந்தச் சாதனையை ஆற்றியவர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் அலெக்சாந்தர் ஞானமுத்து அவர்கள். அவருடைய கம்பீரமான தோற்றமும், ஆங்கிலப் புலமையும், கட்டுப்பாட்டில் அவருக்குள்ள உறுதியும், ஆயிரக் கணக்கான மாணவர்களுக்குக் கல்விச் செல்வத்தையும், ஒழுக்கத்தையும் அளித்துள்ளன. பல ஆண்டுகளாகச் சென்னை பல்கலைக் கழக சின்டிகேட்டில் உறுப்பினராக இருந்து உயர்தரக் கல்விக்கு மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வந்திருக்கிறார்.

இந்து கல்லூரியில் நீண்ட காலம் உழைத்த பிறகு அக் கல்லூரியை உருவாக்கிய மன நிறைவோடு அங்கிருந்து ஓய்வு பெறுகிறார். ஆனால் அவருடைய முதிர்ந்த அனுபவமும், திறமையும் வீணாகாமல், மக்களுக்கு இன்னும் கிடைக்கும்படி செய்வதற்கு, காரைக்குடி அழகப்பா கலைக்கல்லூரி முன் வந்துள்ளது. நெல்லை இந்து கல்லூரி முதல்வராகக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகள் பணியாற்றிய இப்பேராசிரியரை, காரைக்குடி கல்லூரி, அங்கே பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் இருப்பதற்கு வரவேற்றுள்ளது. திருநெல்வேலிச் சீமைக்கு இதுவரை கிடைத்து வந்த பேராசிரியர் பணி, இனி செட்டிமார் நாட்டுக்குப் பயன்தரப் போகிறது. பேராசிரியர், கல்லூரி முதல்வர் ஞானமுத்துவைப் பாராட்டுகிறோம். அவருடைய கல்விப் பணி இன்னும் சிறக்கும் என்று நம்புகிறோம்; சிறக்கவேண்டும் என்று அன்போடு வாழ்த்துகிறோம். ★★★

அமெரிக்காவில் தமிழ் ஏடு

வி. ஐ. சுப்பிரமணியம்

அமெரிக்க நாட்டில் நியூயார்க் மாகாணத்திலுள்ள கார்னல் சர்வகலாசாலைக்குள் நான் காலடி எடுத்து வைத்ததும், என் கண்ணில் முதலில் பட்டது, ஒரு தமிழ் ஏடு. சுமார் எண்ணாயிரம் மைலுக்கு அப்பால், தமிழே தெரியாத ஓர் ஊரில், தமிழ் ஏடு ஒன்றை மிகக் கவனத்துடன் பாதுகாக்கிறார்களே என்று எண்ண, என் மகிழ்ச்சிக்கு அளவில்லை. கதவில்லா கார்னல் சர்வகலாசாலையின் வாசலைக் கடந்து சென்றதும், மாணவர் யூனியன் கட்டடம் தென்படும். அதை அடுத்து, மிக உயர்ந்த மணிக்கூண்டு ஒன்று நிமிர்ந்து நிற்பதை அங்கு செல்லுகிறவர்கள் அனைவரும் பாராமல் இருக்க முடியாது. அந்த மணிக் கூண்டை ஒட்டிப் பெரிய நூல் நிலையம் ஒன்று இருக்கிறது. சாம்பல் நிறக் கல்லால் அகலமாகக் கட்டப்பட்டிருக்கும் அந்தக் கட்டடத்துக்குள் நுழைந்ததும், "அரிய புத்தகங்கள்" என்று தலைப்பிட்டுச் சில நூல்களைக் கண்ணாடி அறைக்குள் காட்சிக்கு வைத்திருப்பதைப் பார்க்கலாம்.

ஆண்டுதோறும் கல்லூரி தொடங்கும் சமயம், ஊருக்குப் புதியவர்களை அழைத்துக் கொண்டு பழைய மாணவர்கள், இடங்களைப் பரிச்சயம் செய்து வைப்பது இங்குள்ள ஒரு பழக்கம். இந்த வழக்கப்படி என் நண்பர் திரு நாயர், என்னை நூல் நிலையத்துக்குள் அழைத்துச் சென்றபோது, இந்த ஏட்டை அரிய புத்தகங்களின் கூட்டத்தில் கண்டேன். அதன் பக்கத்தில், "இது ஒரு தமிழ்ச் சோதிட ஏடு. பனை ஓலையில் எழுதப்பட்டிருக்கிறது" என்று டைப் அடித்த ஆங்கிலக்குறிப்பு ஒன்றும் இருந்தது. அந்த ஏட்டை உற்றுப் பார்த்ததும், சோதிட ஏடாக இருக்க முடியாது என்று எனக்குத் தோன்றியது. எனினும், ஊருக்குப் புதியவன் ஆகையால், அனுமதி கேட்டு அதைப் பிரித்துப் பார்க்கும் தைரியமும் நேரமும் எனக்கு அப்போது இல்லை. விரைந்து நடக்கும் என் நண்பரைப் பின்தொடர்ந்து அன்று அவருடன் ஓடிப் போக வேண்டியதாயிற்று.

சுமார் ஒன்பது மாதம் கெடுபிடியான வேலைக்குப் பின்னர், ஜூன் மாத ஆரம்பத்தில் இரண்டு வாரம் ஓய்வு கிடைத்தது. இந்த ஓய்வு நாட்களை ஏட்டில் ,செலவிடலாம் என்று, நூல் நிலைய அதிகாரியின் அறைக்குள் நுழைந்தேன். அவர் பின்னொரு சிப்பந்தியிடம் அனுப்பினர். அந்தச் சிப்பந்தி, பின்னொரு பெண் சிப்பந்தியிடம் அனுப்பினர். அந்தப் பெண்மணி, மிஸ் காபர், ஒரு முறை என்னை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "நீர் அந்த ஏட்டைக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்? சென்ற பத்து வருஷங்களாக இங்கே நான் வேலை செய்கிறேன். ஒருவராவது அந்த ஏட்டைப் பற்றிப் பேச வேண்டுமே! ஒருவரும் இல்லை. நீர் அதைப் படிக்கப் போகிறீரா? எனக்கு அந்த ஏட்டில் என்ன எழுதியிருக்கிறது என்று அறிய மிகவும் ஆசையாக இருக்கிறது" என்றாள்.

"ஏட்டைக் கண்டு பிடித்துத் தந்தால் முயல்கிறேன்" என்றேன்.

என் பதிலுக்குக் காத்திருக்காமல் என்னை அழைத்துக் கொண்டு அந்தப் பெண் நிலவறைக்குள் சென்று தேடினாள். சுமார் ஒன்றரை மணி நேரத்துக்குப் பிறகு ஒரு சிறிய தகரப் பெட்டிக்குள் இருந்த இந்த ஏட்டைக் கண்டுபிடித்து விட்டாள்.

"இந்தாருங்கள்! என்ன செய்யப் போகிறீர்கள், பார்ப்போம்" என்று சந்தேகப் பார்வையுடன் ஏட்டை என்னிடம் நீட்டினாள்.

கையடக்கம் உள்ள இந்த ஏட்டை அவிழ்த்ததும், "அல்லா துணை" "முகம்மது நபி காக்க" என்று வணக்கம் கூறும் சொற்களை முதல் ஓலையில் கண்டேன். இது எனக்குச் சிறிது வியப்பைத் தந்தது. கையெழுத்து தெளிவாக இருந்ததால் பக்கத்தில் அந்தப் பெண் நிற்பதையும் கவனியாது, எனக்கே சொந்தமான ஓர் நீண்ட ராகத்தில் பாடினேன். (இல்லை, படித்தேன்) சிறிது நேரம் நான் படித்ததும் என் பக்கத்தில் நின்ற மிஸ் காபர், எங்கோ பரபரப்புடன் ஓடுவதைக் கண்டேன். என் ராகத்தால் அவள் ஓடி விட்டாளா என்று எண்ணும்போது, பூதக்கண்ணாடி ஒன்றுடன் என் அருகில் வந்து, "இந்தாருங்கள்! இது உங்களுக்குப் படிக்க உதவும். முழுதும் படித்ததும் என்னிடம் வந்து சொல்லுங்கள்" என்று விடை பெற்றுச் சென்றாள். அவள் பிரிந்து செல்லும் போது அவள் முகத்தில் நம்பிக்கையும் உற்சாகமும் தென்பட்டன. தொடர்ந்து படித்தேன்.

முதல் நான்கு ஓலைகளைப் படித்ததும், இந்த ஏடு, ஓர் நூலின் பகுதியென்றும், அதன் பெயர் தாவு சீது மாலை யென்றும், ரவிகுல் என்ற



திரு வி. ஐ. சுப்பிரமணியம்




தமிழ் மொழியை ஒதுக்கிச் சிங்களத்தை மட்டும் ராஜாங்க பாஷையாக்கிய அரசாங்கத்திடம் ஆத்திரம் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை உதவி மந்திரி யொருவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பொழுது ஆயிரக்கணக்கில் ரயில்வே ஸ்டேஷனில் திரண்டிருந்து எதிர்ப்புக் கோஷங்கள் செய்து ஆர்ப்பரித்தார்கள். நடுத்தெருவில் படுத்து உதவி மந்திரி பேச முடியாதபடி தடுத்தவர்களைப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கலைக்க வேண்டியதாயிற்று. இலங்கை யாழ்ப்பாணம் ரயில்வே ஸ்டேஷன் வாசலில் திரண்டிருந்த கூட்டத்தை மேலே உள்ள படத்தில் காணலாம்.

வள்ளல் மீது பாடப்பட்டது என்றும் தெரியலானேன். இது ஓர் முஸ்லிம் பிரபந்தப் பகுதி என்று நான் முடிவுக்கு வரும் சமயம் இந்த ஏட்டின் ஐந்தாவது ஓலை முதல், நோய் வகைகளைப் பற்றியும் அவற்றை மாற்றும் மந்திரம் மருந்து ஆகியவை பற்றியும் பேசப் படுவதைக் கண்டேன். இந்தப் பகுதியின் முன் பாகம், நபிக்கு வணக்கம் கூறும் பகுதியைப் போலவே எழுதப் பட்டிருந்தது. ஆனால் அதன் பின் பகுதியில் பல வேறு கையெழுத்துக்கள் காணப்பட்டன. கடைசிப் பகுதி கரி தீட்டாமல் சற்று முன் எழுதப்பட்டது போல் தென்பட்டது. 'யார் இந்தப் பகுதிகளின் ஆசிரியர்?' என்று அறிய எவ்விதக் குறிப்பும் அந்த ஏட்டில் இல்லை. எந்த வருஷம் எழுதப் பட்டது என்று அறியவும் சான்றில்லை. எழுத்து வடிவதனை ஆதாரமாகக் கொண்டு கால வரம்பை நிர்ணயம் செய்தால், இந்த ஏடு சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன் போகாது என்று துணிந்து சொல்லலாம். இந்த ஏடு முஸ்லிம் ஒருவரால், இரண்டு நூற்களில் இருந்து பிரதி செய்யப்பட்டிருக்கலாம்.

நோய்களைப் பற்றிய பின் பகுதியில் மந்திர வகைகளும், மருந்து வகைகளும் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. நோய்களில் பெரும்பாலானவையும் குழந்தைப் பேறு பற்றியன. மார்பு வீக்கம், அரைக்கட்டு, மாத விடாய் கோளாறு முதலியவற்றின் விவரணமும் காணப்படுகின்றன. பிள்ளை இல்லாதவர்களைப் பிடித்து இருக்கும் பிசாசுகளை விரட்டும் மந்திர சக்கிரம், பிள்ளை பெற மந்திர சக்கிரம், மனைவியிடம் கணவன் மாறாத காதல் கொள்வதற்கு மந்திர சக்கிரம், பாம்பு விஷ நீக்கு மந்திரம் முதலியவையும் இந்தப் பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பகுதியில் இந்த மந்திரங்களில் முருகன், சிவன், கணபதி முதலிய தெய்வங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இதனால் முஸ்லிம் ஒருவர் இந்த ஏட்டைப் பிரதி செய்திருக்க முடியாது என்று நினைக்கலாம். வட இந்தியாவைப் போல் தென் இந்தியாவில் இந்து முஸ்லிம் சண்டையில்லை. முஸ்லிம்கள் இந்துக்களின் மந்திர முறைகளைக் கையாள்வது இன்றும் தென்னாட்டில் நடைபெறுகிறது. இதனால், மத வேறுபாடு காரணமாக முஸ்லிம் ஒருவர் எழுதியிருக்க முடியாது என்று நினைப்பது தவறு.

கார்னல் சர்வகலாசாலை ஏடு சின்னதாக ஏடு. ஆறு அங்குல நீளமும் ஒரு அங்குல அகலமும் நூற்றிரண்டு ஓலைகளையும் உடைய இந்த ஏடு எவ்விதச் சேதமும் இல்லாமல் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதனை 1906ம் வருஷம் நூல் நிலையம் வாங்கியதாக ஏடுகளைப் பற்றிய பழைய பட்டிகை ஒன்று கூறுகிறது. யாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்ற விவரமோ, அவர் எங்ஙனம் இந்தியாவில் பெற்றார் என்ற செய்தியோ இல்லை.

பிரிட்டிஷ் காட்சிச்சாலையிலும், ஐரோப்பிய நூல் நிலையங்கள் பலவற்றிலும் பல நூறு தமிழ் ஏடுகள் இருக்கும் செய்தி, நாம் முன்பே அறிந்ததுதான். அமெரிக்காவில், வாஷிங்டன் நகரில் இருக்கும் லைப்ரரி ஆவ் காங்கிரஸிலும், சிக்காகோவில் இருக்கும் நியூபெரி நூல் நிலையத்திலுள்ள நெப்போலியனின் பேரனிடம் இருந்து வாங்கப்பெற்ற சிம்க்கலைப் புத்தகசாலையிலும், கார்னல் சர்வகலாசாலையிலும் தமிழ் ஏடுகள் இருக்கின்றன. கார்னலில் உள்ள மற்றுள்ள ஏடுகள் சமஸ்கிருதத்திலும் ஒரிய மொழியிலும் எழுதப் பட்டிருக்கின்றன. அடுத்த முறை சிக்காகோவுக்கும், வாஷிங்டனுக்கும் போகும் போது அங்குள்ள நூல் நிலையங்களில் என்ன என்ன தமிழ் ஏடுகள் இருக்கின்றன என்று கவனமாகப் பார்த்து ஆராய்ச்சி செய்வதற்கு ஓய்வு கிடைக்கும் என்று நம்புகிறேன்.



20. சுருக்கத்தில்

"அட, என்ன! விஷயத்தைச் சொன்னால் சுருக்கமாகச் சொல்லு வீரா, பெரிய ராமாயணமா வளர்த்திக்கிட்டே போகிறீரே!"

"சொல்ல வேண்டியதைச் சொல்லித்தானே ஆகவேணும்? சுருக்கமாகச் சொல்லிப் புரியாமல் போனால், சொல்லித்தான் என்ன பிரயோஜனம்?"

"புரியும்படியா சொல்கிறேண்டா பேர்வழின்னு வளர்த்தி வளர்த்திச் சொல்லி, இடையில் கிளைக் கதைகளைப் புகுத்தி — மாளாத பாரதமாக்கிட்டீரானால், புத்தி குழம்பிப் போய்விடுமல்ல....?"

மாளாத பாரதம் என்றதும் நினைவுக்கு வருகிறது.

"வில்லியின் பாரதமும் வியாசனின் வேதமும்
வால்மீகியின் காவ்யமும்
சொல்லினும் மாளவை தொண்டரின்தொண்ட
தொல்வினைகள் மாளாதவை..." [னென்

"சரியாய்ப் போச்சு? வேதாந்தத்தில் பாய்ந்து விட்டீரா?"

"இல்லை ஐயா! உங்களிடம் வேதாந்தத்தைச் சொல்ல எனக்கென்ன புத்திக் கோளாறு?"

"ஏன்? எனக்குத்தான் வேதாந்தமெல்லாம் தெரியுமே என்று அல்லது இதற்கு மேல் என் மூளையில் ஏறாது என்று?"

"எப்படி வேணுமானாலும் இருக்கட்டும். உங்களிஷ்டப்படி தீர்மானித்துக் கொள்ளுங்கள். அந்த உரிமையை நான் மறுக்கப் போவதில்லை. ஆனால் நான் வேதாந்தம் சொல்ல வரவில்லை. வைத்தியத்தைத்தான் சொல்ல வந்தேன். அதைத்தான் இத்தனை நாட்களாகச் சொல்லி வந்தேன். இப்போதும் சொல்லப் போகிறேன்."

ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளல் அவசியம். ஆரோக்கியமானாலும் அனாரோக்கியமானாலும் உடலை மட்டும் சம்பந்தித்ததாகாது. மனிதன் என்பான் உடல், மனம், உயிர் ஆகிய மூன்றும் ஒன்றென ஒன்றிய நிலையைப் பெற்றவனாவான். இம் மூன்றும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதால் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ள வகுத்திடும் திட்டம் இம்மூன்று தத்துவங்களுக்கும் இதமானதாகத்தான் இருக்க வேண்டும். இதற்காக ஆகாரம், இதில் பானமும் சேரும், ஓய்வு உறக்கம்-ஒழுக்கம் இவற்றில் சில கட்டு திட்ட நியமங்கள் அவசியம். இவற்றில் ஆகாரம் பானம், ஓய்வு, உறக்கம் என்பவை பருவ பேதங்களை உத்தேசித்துச் சிறு மாறுபாட்டிற்கு உட்படல் வேணும். ஒழுக்கம் என்பது என்றும் ஒரே சீராக இருத்தல் அவசியம். இவ் விஷயமாக விளக்கியவை நமது சாஸ்திரங்களில் ஒரு பிரதானமான பாகமாகும். இவற்றையெல்லாம் மிகவும் சுருக்கமாகவும் விளக்கக் குறைவின்றியும் சொல்லி விட்டேன்.

இரண்டாவது விஷயம் நோய்க்கிடங் கொடாமை. ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்வதும், நோய்க்கிடங் கொடாமலிருப்பதும் வெவ்வேறு? என்ற சந்தேகம் எழலாம். இதற்கு விடையளிக்க ஒரு உதாரணம் சொல்கிறேன்.

ஒரு நாட்டின் பாதுகாப்புக்காக நிறுவப்படும் ஒரு திட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இதில் உள்நாட்டில் கலவரங்கள் ஏற்படாமல் அமைதியை நிலை நாட்டி மக்களின் நல்வாழ்வுக்குப் பாதுகாப்பளிக்கும் பகுதி யொன்று. வெளி நாடுகள் படையெடுப்பு ஏற்படுமானால் அதைத் தடுத்துச் சமாளித்திட முன் ஜாக்கிரதையுடன் இருக்கும் பகுதி மற்றொன்று. 'பாதுகாப்பு' என்பது ஒன்றேயாயினும் இத் திட்டத்தில் இரு பிரிவினைகள் இருப்பதை மறுக்க முடியுமா? ஏறத்தாழ இதைப் போலவே தான் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வகுக்கப்பட வேண்டிய திட்டமும். முதல் பிரிவைத்தான் ஆரோக்கியப் பாதுகாப்பு அல்லது "காப்பு" என்னும் தலைப்பின் கீழ் நமது தமிழ்ச் சித்தர் நூல்கள் விளக்குகின்றன. இரண்டாவது பிரிவான "நோய்க்கிடங்கொடேல்" என்பதைச் சரீர சம்பந்தமான வேகங்களைத் தடை செய்யக்கூடாது — நிர்ப்பந்தமாக அவற்றை வெளிப்படுத்தலுங் கூடாது. மற்றும் அவ்விதமே மனத்தின் வேகங்களை ஒருகாலும் கட்டவிழ்ந்து விடக்கூடாது என்றும் விளக்கியுள்ளார். இவ் விரு பிரிவுகளும் சேர்ந்து "காப்பு" என்னும் ஒரு திட்டமாகும்.

இவற்றையெல்லாம் விஸ்தாரமாகச் சொன்ன பிறகு நோய்கள் வருவதற்குள்ள காரணங்களை விளக்கி அவற்றுக்கு

அருள் வாக்கு

ஒரு பிரபுவிடம் இரண்டு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். ஒருவன் எப்பொழுதும் எதிரில் நின்றுகொண்டு பிரபுவை ஸ்தோத்திரம் பண்ணிக் கொண்டே இருக்கிறான். மற்றொருவன் பேசவே மாட்டான், எதிரில் வர மாட்டான். பிரபு எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று மனத்தில் நினைக்கிறாரோ அந்தக் காரியத்தைச் செய்வான். கிட்ட இருக்கிறவனிடத்தில்தான் பிரபுவுக்குப் பிரியம் என்று பொதுஜனங்கள் நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் வேலை செய்கிறவனிடந்தான் பிரபுவுக்குப் பிரியம் இருக்கும். அசடனாயிருந்தால் தான் ஸ்தோத்திரம் பண்ணுபவனிடத்தில் அதிகப் பிரியமாக இருப்பான். அவனைப்போல ஈசுவரன் அசட்டுப் பிரபுவாக இருந்தால் வெறும் ஸ்தோத்திரம் செய்பவனிடத்தில் அதிகப் பிரியமாக இருப்பான்.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடிபீடம்

இடம் கொடாமல் இருக்க நாம் முயற்சி செய்ய வேணுமென்ற அறிவை வற்புறுத்தியும் உள்ளார் நம் தமிழ்ச் சித்தர்கள்.

"நோயினுற் பத்திகேள்
... .
நோயாளி யென்பதறு!
நோயாளி முன்னே
நோய்கள்வினை ; காதாமு
நோய்கள் வரவேது
நோ்ணுமை யாக்;வேதுனி
நோனுத பசியால் ;
நோனுத நீர்பருகல்
... ..." என்றும்

"ஓைத்நினைத்க பாரந்தி ஓலே
ஓவாத வுரையாற் ......
... ...
... ..." என்றும்

தேரையர் கரிசல் என்னும் நூலில் கோடை மழைக்கொப்ப இடி, மண் காற்று, மின்னல் — சரமாரி போன்ற பிரளய மழையாய்ப் பொழிந்துள்ளார்.

இவற்றையும் தொடர்ந்து இதைச் செய்யோம் அதைச் செய்வோம் என்று நீண்டதொரு நெறியை அடுக்கிக் கடைசியாக "நமனார்க்கிங் கேது கவை" என்று சவால் விடும் அழகைப் புகழ்வதா? அத் திட்டத்தைக் கடைப்பிடித்தலின் பயனை அனுபவபூர்வமாக அறிந்ததால் தெளிந்த அசைக்க முடியாத முடிவைப் புகழ்வதா? இவவாறு, விளக்கிச் சொல்லிப் பிறகு சுருங்கச் சொல்லி, மறுபடியும் வலியுறுத்திச் சொல்லி — சொல்லி சொல்லி முடியாத நிலையை அனுபவித்துள்ளார் நம் முன்னோர். உபதேசம் செய்யவே பிறந்த இவர்களே இப்பாடு பட்டாரென்றால், என்னைப் போலும். உம்....இல்லை இல்லை. என்னைப் போல் உள்ளவர் என்ன செய்வார்? நானும் சொல்கிறேன், எழுதுகிறேன் என்பது, "தடியெடுத்தவன் எல்லாம் தலையாரி" என்ற பழமொழிக்கு எடுத்துக்காட்டான செயலாகும். எனினும் நிர்ப்பயமாக நானும் சொல்கிறேன்; சொன்னதையெல்லாம் திருப்பிச் சுருக்கத்தில் சொல்வதானால்.

என் (தேக, மனோ) நிலை எப்படி இருக்கிறது? எனது வாழ்நாட்கள் எவ்விதம் செல்கின்றன? துக்கம் (உடல் நலிவுற்றலாலோ — மனோ நிலை கெடுவதாலோ) வராமலிருக்க நான் என்ன முயற்சிகள் எடுக்க வேண்டும்? எதைத் தவிர்க்க வேண்டும்? எனினும் விசாரணைகளில் விழிப்புடன் இருத்தல் அவசியம்.

மனமறியத் தீமை செய்வதைத் தவிர்த்தல்; நமது இந்திரியங்களுக்கு நாம் அடிமையாகாமல் அவற்றைக் கட்டுத் திட்டத்தில் நமக்குக் குற்றேவல் புரியும் நிலையில் அடக்கி வைத்திருத்தல்; ஒருகால் பிழைத்ததால் ஏற்பட்ட துக்கத்தை மறவாமல் நினைவில் வைத்து, மறுமுறை அதே பிழையைச் செய்யாமல் இருத்தல்; தேசத்தின் தன்மை, காலத்தின் நிலை, தன்னுடல் மனங்களின் நிலைமை ஆகியவற்றை நன்கறிந்து இருத்தல்; 'ஸத்விருத்தம்' என்னும் நல்லோர் வழியையே தினசரி அனுசரித்திடல் என்னும் திட்டத்தைக் கடைப்பிடித்து வாழ்வோனுக்கு ஒருவித சுகவீனமும் வராது; ஒருகால் வந்து விட்டால், அவையும் குணமாகி விடும்.

ஈரம் மிக்க நெஞ்சம்; கைம்மாறு வேண்டாது தான் செய்யும் ஒவ்வொன்றும் ஈசனின் திருப்பணி என்று எண்ணி நிற்கும் மனோ நிலையும்; மனோ வாக் காயங்களில் மிளிரும் அடக்கமும்; பிறன் பொருளிலும் தன் பொருளிலுள்ளமாதிரி அக்கறை உள்ள மனமும் பெற்றிருத்தல் தான் ஸத்விருத்தம் எனப்படுவது.

தினமும் இதமான ஆகாரங்களை ஏற்றல்; இதமான செயல்களையே புரிதல்; அவற்றையும் செய்யும் முன்பு நன்றாக எண்ணித் துணிதல்; இந்திரியங்களின் போகங்களில் பற்றற்றிருத்தல்; எல்லோரிடத்தும் ஸம புத்தியுடன் ஓர் குலம் என்று எண்ணி ஒன்றி நடந்திடல்; உண்மையையே கவசமாகப் பூண்டு பொறுமைக்குப் புகலிடமாயிருத்தல்; ஆப்த நண்பர்களுக்கு அனுசரணையாக இருத்தலென்னும் குணங்கள் உள்ளவன் என்றும் ஆரோக்கியமாய் வாழ்வான்.

குளுமையளிக்கும் பானத்திற்கு இதை உபயோகித்துப் பாருங்கள்!

'ஓவல்டின்' புத்துணர்ச்சியூட்டும் ஓர் அற்புதமான குளிர்ந்த பானமாகிறது! குளிர்ந்த பாலிலோ அல்லது ஜலம் சேர்த்துக்கொண்ட பாலிலோ 'ஓவல்டின்'னைச் சேர்த்து அது பூராவும் கரையும் வரை நன்றாகக் கலக்கவும்.




இதோ, குளிர்ச்சியளிக்கும் அலாதியான ஒரு ருசிமிக்க பானம் — 'ஓவல்டின்'னின் நல்ல தன்மையும், பரிசுத்த உணவுப் பொருள்கள் மற்றும் முக்கியமான வைடமின்களும் கொஞ்சமும் மாறுபடாமல் நிறைந்து விளங்கும் அரிய பானம் உங்களுக்குக் கிடைக்கிறது!

சிற்றுணவு மற்றும் ஊட்டம் இவை ஒருங்கே அமைந்த இனிமையான பானமாக குளிர்ந்த 'ஓவல்டின்'னை வழங்கவும்.

ரேடியோ சிலோன் ஓவல்டின் அமெச்சூர் நேரங்களைக் கேளுங்கள். (அலை 41.72 மீட்டர்கள்) சனிக்கிழமைகளில் இரவு 8 முதல் 8.30 மணி வரை. (அலை வேகம்-9520 கிலோசைக்கிள், 31 மீட்டர்கள்) ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 8 முதல் 8.30 மணி வரை.

பிரதியொரு தினமும் ஆரோக்கியமயமான

ஓ வ ல் டி ன்



விநியோகஸ்தர்கள்:
கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.

IV. 60I



7

துறவிகளுக்கு விதிக்கப்பட்ட தியான ஜப முறைகளை நான் கையாளும்போது, என்ன காரணமோ தெரியவில்லை, என் உள்ளம் வறண்டு போகிறது. அந்த ஜபத்திலும் தியானத்திலும் நான் சரியான பலன் அடைவதில்லை. தினசரிப் பணிகளைச் செய்யும் காலத்தில் தான் ஆண்டவனுடைய சங்கமத்தை நன்றாக அடைகிறேன்.

சிலர் கஷ்டமான விரதங்களும் பூஜைகளும் செய்கிறார்கள். ஆனால் ஆண்டவனுக்குச் செலுத்த வேண்டிய அன்பை மறந்து விடுகிறார்கள். பகவான் விரும்புவது நமது அன்பு. அது இல்லாமற் போனால் எந்த விரதமும், பூஜை கிரியையும் பயனற்றுப் போகிறது.

படிப்பினால் அடைந்த சாஸ்திர ஞானம் நமக்கு ஆண்டவனுடைய தரிசனத்தைத் தராது. உள்ளத்தில் காதல் பொங்க வேண்டும். அவனல்லது வேறொன்றும் எனக்கு வேண்டாம், அவனைக் காண்பதே என் உயிருக்கு அமுதம் என்று உள்ளத்தில் ஆசை பொங்க வேண்டும்.

ஆண்டவனிடம் நம்மைக் கொண்டு போய்ச் சேர்க்காத எந்தப் பொருளையும் காரியத்தையும் ஒரே அடியாக விட்டு விடுவதே துறவு. அப்படித் துறந்து விட்டால் ஆண்டவனை மனத்தில் இடைவிடாமல் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். இது வெறும் பேச்சோ, மிகைப் படுத்திச் சொல்வதோ அல்ல. பகவான் நம் அண்டையிலேயே இருக்கிறான். எந்த நிமிஷமும் அவனை நாடி, அவன் உதவியையும் உறவையும் பெறலாம். உள்ளத்தில் ஏதேனும் சந்தேகம் எழுந்தபோது உன் திருவுளம் என்னவோ என்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

அவன் திருவுள்ளம் என்னவென்று அறிந்தபின் சந்தோஷமாக அதைச் செய்யலாம். 'இது உன் காரியம், இதன் பயன் உனது' என்று எதையும் ஆரம்பிக்க வேண்டும். முடிந்தபின் உன்னருளால் நடந்தது என்று அவனுக்கு அர்ப்பணம் செய்துவிட வேண்டும்.

முக்திக்காகச் செய்ய வேண்டிய கிரியையோ கர்மமோ வேறே கிடையாது. நமக்காக நாம் செய்யும் தினசரி காரியங்களை யெல்லாம் அவனுக்கு என்று அவனை எண்ணிச் செய்வதே முக்திக்கு மார்க்கம். பக்தி செய்வது என்று ஆரம்பித்து, அதற்காகச் சில தனிக் கிரியைகளை அமைத்துக் கொண்டு பக்தியை மறந்துவிட்டு அந்தக் கிரியைகளில் கவனத்தைச் செலுத்தி வருகிறார்கள். அவற்றையும் சரியாகச் செய்ய முடியாமல் போகிறது. இது வருந்தத் தக்கது. மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவோ, அவர்களுடைய நன்மதிப்பை அடைவதற்காகவோ எந்தக் கிரியையும் செய்ய வேண்டியதில்லை. சாதாரண வாழ்க்கை அலுவல்களையே ஆண்டவனுடைய பிரீதிக்காக, பக்தி செலுத்திச் செய்தோமானால் அதுவே பகவானை அடையும் வழி. இது என்னுடைய அனுபவத்தில் கண்ட உண்மை. சந்தேகமே கிடையாது.

மாலவல்லியின் தியாகம்



அத்தியாயம் 26

சுகேசியின் கதை

“நான்கூட அப்படித்தான் நினைத்தேன். துறவி நிலையிலுள்ள தங்களைப் போன்றவர்களின் வாழ்க்கையில் இம்மாதிரி சிறு பந்தங்களும் ஏற்படுவதற்குக் காரணம் இருக்குமானால் அது ஏதோ கருணையின் காரணமாகத்தானே இருக்க வேண்டும்?” என்று கேட்டார் சந்தகர்.

“அப்படித்தான். எங்கு ஜீவ ஹிம்சை ஏற்படுகிறதோ அங்கு அதைத் தன் உயிரைக் கொடுத்தேனும் தடுப்பதுதான் அர்ஹதர்களின் முக்கியமான கொள்கையாகிறது. ஜீவன்களிடம் பேரன்பு காட்டிக் காப்பாற்றுவதைவிடத் தவம் வேறில்லை என்பதைத்தான் ஜைன சமயமும் வற்புறுத்துகிறது. நான் சோழ நாட்டில் திருப்புறம்பயத்துக்குச் சமீபமாக இருந்த சமயத்தில் அங்கு சுடுகாட்டில் காபாலிகன் ஒருவன் காளிக்குத் தினந்தோறும் உயிர்களைப் பலி யிடுவதாக அறிந்தேன். அதைத் தடுத்து அந்த ஜீவனைக் காப்பாற்ற முயற்சி எடுத்துக் கொள்ள என்னால் முடியாது போயிற்று. எப்படியாவது அவனிடமிருந்து ஒரு ஜீவனையாவது காப்பாற்றினால் தான் மனம் ஆறுதலடையும் எனத் தோன்றியது. ஒருநாள் இரவு ஐந்தாறு வயதுடைய ஒரு சிறுமியைக் கொண்டு வந்து காளிக்குப் பலியிட அவன் முயற்சி செய்தான். அங்கு ஒளிந்து கொண்டிருந்த நான் அவனுடைய முயற்சியைத் தடுத்துச் சிறுமியைக் காப்பாற்றலாம் என்றெண்ணி இருந்தேன். அவன் அச்சிறுமியை அங்கிருந்த ஒரு மரத்தில் பிணைத்துக் கட்டி விட்டுப் பூசைக்குரிய சாமான்களைச் சேகரிப்பதற்காகச் சென்றான். அந்தச் சமயத்தில் மரத்தோடு பிணைக்கப்பட்டிருந்த அந்தச் சிறுமியை விடுவித்து அவளைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்து விட்டேன். அந்தக் குழந்தையை விசாரித்து அவள் பெற்றோர்களைப் பற்றி அறிந்து கொண்டு அவர்களிடம் குழந்தையை ஒப்படைத்து விடலாம் என்று நினைத்து அவளை விசாரித்ததில் ‘அப்பா, அம்மா’ என்பதைத் தவிர வேறு விவரம் எதுவும் சொல்லத் தெரியவில்லை. அதிலிருந்து அந்தக் குழந்தையை வளர்க்கும் பொறுப்பு எனக்கு வந்து விட்டது. அவளுக்கு உரிய கல்வியைப் போதித்து அவளை ஒரு சிறந்த பெண்ணாக இன்று வரையில் வளர்த்து விட்டேன். உலகத்தில் எந்த பந்தத்திலும் கட்டுப்படாத எனக்கு இச் சிறிய பந்தம் மிகுந்த மன வியாகூலத்தை அளிக்கிறது. உலகத்தில் ஒரு ஜீவனைக் காப்பாற்றுவதே ஒரு பெரும் பொறுப்பாக இருக்கிறது. சிறு குழந்தைப் பருவத்தில் அவளுக்குச் சிறு இன்னல் சூழ்ந்தது போல் கன்னிப் பருவத்தில் வளர்ந்து நிற்கும் அவள் உயிருக்கு நேற்றும் ஒரு இன்னல் சூழ்ந்தது. இவ்வளவு நாட்களும் கவலையோடு பல கிராமங்களிடையே அவளைக்

கி. ரா. கோபாலன்

காப்பாற்றியதும் மறுபடியும் அவளுடைய ஜீவனுக்கு ஆபத்து நேர்ந்திருப்பதைக் கண்டு என் மனம் பொறுக்கவில்லை. மூர்க்கர்கள் கையிலிருந்து அவளைப் பாதுகாக்க எவ்வளவோ பாடுபட்டேன். முடியவில்லை. நல்ல சமயத்தில் நீங்கள் இருவரும் அவளைக் காப்பாற்றவும் என் மனத்துக்கு நிம்மதி ஏற்படுத்தவும் தெய்வம் போல வந்தீர்கள். நீங்கள் வந்திராவிட்டால் அவள் இறந்திருப்பாள். என் ஜீவனை நானும் போக்கிக் கொண்டிருப்பேன். இனிமேல் என்னுடைய கவலையெல்லாம் அவளை ஒரு நல்ல இடத்தில் ஒப்படைக்க வேண்டும் என்பதுதான். நல்ல சுபாவம் உள்ளவர் களாகத் தோன்றும் நீங்கள் இவ்விஷயத்தில் ஏதேனும் உபகாரம் செய்யக் கூடுமானால் மிக்க சந்தோஷமுடையவளாக இருப்பேன்" என்றூர்.

சந்தகர் பிரதிவிபதியின் முகத்தைப் பார்த்தார். பிரதிவிபதி சந்தகரின் முகத்தைப் பார்த்தான். "இப்படி பட்ட அழகும் குணமும் நிறைந்த பெண்ணை ஏற்றுக் கொள்ள ... நல்ல மனிதர்கள் இல்லாமல் போய் விட மாட்டார்கள். நீங்கள் இந்த பொறுப்பை இந்த வாலிபரிடம் ஒப் படைப்பதை விட சிறந்த மார்க்கம் வேறொன்றுமில்லை" என்றூர் சந்தகர் பிரதிவிபதியைச் சுட்டிக் காட்டி.

பிரதிவிபதி சந்தகர் ... மனதில் வைத்துக் கொண்டு இ... என்பதை உணர்ந்து ... இருப்பினும் அழகும் குண... அந்தப்பெண்ணின் வாழ்... செய்யும் பொறுப்பைத் ... கொள்வதில் பிசகில்லை ... குப் பட்டது. அரச குமார... மனம் வைத்தால் அப்... சிறப்புமாக ஒரு நல்ல ...



ருக்கு மணம் செய்து வைத்துவிட முடியாதா? அவன் ஜைன முனிவருக்கு ஆறுதல் சொல்லும் தோரணையாக, "நீங்கள் கவலைப் படாதீர்கள். அப்பெண்ணைப் பற்றிய கவலையை எனக்கு விட்டுவிடுங்கள். நாங்கள் இப்பொழுது காஞ்சிபுரம் செல்கிறோம். அங்கே எங்களுக்கு உள்ள காரியங்களை முடித்துக் கொண்டு திரும்பும்போது இந்தப் பெண்ணை நான் அழைத்துப் போகிறேன். அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்றான்.

"இவ்வளவு தயாள குணம் பொருந்திய உனக்கு என் ஆசீர்வாதம். உன்னைப் பற்றிய விருத்தாந்தங்கள் எனக்கொன்றும் தெரியாது. இருப்பினும் நான் அருமையாக வளர்த்த சுகேசியை ஒரு நல்ல மனிதர் கையில் தான் ஒப்படைத்தோம் என்ற தைரியம் என் மனத்தில் ஏற்பட்டு விட்டது. அதிலும் ஒரு ஜைன சம்பிரதாயக்காரன் கையில்தான் ஒப்படைத்தோம் என்பது மன ஆறுதலை அளிக்கிறது. உன்னோடு பழகியதிலிருந்து நீ வாக்குறுதி தவறமாட்டாய் என்றே நம்புகிறேன். நீ யார்? உன் பெயரென்ன என்பதை இனிமேலாவது தெரிந்து கொள்ள ஆசைப் படுகிறேன்...." என்றார் அரிஷ்டநேமி.

பிரதிவிபதி தான் யார் என்ற உண்மையைச் சொல்லி முனிவரைத் திகைப்படையச் செய்ய விரும்பவில்லை. அந்த மகானிடம் பொய் சொல்வதும் பெரிய அபசாரம்தான். இருப்பினும் அந்தச் சமயத்தில் அவன் தன்னை யாரென்று காட்டிக் கொள்ள விரும்பவில்லை யாதலால் பொய் சொல்லத்தான் வேண்டியிருந்தது. அவன் பணிவான குரலில், "நான் கங்கபாடியைச் சேர்ந்தவன். என் பெயர் வீரவிடங்கன், ஒரு போர்வீரன்" என்று கூறினான்.

"போர்வீரன்தான், ஆனால் சாதாரணப் போர் வீரனில்லை, ஒருகாலத்தில் தேசத்தையே கட்டியாளும் யோக்கியதை நிறைந்த போர்வீரன். அவனைப் பற்றி யல்லவா கேட்டீர்கள்? நான் என்னைப் பற்றியும் உங்களிடம் சொல்லிக் கொள்ளுகிறேன். சோழ மண்டலத்தைச் சேர்ந்த கோடீச்சுவரத்திலுள்ள சோதிடன். சந்தகன் என்று என்னைச் சொல்லுவார்கள். நான் சாத்தன் சக்தி பூஜை செய்பவன். பராசக்தியே முழுமுதல் தெய்வமாகக் கொண்டு எல்லா மதத்தின் நல்ல கொள்கைகளையும் ஆதரிக்கக் கூடியவன். இந்தப் போர் வீரனின் ஜாதகம் என்னுடைய கையிலிருக்கிறது. நல்ல ராஜயோக ஜாதகம். ஒருகாலத்தில் இவன் அரியணை ஏறி ஒரு நாட்டை ஆளும் யோக்கியதை யடையப் போகிறான். இவனிடம் உங்கள் புத்திரியின் வாழ்வை ஒப்படைப்பது ஒரு பெரிய பாக்கியம்தான்" என்று சொன்னார் சந்தகர்.

மிகுந்த மன ஆறுதலைப் பிரதிபலிக்கும் மகிழ்ச்சி அந்த ஜைன முனிவரின் முகத்தில் தோன்றியது. "எல்லாம் அர்ஹத்பரமேஷ்டியின் பேரருள்தான்!" என்று கூறினார்.

அவர்கள் நெடுநேரம் வரையில் பேசிக் கொண்டிருந்ததால் இரவு நேரம் நகர்ந்து பொழுது விடியும் நேரத்துக்கு அறிகுறியாகக் கீழ் வானில் வெள்ளி எழுந்து மின்னியது. "எங்களால் உங்களது நித்திரையும் குலைந்து விட்டது. பொழுது விடியும் நேரம் நெருங்கி விட்டது. நீங்கள் இருவரும் இன்னும் சிறிது நேரம் தூங்கினால் காலைப் பிரயாணத்தின் போது களைப்பு தட்டாமல் இருக்கும்" என்றார் ஜைன முனிவர்.

"இன்னும் சிறிது நேரத்தில் பொழுது விடியப் போகிறது. பொழுது விடிந்தவுடன் நாங்கள் புறப்படப் போகிறோம். அதற்குள் தூக்கம் போடுவதினால் பலன் என்ன? காஞ்சிக்கு இங்கிருந்து பத்து கல் தூரம்தானே இருக்கும்? அதனால் எங்களுக்குச் சிரமம் ஏதும் ஏற்படப் போவதில்லை" என்றான் பிரதிவிபதி. அவன் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே கீழ்வானில் சூரிய கிரணங்களின் ஒளி எழுந்தது.

"உங்களை வெறும் வயிற்றோடு அனுப்ப எனக்கு விருப்பமில்லை. சமீபத்தில் உள்ள சுனையில் பல் தேய்த்துக் கைகால்களைக் கழுவிக் கொண்டு வாருங்கள். நான் கொஞ்சம் பழங்கள் தருகிறேன். அவைகளைச் சாப்பிட்டு விட்டுப் போகலாம்" என்றார் அந்த ஜைன முனிவர்.


அவ்விருவரும் அவருடைய வார்த்தையைத் தட்ட முடியாதவர்களாய்ச் சமீபத்திலுள்ள சுனைக்குச் சென்றனர். அவர்கள் சென்றதும் அம்முனிவர் குகைக்குள்ளிருந்த சுகேசியைக் கூப்பிட்டு "உன்னைப்பற்றிய கவலை எனக்கு அனேகமாகத் தீர்ந்து விட்டது. நீ செய்த அதிர்ஷ்டம்தான், ஒரு நல்ல வாலிபன் உனக்குக் கிடைத்து விட்டான். இங்கு வந்த இருவர்களில் யௌவனமாகவும் அழகாகவும் ஒரு வாலிபன் இருக்கிறானே, அவன்தான் உன் வாழ்க்கைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளச் சம்மதித்திருக்கிறான். உனக்கு நான் அதிகம் சொல்ல வேண்டாம். அவனுடைய அன்புக்குப் பாத்திரமாகி அவனுக்குப் பணிவிடை செய்வதில் பற்றுதலும் பக்தியும் கொண்டவளாகத் திகழ வேண்டும். அவன் கங்கபாடியைச் சேர்ந்தவனும்,

இப்பொழுது வாரந்தோறும்

பம்பாயிலிருந்து லண்டனுக்கு

4 ஸர்வீஸ்கள்





சௌகரியமாகச் சாய்ந்து செல்லும் "ஸ்லம்பரேட்" அல்லது "ஸ்லீப்பர்சேர்" அமைந்துள்ள "லக்ஷரி" முதல் வகுப்பு பி.ஓ.ஏ.ஸி. நான்கு எஞ்சினுள்ள கான்ஸ்டலேஷன் அல்லது க்வான்டாஸ் ஸூப்பர்-ஜி கான்ஸ்டலேஷன் மூலம் பறந்து செல்லுங்கள். விசாலமான காற்றழுத்தம் செய்யப்பட்ட காபின்கள். அற்புதமான உணவு மற்றும் மதுபான வகைகள். உங்கள் சுகத்தைப் பேணி செய்யும் ஸர்வீஸ்.

இத்துடன் குறைந்த டூரிஸ்ட்-வகுப்பு கட்டணம். குறைந்த செலவில் சுக போக பிரயாண வசதி. உன்னத இலவச சாப்பாடு. இரவும் பகலும் உங்களுக்குச் சுமுகமான சேவை. அதிகப்படியான செலவு யாதொன்றும் இல்லை.

இந்தியாவிலிருந்து புறப்படும் எமது எல்லா விமான ஸர்வீஸ்களிலும் முன் ஏற்பாட்டின்படி இந்திய உணவுகள் வழங்கப்படும்.

விவரங்களுக்கு உங்கள் ஊரிலுள்ள பிரயாண
ஏஜெண்டையோ அல்லது பி.ஓ.ஏ.ஸி. 35/4
மௌண்ட் ரோடு, மதராஸ்-2. போன் 85394-
இவர்களையோ கலந்து கொள்ளுங்கள்.

FLY BY B·O·A·C AND QANTAS

பி.ஓ.ஏ.ஸி. மற்றும் குவான்டாஸ் விமானம் மூலம் பறந்து செல்லுங்கள்

குவான்டாஸ் எம்பயர் ஏர்வேஸ் லிமிடெட்டுடன் சேர்ந்து
பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேஸ் கார்ப்பரேஷன்

ஜைன மதப் [பற்றுதல் உள்ளவளும். நீ மிகவும் புத்திசாலி. மனைவிக்குரிய தரும விதிகளை நான் உனக்கு உபதேசிக்க வேண்டாம். இருப்பினும் நீ கணவனுடன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று உனக்கு நான் சொல்லி இருக்கிறேன். உன் மனத்துக்கு அவனைப் பிடித்திருக்குமென்று நினைக்கிறேன். உன் மனத்துக்குப் பிடிக்காவிடில் அதையும் சொல்லி விடு'' என்றார்.

''தங்கள் ஆசீர்வாதம், எனக்குப் பூரண சம்மதம்தான்'' என்றாள் சுகேசி சிறிது வெட்கத்தோடு. அந்தச் சமயத்தில் கனிக்குச் சென்றிருந்த பிரதிவிபதியும் சந்தகரும் திரும்பி வந்து கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் முனிவர் சுகேசியைப் பார்த்து, ''இருவரையும் சிறிது ஆகாரம் செய்து கொண்டு போகும்படி வேண்டிக் கொண்டிருக்கிறேன். நீ அவர்களுக்காகக் கொஞ்சம் பழங்கள் கொண்டு வா!'' என்று கட்டளையிட்டார்.

பிரதிவிபதியும் சந்தகரும் அவ்விடத்துக்கு வந்ததும் அம்முனிவர் அவர்களை 'வாருங்கள்' என்றுஉபசரித்து அம் மலைக் குகைக்குள் அழைத்துச் சென்றார். வெளியே பார்த்தால் அது சிறிய மலையில் குடையப்பட்ட குகை போலத் தோன்றினாலும் உட்புறத்தே ஒரு சிறு கட்டடம் போல் காட்சியளித்தது. அந்த மலைப் பிரதேசத்திலுள்ள குன்றில் குடையப்பட்ட ஜைன ஆலயமும் அதையொட்டி ஜைன முனிவர்கள் வசிப்பதற்காகக் குடையப்பட்ட குகை போன்ற ஆசிரமங்களும் ஜைன மதத்தில் மிகவும் பற்றுள்ளவனாயிருந்த மகேந்திர பல்லவனால் நிர்மாணிக்கப்பட்டவை. அக்காலத்தில் சிறு சிறு குகைகளில் நூற்றுக்கணக்கான ஜைன சன்னியாசிகள் வசித்து வந்தார்கள். ஆனால் மகேந்திர பல்லவன் ஜைன மதத்திலிருந்து சைவ மதத்தைத் தழுவியதும் ஜைன மதத்தின் பலம் குன்றியது. அந்த மலைப் பிரதேசத்திலிருந்து முனிவர்கள் அந்த இடத்தை விட்டு அகன்றனர்.


பல வருடங்களுக்குப் பின் அங்குள்ள ஜைன ஆலயத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அரிஷ்டநேமி என்ற அந்த ஜைன முனிவர் மாத்திரம் அங்குள்ள குகையைத் தம்முடைய ஆசிரமமாக அமைத்துக் கொண்டு அங்குள்ள ஜைனாலயத்தையும் கவனித்து வரலாயினர். அவருக்கு உதவியாக அவருடைய வளர்ப்புப் பெண் சுகேசி இருந்தாள். அவர் அங்கு வசிக்க ஆரம்பித்த பின் அந்த இடத்துக்கும் ஒரு மகிமை ஏற்பட்டது. ஜைன சமயத்தைச் சேர்ந்த பலர் அவ்விடத்தை ஒரு புண்ணிய க்ஷேத்திரம் போல் எண்ணி அந்த முனிவரையும் அந்தக் கோயிலில் எழுந்தருளியுள்ள மூர்த்தியையும் தரிசித்து விட்டுப் போகலாயினர்.

வயதான அம் முனிவரும் அழகும் யௌவனமும் பொருந்திய அப் பெண்ணும் மனித சஞ்சாரமேயற்ற மலைப் பிரதேசத்தில் வசிப்பது பிரதிவிபதிக்குச் சிறிது ஆச்சரியத்தைத்தான் அளித்தது. ஒரு முனிவர் இங்கு இருப்பது தகுதியே. ஆனால் அழகு நிறைந்த ஒரு யௌவன நங்கை அப்படிப்பட்ட இடத்தில் எப்படி இருக்கிறாள்? வாழ்க்கையில் உலக இன்பசுகங்களில் ஆசை கொள்ளாமல் துறவு மார்க்கத்திலுள்ளவர்களுக்குச் சிசுருஷை செய்து வாழ்வை அடக்கமாக நடத்திக் கொண்டு போகும் பெண்ணைப் பற்றி என்ன சொல்வது? இப்படிப்பட்ட பெண்களும் உலகில் இருக்கிறார்களே யென்று எண்ணி அவன் மனம் சிறிது இளகியது. ''நீங்கள் மனித சஞ்சாரமே இல்லாத இந்த இடத்தில் எப்படி இருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''எங்களுக்குத் தகுதியான இடம் என்று கருதும் இடங்களில் இருப்பதில்

உலகில் முதல் இடம்

உலகத்தில் உள்ள மற்ற எந்த மிருகங்களையும்விட அதிக வேகமாக ஓடக்கூடியது பூனை வர்க்கத்தைச் சேர்ந்த சிறுத்தைதான். அதன் உடல் நீளமாகவும் கால்கள் மெல்லியவை யாகவும், ஆனால் மிகுந்த வலிமை பொருந்தியதாகவும் இருப்பதால் அது நிமிஷத்துக்கு ஒரு மைலுக்குமேல், அதாவது ஒரு மணிக்கு எழுபது மைல்கள் தூரம் ஓடக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. அதிக வேகமாக ஓடக்கூடிய



ஒரு வகை மான்கூட மணிக்கு அறுபது மைல்களுக்குமேல் ஓட முடிவதில்லை. குதிரையின் அதிகபட்ச வேகம் நாற்பத்துமூன்று மைல்களாகும். ஆப்பிரிக்காவில் உள்ள சில ஜாதியினர் சிறுத்தையின் தோலை உடையாக உடுத்திக் கொள்கிறார்கள். அது அதி வேகமாக ஓடும் அபூர்வ சக்தி பெற்றிருப்பதால். இந்தியாவில் பல்வேறு மிருகங்களையும் வேட்டையாடிப் பிடிப்பதற்குச் சிறுத்தைகளைப் பழக்கி உபயோகிக்கிறார்கள்.

எங்களுக்கு என்ன துன்பம் இருக்கப் போகிறது? நேற்று இரவு சில வஞ்சக நெஞ்சமுள்ள மனிதர்களால் ஏற்பட்ட துன்பத்தைத் தவிர இங்கு புலிகளும் பாம்புகளும் கூட எங்களுக்குத் தீமை நினைப்பதில்லை'' என்றார் அரிஷ்டநேமி.

''அப்படியென்றால் இங்கு புலிகளும் பாம்புகளும் அதிகமென்று சொல்லுங்கள்'' என்றார் சந்தகர்.

''அதிகம்தான். இவைகள் இன்னும் அதிகமானால் கூட அவைகளினால் கெடுதல் ஏதுமில்லை. ஒரு சில கொடூர புத்தியுள்ள மனிதர்கள் வாழும் ஜன சமூகத்தினிடையே வாழ்வதைவிட இங்கு வாழ்வது எவ்வளவோ மேலானது'' என்றார்.

''அது உண்மை'' என்ற சந்தகர் அவருடைய வார்த்தையை ஆமோதிப்பவர் போல் சொல்லி விட்டு, ''தங்களுடைய பூர்வீக ஸ்தலம் எதுவோ?'' என்று கேட்டார் பணிவாக.

''நானும் சோழ நாட்டைச் சேர்ந்த உறையூர் வாசிதான். சோழ மன்னர்களின் தலைநகராக விளங்கிய அவ்வூரின் பெருமை குறைந்தவுடன் இங்கு வந்தேன் நான். இன்று பாண்டியர் வசத்தில் இருக்கிறது அந்த நகரம்'' என்றார்.

அம் முனிவர் பூர்வாசிரமத்தில் சோழ நாட்டில் பிறந்து வளர்ந்தவர். அதிலும் மிகச் சிறந்த ஊராகிய உறையூரில் இருந்தவர் என்பதை அறிந்ததும் சந்தகருக்கு உள்ளத்தில் ஒரு உவகையும் அவரிடம் முன்னிலும் அதிகப் பற்றும் ஏற்பட்டன.

''நீங்கள் சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று கேட்டதும் என் மனம் பூரிப்பு அடைகிறது. தங்களைப் போன்றவர்களை ஈன்ற அந்நாடு மிகச் சிறப்புடையதுதான். என்றோ உலகெலாம் புகழ் பிரகாசித்த சோழவள நாடு இன்றுள்ள நிலையைப்பற்றி நினைத்துப் பார்த்தால் மிகவும் சங்கடத்துக்கு உள்ளாகத்தான் நேருகிறது. என் மனம் விட்டு இந்தத் துயரத்தை உங்களிடம் ஏன் சொல்லுகிறேனென்றால் நீங்களும் அப் பொன்னி பூமியில் பிறந்து வளர்ந்தவர்கள் என்பதால்தான். இன்று தெற்கிலும் வடக்கிலும் வெற்றிக் கொடி நாட்டி அரசாண்டு வரும் பாண்டியர்களும் பல்லவர்களும் தாழ்ந்தோர்கள் என்ற அர்த்தத்தில் நான் இதைச் சொல்லவில்லை. என்ன இருப்பினும் ஒரு வீட்டைச் சொந்தக்காரனே இருந்து பாதுகாப்பதிலும் மற்றவர்களிருந்து பாதுகாப்பதிலும் வித்தியாசமில்லையா? உலகெங்கும் காணமுடியாத பொன் விளைத்தால் பொன் விளையும் பூமியின் சிறப்பையும் அங்கு வசிக்கும் மக்களின் பூரண நலத்தையும் பாண்டியர்களோ, பல்லவர்களோ பரிவோடு நின்று கவனிக்க முடியவில்லை என்பதுதான் என் குறை. ஆதிபத்தியத்தைப் பெருக்கும் நோக்கத்திலேயே எப்பொழுதும் கவலை செலுத்தும் பாண்டியர்களும் பல்லவர்களும் சோழநாட்டு மக்களைப்பற்றி நினைக்கவே சந்தர்ப்பமில்லை. அதோடு மட்டுமில்லை. இவ்விரு நாட்டினரும் தங்கள் 'பலாபலங்களைக் காட்டிக்கொள்ளத் தகுந்த போர்க்களமாகத்தான் சோழ நாட்டைக் கருதுகின்றனர். பயிர் வளமும் கலைவளமும் செறிந்த அப்புண்ணிய பூமி இன்று இரத்த ஆறுகளையும் பிணக்குவியல்களையும் தாங்கும் இரணபூமியாகி விட்டது. இந்நாட்டில் பஞ்சமும் நோயும் இன்று 'வருகிறேன், நானே வந்து விடுவேன்' என்று எச்சரிக்கை செய்வதுபோல் காத்திருக்கின்றன....'' என்றார் சந்தகர்.

இதைக் கேட்டதும் அந்த ஜைன முனிவர் மிகத் துக்கமும் ஆத்திரமும் நிறைந்த குரலில், ''இதையெல்லாம் நான் உணர்கிறேன். உணர்ந்து என்ன பயன்? காலம் சுழல்கிறது. அதன் ஓட்டத்தில் எவ்வளவோ மாறுதல்கள். என்னைப் போலத் துறவற நோக்கம் கொண்டவர்கள் எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டவர்கள்; மறுபடியும் உலகச் சுழல்களைப் பற்றியும் நினைக்க அருகதை அற்றவர்கள். சோழ சாம்ராஜ்யத்தைப் பற்றி நினைத்தால் மனத்தில் ஒரு ஆதங்கம் ஏற்படுகிறது. ஆனால் என்னைப் போன்றவன் நினைக்க வேண்டிய சாம்ராஜ்யமேவேறு. உங்களைப் போன்ற வாலிபர்கள் தியாக புத்தியுள்ளவர்கள், வீரநெஞ்சு உள்ளவர்கள், மனஉத்வேகத்துடன் நாட்டுக்காக ஏதேனும் உங்கள் கடமை என்றெண்ணிச் செய்தால் அதை எண்ணித்தான் நான் சந்தோஷப்பட முடியும். அதற்குள்என் ஆசீர்வாதம்'' என்றார்.



அவர்கள் இப்படியே பேசிக் கொண்டிருக்கும்போது, சுகேசி சில பழ வகைகளைக் கொண்டு வந்து பிரதிவிபதியின் எதிரிலும் சந்தகரின் எதிரிலும் வைத்து விட்டுச் சற்று மறைவான இடத்தில் போய் ஒதுங்கி நின்றாள்.

பிரதிவிபதியும் சந்தகரும் தங்கள் எதிரே வைக்கப்பட்டிருந்த பழங்களை

எடுத்துச் சாப்பிடத் தொடங்கினார்கள். முனிவர் ஆவலோடு அவர்கள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். மறைவான இடத்தில் நின்ற சுகேசி ஆர்வமும் ஆவலும் நிறைந்தவளாய்ப் பிரதிவிபதியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். பாவம்! நேற்று இரவு போராட்டத்தில் சிக்கித் துடித்த அந்த உள்ளம், இன்று ஏதோ ஆனந்த சாகர அலைகளினடையே துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. அவள் வாழ்க்கையில் ஒரு புது எண்ணம், ஒரு புதிய கனவு, அதன்மீது எத்தனையெத்தனையோ கற்பனைக் கோட்டைகள் எழுந்தன. வாழ்நாள் முழுவதும் ஒரு துறவியின் பாதுகாப்பில் வளர்ந்த அவள் மனம் ஏதோ பெரிய கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை அடைந்து இன்ப வாழ்வில் சிறகடித்துப் பறக்கப் போகிறோம் என்ற நினைவில் திளைத்தது. அவள் உள்ளத்தில் ஆனந்தம் கரை புரண்டோடியது.



சந்தகர் பழங்களைச் சுவைத்துக் கொண்டே, ''நீங்கள் சொல்வதுபோல் என்னைப்போன்ற வாலிபர்கள் இந்நாட்டில் ஏற்படும் இன்னல்களைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதற்காக ஏதேனும் செய்ய முயல்கிறோம். ஏதோ ஒரு கனவு—கரிகாலனும் செங்கணானும் வாழ்ந்த பொன் நாட்களை நாங்கள் காணாவிட்டாலும் அவர்கள் சிறப்பும், அவர்கள் செய்த விந்தைகளும் எங்கள் மனத்தைவிட்டு அகலாமல் இருக்கின்றன. கடந்துபோன அப்புனிதநாட்களைப் போல் எங்கள் வாழ்நாளில் நாங்கள் முன்னாலோ பின்னாலோ காணாவிட்டாலும் எங்கள் சந்ததியாராவது கண்டு மகிழ வேண்டுமென்ற அடிப்படையில் தான் நாங்கள் இருக்கிறோம். இதோ இருக்கும் என் நண்பர் கங்க நாட்டைச் சேர்ந்தவர். பல்லவ மன்னருக்கு உற்ற துணையாளராக இருக்கும் இவருக்கு எங்களுடைய முயற்சிகள் பிடிக்காமல் இருக்கலாம். எங்கள் முயற்சியை பல்லவ சாம்ராஜ்யத்துக்கு எதிராகச் செய்யும் முயற்சியாகக் கூடக் கருதலாம். ஆனால் எங்கள் நாட்டுப் பற்று, எங்கள் நாட்டு மக்கள் உன்னதமான நிலையில் வாழ வேண்டுமென்ற ஆவல் இவைகள் எங்கள் மனத்தில் ஏற்படுவது சகஜம்தான் என்பதை அவர் உணர்ந்து கொள்ளாமலிருக்க மாட்டார்'' என்றார். பிரதிவீபதியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே இவ்வாறு சந்தகர் பேசினார்.


பிரதிவிபதி சிரித்தான். ''உங்கள் நாட்டுப் பற்றையோ உங்கள் மக்கள் உன்னத நிலையை யடைய வேண்டும் என்பதற்காக நீங்கள் செய்யும் காரியங்களையோ தகாது என்று நான் கருத மாட்டேன். அது ஒவ்வொரு நாட்டு மக்களிடமும் இயற்கையாக உள்ளது. இன்று சிதைந்துபோய்க்கிடக்கும் சோழ நாட்டை ஒன்றுபடுத்தி அதை ஒரு மன்னனின் ஆட்சிக் குள்ளாக்குவதை நான் என்றும் விரும்புகிறேன். எனக்கும் சோழ நாட்டின் பெருமை எத்தகையதென்று தெரியும். அதையாண்ட மன்னர்களின் பெருமையும் சாமர்த்தியமும் எத்தகையது என்பதையும் நான் அறிந்திருக்கிறேன். நான் ஒரு சாதாரணப் போர்வீரன். ராஜ விசுவாச முள்ளவன். என்னைப் போன்றவன், எங்கள் மன்னருக்கும், பல்லவ மன்னருக்கும் உள்ள நட்பையும் சம்பந்தத்தையும் அறியாமலிருக்க முடியாது. நாங்கள் பல்லவ சாம்ராஜ்யத்துக்குப் பாதகம் ஏற்படும் எவ்வழியிலும் நாட்டம் செலுத்தினோமானால் அது பெரிய நட்புத் துரோகமாகிவிடும்'' என்றான்.

''நான் பல்லவ மன்னருக்கு எப்பொழுதுமே தீங்கிழைக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டதில்லை. ஆனால் எங்கள் நாட்டில் இன்றைய நிலைமையையும் மக்களின் மனோ நிலையையும் நான் எடுத்துக் கூறத்தான் வேண்டியிருக்கிறது. எப்பொழுதாவது சமயம் நேர்ந்தால், நீங்கள் உண்மை நிலையை உணர்ந்தவர்களாயிருந்தால் எங்களுக்காகக் கொஞ்சம் பரிந்து பேசும் நிலைமை ஏற்படுமல்லவா? அதற்காகச் சொன்னேன்'' என்றார் சந்தகர்.

''சந்தர்ப்பம் நேர்ந்தால் நிச்சயமாக நான் அதைச் செய்வேன்'' என்றான் பிரதிவிபதி.

''நண்பரே! உங்கள் சமூக ஆசாரசீலராக விளங்கும் இம் மகா முனிவர் எதிரே எனக்குக் கொடுத்த வாக்குறுதியொன்றே போதும். அதற்கு என் நன்றி! உங்களைப் போன்றவர்கள் அதை நிச்சயம் மறக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்!'' என்று கூறினார் சந்தகர்.

''என்னுடைய வாக்குறுதியை ஒரு நாளும் நான் மறக்கமாட்டேன். உங்களோடு நான் நண்பரானதிலிருந்து உங்களுடைய உன்னத இலட்சியங்களையும் உயர்வான குணங்களையும் நான்



திருவெண்காடு கல்கி ஏஜண்டு கே. பி. சங்கதார நாயுடு அவர்களின் குமாரர் குருமூர்த்தி அவர்களுக்கும், சிதம்பரம் மளிகை வியாபாரி கோவிந்தராஜுலு நாயுடு அவர்களின் புதல்வி சௌ. சந்திரவுக்கும் 19-5-57 ல் திருவெண்காட்டில் வெகு விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. பல நண்பர்களும் உறவினர்களும் விஜயம் செய்து மணமக்களுக்கு நல்லாசி கூறி வாழ்த்தினர்.

அறிந்திருக்கிறேன். சோழ நாட்டு மக்களின் குணமும் இதயமும் எப்படிப்பட்டதாக இருக்குமென்பதை உங்களோடும் பூதுகரோடும் பழகியதிலிருந்து என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. இதனால் உங்கள் நாட்டு மக்களின் நலனைக் கருதி எதையும் செய்ய நான் சித்தமாயிருக்கிறேன்'' என்றான் பிரதிவீபதி.

இவ்விருவருடைய சம்பாஷணையிலும் தம் கவனத்தைச் செலுத்தி வந்த அரிஷ்டநேமி மிகவும் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தவராக, '' நண்பர்களென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்? மனமொத்த நண்பர்கள் வாழும் இடம் தெய்விகம் நிறைந்த இடமாகும். அவர்கள் உள்ளத்தில் உருவாகும் சிந்தனைகள் உலகில் நல்லெண்ணங்களைப் பரப்பப் பெரிதும் உதவியாயிருக்கும். தனி மனிதனின் சாதனையெல்லாம் ஓரளவுக்குள் நிற்பதாகவே முடியும். ஆனால் ஆப்த நண்பனின் உறுதுணையோடு நிற்கும் மனிதன் எதையும் இயக்கும் இணையற்ற சக்தியைப் பெற்று விடுகிறான். நீங்கள் இருவரும் அறிவிலும் அநுபவத்திலும் சிறந்து விளங்குகிறீர்கள். எப்படியோ அர்ஹத்பரமேஷ்டியின் அருளால் உங்கள் எண்ணங்களெல்லாம் சித்தியாகட்டும்'' என்றார். அவர் மனத்திலே தோன்றிய ஆனந்தம் சொற்களில் பரிணமித்தது.

** ** **

கிழக்கே வானில் எழுந்த சூரியனின் கடரொளி அம்மலைக் குகை வாசலில் வீசியது. இருள் பிரிவதற்கு முன்பு அந்தப் பிரதேசம் புதிதாக வருபவர்களுக்கு மிகவும் பயங்கரமான தோற்றத்தையளித்திருந்தால் வியப்பில்லை. இப்பொழுது காலைக் கதிரவனின் ஒளிபட்டு அந்தப் பிரதேசமே ஒரு புது உலகமாக விளங்கியது. மனித சஞ்சாரமற்ற அவ்வனப் பகுதியில் காலை நேரத்து இளம் வெய்யில் பிரவேசித்துப் புத்துயிர் ஊட்டியது. குன்றின் குகையில் குடைந்தெடுத்து வடிக்கப்பட்டிருந்த தெய்வ வடிவங்கள் கூட இருளிலிருந்து வெளிப்பட்டு, உயிர்ச் சிற்பங்களாகத் தோற்றமளித்தன. கதிரவனின் வரவுக்காகக் காத்திருந்தவை போல், செடி கொடிகளும், மரங்களும் காலைக் காற்றில் இலேசாக ஆடித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டன. பூரணமாகப் பொழுது விடிந்து விட்டதற்கு அறிகுறியாகப் பட்சிஜாலங்கள் பலவித இனிய குரலில் கூவின.

பிரதிவீபதியும் சந்தகரும் தங்கள் ஆகாரத்தை முடித்துக்கொண்டதும் பிரயாணத்துக்குச் சித்தமானார்கள். அவர்களை வழியனுப்புவதற்காக அம் முனிவரும் பின் தொடர்ந்தார். பிரதிவீபதியும் சந்தகரும் ஒரு மரத்தில் கட்டியிருந்த குதிரைகளை அவிழ்த்து, அவைகளைப் பிரயாணத்துக்குத் தயார் செய்வதுபோல் அவைகளின் முதுகில் தட்டினர்; அவ்வளவுதான்! அடுத்த கணம் அந்தக் குதிரைகள் கம்பீரமாகக் கனைத்துக் கொண்டு எழுந்து நின்றன. அவைகளின் மீது அவர்கள் ஏறி உட்கார்ந்தனர். குதிரைகளும் கம்பீரமாகப் புறப்படத் தொடங்கின.

அரிஷ்டநேமி முனிவர் தம் இரு கரங்களையும் தூக்கிக் குதிரைகளில் அமர்ந்துள்ள அவ்விருவரையும் ஆசீர்வதித்தார். குதிரைகள் கம்பீரமாகப் புறப்பட்டன. குதிரைகள் மீது கம்பீரமாக வீற்றிருந்த பிரதிவீபதி அக்குகை வாசலைப் பார்த்தபோது அங்கே சுகேசி நின்று கொண்டிருந்தாள். அழகே உருப்பெற்று வந்ததைப்போல் தெய்வமங்கையாகக் காட்சியளித்தாள். காலைக் கதிரவனின் பொன் ஒளியில் அவள் சௌந்தரியம் பூரணப் பொலிவோடு ஒளிர்ந்தது.

பிரதிவீபதியைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அவள், தன்னை அவன் நோக்கியதைக் கண்டதும் சிறிது வெட்கித் தலை குனிந்த வண்ணமே ஒரு புன்முறுவல் பூத்தாள். பாவம், அவள் சிரிப்பிலும் பார்வையிலும் பிரதிவீபதி எதைக் கண்டானோ? அவன் இதயத்தில் அந்தச் சமயத்தில் 'சுரீ'ரென்று ஏதோ தைப்பதைப் போன்ற உணர்ச்சிதான் ஏற்பட்டது.

(தொடரும்)

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

தளிர்மேனிச் செல்வங்களுக்கு மலர் மென்மையுள்ள பவுடர்



இலவச புத்தகம்

ஜான்ஸனின் குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவசப் பிரதிக்கு எழுதுங்கள். பெற்றோர்களுக்கு உபயோகமான அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. இங்கிலீஷ் அல்லது தமிழ் பிரதிகளில் எது வேண்டுமென்று குறிப்பிட்டு எழுதவும்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

பி.ஓ. பாக்ஸ் 1976, டிபார்ட்மெண்ட 30H பம்பாய்



பூவும் பழமும்

ஆர். எஸ். ஞானம்பாள்

"இவ்வளவு இடம் வீணாகப் போகிறதே. ஒரு தோட்டம் போட்டால் என்ன? ஆட்கள் இருக்கிறார்கள், பார்த்துக் கொள்கிறார்கள். நமக்கும் நல்ல பொழுதுபோக்கு. நல்ல அழகான பூந்தோட்டம் போட எனக்கு மிகுந்த ஆசை" என்றாள், டெப்டி-கலெக்டர் வாசுவின் மனைவி அம்மு.

"உன் பூச்சூட்டலுக்கு இந்த ஊர்ப் பூக்கடைத் தெருவையே விலைக்கு வாங்கி விடுகிறேன், போதுமா? நாம் எதற்குத் தோட்டம் போட்டுக் கஷ்டப்பட வேண்டும்? பக்கத்து பங்களாவைப் பார். ஒரு மாசமாகப் பூட்டிக் கிடக்கிறது. தோட்டம் காடாக மண்டி விட்டது. பயிர்பச்சை வீட்டைச் சுற்றி இருந்தால் பூச்சி பொட்டு அண்டும். இப்படி ஒரே திடலாக இருப்பதுதான் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று சொன்னார் கலெக்டர் வாசு.

"ஹூம். ரசனையே இல்லாத மனுஷர்" என்று நினைத்துக் கொண்ட அம்மு யோசனையில் ஆழ்ந்து விட்டாள். வாசு உள்ளே போய் விட்டார்.

* * *

வேஷ்டியை இழுத்துக் கட்டிக் கொண்டு மண்வெட்டியும் கையுமாகத்தானே பாத்திகளை ஒழுங்கு செய்து கொண்டிருந்தான் வாசு. "ஏண்டா, முனியா! அந்த மஞ்சள் ரோஜாப் பாத்தியைச் சருகில்லாமல் சுத்தம் பண்ணியாச்சா? அந்தச் சம்பங்கிக்கு நிறையவே ஜலம் கட்டு" என்று முனியனை விரட்டுவதும், "அம்மா! மரகதப் பச்சையின் நடுவே முத்துப் பதித்தாற்போல் பூத்துக் குலுங்கும் இந்த மல்லிகைச் செடியின் அழகுக்கு வேறு எதுவுமே இல்லை அம்மா. இந்தக் கிசந்தமம் சட்டியை மேலண்டைப்புறம் வைத்தால் அழகாயிராது?" என்று அம்மாவை யோசனை கேட்பதுமாகப் பரபரப்புடன் அலைந்து கொண்டிருந்தான்.

வாசுவுக்குப் பூச்செடிகள் என்றால் உயிர். ஒவ்வொரு செடியின் பிறப்பு வளர்ப்பும், ஒவ்வொரு கதை சொல்லும் அவனுக்கு. பூத்துக் குலுங்கும் தோட்டத்தைக் கண்டு பூரித்துப் போய் விடுவான் வாசு. நண்பர்களை அழைத்துப் பெருமையாகக் காட்டுவான், தன்னுடைய அருமைக் குழந்தையைக் காட்டி மகிழும் தாய் போல.

நண்பர்கள் கூறுவதற்கு முன் அவனுக்கு அந்த எண்ணமே எழுந்ததில்லை. 'நகரசபையார் நடத்தும் பூங்காவனப் போட்டியில் நீயும் கலந்து கொள். பரிசு கிடைக்கும்' என்றதும் வாசு, "பரிசு எதற்கு? பரிசுக்காகவா உழைக்கிறேன்? செடிகளுக்காகப் பாடுபடுகிறேன். அதை மனப் பூர்வமாக ஏற்று மகிழும் செடிகள் சிரித்து மலர்ந்து தம் நன்றியைக் காட்டி விடுகின்றன அல்லவா? அதை விடவா மற்றப் பரிசுகள் உயர்வு?" என்று வாதித்து வந்தான்.

"அப்படியில்லை, வாசு. இந்த வருஷம் உன் பூந்தோட்டத்துக்குத்தான் முதற்பரிசு கிடைக்கப் போகிறது. நீ கண்டிப்பாகப் போட்டியில் கலந்து கொள்ளத்தான் வேண்டும்" என்று அனைவரும் ஒருமுகமாக அடித்துக் கூறியதும், வாசுவுக்கும் சபலம்தட்டிற்று.

ஒரு வாரமாக வாசு தோட்டத்திலேயே குடியிருந்தான், பாத்திகளைச் சீராக்குவதும், செடி கொடிகளை ஒழுங்குபடுத்துவதுமாக. 'முதற் பரிசு,' 'முதற் பரிசு' என்று அவன் மனம் இடைவிடாமல் ஜபித்துக் கொண்டிருந்தது. மறுநாள் காலையில் அதிகாரிகள் தோட்டத்தைப் பார்வையிட வர இருந்தனர்.

"போதும் வாசு! உள்ளே வந்து காப்பியைக் குடி. எப்பொழுது பார்த்தாலும் மண்ணை அளைந்து கொண்டிருந்தால் வேறு வேலை இல்லையா?" என்று அனுப்புடன் அதட்டினாள் அவன் அம்மா. பின்னே சதா சர்வதா புஸ்தகமும் கையுமாக இல்லையே என்று குறை அவளுக்கு!

"கொஞ்சம் இரு, அம்மா. பத்து, பதினொன்று ...ம்... இங்கே ஒன்னு—பன்னிரண்டு. இதோ ஒளிஞ்சிண்டிருக்கே ஒன்னு, பதிமூணு, பதினாலு. அம்மா! அம்மா!! இங்கே வந்து பாரேன். இந்தக் குளிபூண்டு செடியிலே பதினாலு மொட்டுகள் அம்மா! நாளைக்குக் காலையில் இந்தப் பதினாலு ரோஜாவும் மலர்ந்து விரிந்தால் எத்தனை அழகாக இருக்கும்! பார்வையாளர்கள் அப்படியே சொக்கிப் போய் விடுவார்கள்." வாசு மண்ணை உதறிக்கொண்டே உள்ளே சென்றான். அம்மாவும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

* * *

"ஒன்னே ஒன்னு, ஒன்னே ஒன்னு' என்று சொல்லியே எட்டுத் தோசை போட்டாச்சு அம்மா. எனக்கு வயிறு, வண்ணான்

சாலா? ஊஹூம், ஒரு விள்ளல் கூட வேண் டாம்'' என்று பிடிவாதமாக மறுத்து விட்டு எழுந்தான் வாசு. ஈரக் கையைத் துடைத்துக் கொண்டே வாசலுக்குப் போன வாசு, '' அம்மா ! அம்மா !! டே முனியா ! டே ஜடாமுனி !!'' என்று அலறுவதைக் கேட்டு, ' என்னவோ, ஏதோ ' என்று பயந்து போய் ஓடிவந்தாள் அவன் அம்மா.

'' கூப்பிட்டீங்களா எசமான் ?'' என்று நிதானமாகக் கொல்லைப்புறத்திலிருந்து வந்த முனியன் வாசுவைக் கண்டதும் பயந்து நடுங்கி விட்டான்.

'' என்ன அக்கிரமம் ! உள்ளே போய் டிபன் சாப்பிட்டுவிட்டு வருவதற்குள்— அரைமணி நேரம் கூட இல்லே. அத்தனை பூவையும் காணுமே !......ஏண்டா கழுதை! நீ இங்கே எதற்கு இருக்கிறாய் ? யார் வந்து பறித் தார்கள் ? திருட்டுக்கு நீயும் உடைந்தையா?'' வாசுவின் துக்கம் முழுவதும் முனியன் மீது கோபமாகத் திரும்பியது.

'' ஐயோ சாமி ! நான் பின்னாலே சண்பக மரத்தடியில் இக்லே இருந்தேன் ? நீங்கள் தான் முன் பக்கம் இருக்கீங்களேன்னு சிறிது கண்ணயர்ந்துட்டேன். அதற்குள் யார் வந் திருப்பாங்க ?'' என்று முனியன் மென்று விழுங்கினான்.

'' போனால் போகிறது. இதற்காகக் குடியே முழுகிவிட்டது மாதிரி வருத்தப்படுவார்களா? 'கேட்'டைப் பூட்டாமல் வந்தது நம் பிசகு.''

அம்மா வாசுவைச் சமாதானப்படுத்து வதற்கு ஆரம்பித்தாள்.

''என்னம்மா? போட்டிக்குப் பெயரைக் கொடுத்து விட்டு,நாளைக்குப் பார்வையாளர்க ளெல்லாம் வந்து பார்த்தால் எத்தனை அவமானம் !''— வாசுவுக்கு அழுகை வெடித்துக்கொண்டு வந்தது.

''சாமி, சாமி, அதோ ஒரு பொண்ணு. சுவரோரமாகப் பதுங்கிப் பதுங்கி ஓடுதுங்க. அது மடியில் பூத்தானுங்க. அச்சச்சோ! ரோட்டுக்குப் பூட்டுதுங்களே'' — முனியன் பலமாகக் கத்தினான்.

வாசு குதித்து எழுந்து ஓடினான். பூவை எடுத்துக் கொண்டு ஓடும், பச்சைப் பாவாடை கட்டிய சிறுமியை அவன் கண்கள் இனம் கண்டு கொண்டுவிட்டன. சிறுமி ஓடிச் சென்று மறைந்த வீட்டைக் கவனித்த பின் தான், அவன் ஓடுவதை விட்டு நடக்க ஆரம்பித்தான்.

சிறுமி நுழைந்த வீட்டினுள் சூறாவளி போல் புகுந்த வாசு ரேழியிலேயே நின்று விட்டான்.

''மைச்சா! மைச்சா!! அங்கே நிறையப் பூத் துக்கிடக்கு. உங்களுக்குப் பூன்னு ரொம்பப் பிடிக்குமோல்லியோ மைசா? அங்கே யாருமே இல்லே மைச்சா. எவ்வளவு வேணுமானாலும் பறிச்சுக்கலாம்.''

''அப்பா! எத்தனை பெரிய ரோஜா மொட்டு! ஏன் கண்ணம்மா, இப்படி அரும் பும் காயுமாகவா பறிப்பது? நாளைக்கு மலர்ந்த பின் கொண்டு வந்தாலும், வெள்ளிக்கிழமை, அம்பாளுக்கு அர்ச்சனை பண்ணலாம்.''

'' ஊம், யாரோ ஒருவர் பாடுபட்டுப் பயிர் செய்தால் பூவைத் திருடிக் கொண்டு வந்து அம்பாளுக்கு அர்ச்சனை மட்டுமா பண்ணலாம்? மைச்சரம்மா அலங்காரம்கூடச் செய்து கொள்ளலாம். . .'' கோபக் கனலை வார்த்தைகளாகக் கக்கிக் கொண்டு, எரிமலை போல் வந்து நிற்கும் வாலிபனைக் கண்டதும் திகைத்துப் போய் நின்றாள் 'மைச்சா'.

''திருட்டு வெளியாகிவிட்டதே என்று வெட்கமாக இருக்கோ ? முதலிலேயே அந்தப் புத்தி எங்கே போச்சு? ஊரார் வீட்டுக் குழந்தைகளைத் திருட அனுப்பினால் யாரும் எதுவும் சொல்ல மாட்டார்கள் என்ற தைரி யம்! எதிர்கால இந்தியப் பிரஜைகளை உரு வாக்கும் நவயுகச் சிற்பி! உங்களிடம் சிக்கிய



மாணவிகள் நன்ருக உருப்படுவார்கள்!'' என்று வாசு பொரிந்து கொட்டினுன் வார்த்தைகளை.

அந்தப் பெண்ணுக்கும் கோபம் வந்து விட்டது. ''நாக்கை அடக்கிப் பேசுங்கள், மிஸ்டர். எந்தக் குபேரப் பட்டணம் கொள்ளை போய் விட்டதென்று குதிக்கிறீர்கள்? நான் உங்களை முன்பின் பார்த்ததுகூட இல்லை'' என்று படபடத்தாள்.

'' ரொம்பப் பேச வேண்டாம். கையும் களவுமாகப் பார்த்தபின் தான் ஓடி வந்திருக்கிறேன். இந்தப் பூவெல்லாம் என் தோட்டத்தில் பூத்தவை. இந்தத் திருட்டுக் கழுதை திருடிக்கொண்டு வந்திருக்கிறது. உண்டா, இல்லையா? அவளையே கேளுங்கள்.'' பயந்து நடுங்கிச் சுவர் ஓரமாக ஒதுங்கி நின்றிருந்த சிறுமியின் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்து முன்னுல் தள்ளினுன் வாசு.

''மிஸ்டர்! ஊரார் வீட்டுக் குழந்தையை வீணுக அடித்துத் துன்புறுத்த வேண்டாம். விடுங்கள் நானே விசாரிக்கிறேன்'' என்று, தேம்பும் சிறுமியை அணைத்துக் கொண்டாள்.

சிறுமியின் கண்ணீரைத் துடைத்தபடியே, ''ஏன் கண்ணம்மா, ஒருத்தரையும் கேட்காமல் பூ கொண்டு வரலாமா?'' என்ருள்.

'' இதில் பொய் வேறு! கேட்பாரே இல்லையாம்'' என்று வாசு குறுக்கிட்டான்.

''நீங்கள் சும்மா இருங்களேன், கொஞ்சம்! கண்ணம்மா! பொய் சொன்னுல் டீச்சருக்குப் பிடிக்காது என்று உனக்குத் தெரியாதா?''

'' இல்லை டீச்சர், உங்களுக்குப் பூன்னு ரொம்பப் பிடிக்குமென்னு தான் கொண்டு வந்தேன். இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன் டீச்சர்'' என்று விசும்பிய கண்ணம்மா, டீச்சரின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு 'ஓ'வென்று பலமாக அழுவதற்கு ஆரம்பித்து விட்டாள்.

'' ஸார்! குழந்தை தெரியாத்தனமாகச் செய்து விட்டாள். மன்னித்துக் கொள்ளுங்கள். இனிமேல் இந்த மாதிரி நடக்க விடமாட்டேன்....'' அவள் அத்துடன் நில்லாமல் தொடர்ந்து. ''இந்தாருங்கள். பூவை எடுத்துக் கொண்டு போங்கள். தயவுசெய்து மன்னித்து விடுங்கள்'' என்று கூறியதும் வாசுவுக்கு ஆத்திரம் பீறிக் கொண்டு வந்தது.

'' பறித்த பூவைக் கொண்டுபோய்ச் செடியில் ஒட்டினுல் ஒட்டுமா? மன்னிப்புக் கேட்டு விட்டால் செய்த தவறு நேராகிவிடுமா? வெறிபிடித்தவன் போலக் கத்தினுன் வாசு.

''கோபத்தில் கொட்டி விட்ட வார்த்தைகளைக் கூட மீட்க முடியாது ஸார். போனுல் போகிறதென்று பார்த்தால் ஓட ஓட விரட்டுகிறீர்களே. பெண் பிள்ளை ஒருத்தி தனியாக இருக்கும் வீட்டில் நுழைந்து கூச்சல் போட்டுக் கலாட்டா செய்வது மட்டும் ரொம்ப ஒழுங்கோ?'' என்ருள் அவள்.

கழுத்தில் கை வைத்துத் தள்ளாத குறையாக ஒலிக்கும் அவள் பேச்சைக் கேட்டு வாயடைத்துப் போய் வெளியேறினுன் வாசு.

ஏமாற்றமும், அவமானமும், சோர்வும் அவனைப் படுக்கையில் கிடத்திவிட்டன. எமன் வாயிலுக்கே சென்று மீண்ட வாசு எவ்விதத்திலும் புதுப் பிறவி எடுத்தவனுக இருந்தான்.



புதுப் பிறவி எடுத்துவிட்ட வாசு பள்ளிப் படிப்பிலே கவனம் செலுத்தத் தொடங்கினுன். ஒவ்வொரு வகுப்பிலும் அவன் முதல் மாணவனுக விளங்கினுன். பள்ளிக்கூட ஆண்டு விழாக்களிலும், கல்லூரி ஆண்டு விழாக்களிலும் எல்லாப் பரிசுகளும் அவனே தட்டிக் கொண்டு போனுன்.

தோட்டக் கலையில் அவன் செலுத்திய கவனமெல்லாம், கல்லூரிப் படிப்பில் செலுத்தியதால் இவ்விதம் நல்ல பலன் கிடைத்தது. அவனுடைய தாயாருக்கும் அளவு கடந்த மகிழ்ச்சி; தன்னுடைய அருமை மகன் கல்லூரிப் படிப்பில் அதிக கவனம் செலுத்தி உலகம் ஒப்பும் பிள்ளையாகி விட்டான் என்று.

வாசு சர்வகலாசாலைப் பரீட்சையில் முதல் மாணவனுகத் தேறினுன். அது அவனுக்குக் கலெக்டர் பரீட்சைக்கு உட்காரும் நல்லதோர் வாய்ப்பைத் தேடித் தந்தது.

உற்ருரும் உறவினரும் வியக்கும் வண்ணம் கலெக்டர் பரீட்சையிலும் தேறி அவன் கலெக்டர் ஆகி விட்டான். அப்பொழுதும் அவனுக்குப் படிப்பின் மீது கவனம் குறையவில்லை. எந்த நேரமும் படிப்பு; படிப்பு! படிப்பைத் தவிர வேறு சிந்தனை இல்லை; பொழுது போக்கு இல்லை. இப்படிப் பத்து வருஷங்கள் ஓடிவிட்டன. கலெக்டர் வாசுவுக்குப் பெண்ணைப் பெற்றவர்கள் போட்டி போட்டுக் கொண்டு பெண் கொடுக்க முன்வந்தனர்.

கடைசியில் அம்மு வாசுவின் வாழ்க்கைத் துணைவியாக வந்து சேர்ந்தாள். அம்முவும் வாசுவும் மிக இன்பமயமான இல்லற வாழ்க்கையை நடத்தி மகிழ்ந்தனர்.

இந்த இன்பக் காட்சிகளை யெல்லாம் பார்த்து மகிழ வாசுவின் தாயார் இல்லை. இது வாசுவுக்குப் பெரும் குறையாகத்தான் இருந்தது. ஆனுல் காலத்தை யாரால் வெற்றி கொள்ள முடியும்? எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. என்ருலும் செடிகொடிகளின் மீது அவன் கொண்ட ஆசை பட்ட மரமாகத்தான் நின்றது; அது தளிர்க்கவே இல்லை.

ஒரு நாள் அம்மு, தன் வீட்டுக் கொல்லையில் உல்லாசமாகச் சுற்றிப் பார்த்துக் கொண்



அடையாறு ஆர்ட்ஸ் அகாடமியில் சென்ற மாதம் கோலாலம்பூர் சன்டாக்ஸ் ஆர்ட்ஸ் சொஸைட்டியைச் சேர்ந்த திருச்செந்தூர் சகோதரிகள் குமாரி பத்மா, உமா, தனம் இவர்களின் பரத நாட்டியம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வைபவத்துக்குச் சென்னை மேயர் ஸ்ரீ கே. என். சீனிவாசன் தலைமை வகித்தார். நடன ஆசிரியர் குத்தாலம் ஸ்ரீ கணேசம் பிள்ளை அவர்களிடம் பயிற்சி பெற்றுள்ள திருச்செந்தூர் சகோதரிகளின் நாட்டிய பாணியை ரசிகர்கள் மிகவும் பாராட்டினார்கள்.

டிருந்தான். அப்பொழுது ''இங்கே வாங்க னேன்!'' என்று குரல் கொடுத்தாள்.

அம்மு கூவுவதைக் கேட்டு வெளியே விரைந்து வந்தார் வாசு.

''ப்பூன் சிங்காரம் இந்த ஊரில் முந்திரிப் பழமே கிடைக்காது என்று சொன்னானே. அத்தனையும் பொய்! இங்கே பாருங்களேன், பக்கத்துப் பங்களாவில் முந்திரி மரத்தை. அதோ அந்தக் கிளையில் இரட்டைப் பழங்கள் பழுத்துக் குலுங்கும் அழகைப் பாருங்கள்'' என்றாள் அம்மு ஆதுரத்துடன். அவள் கண் பார்வையில் மிளிரும் ஆவலை மட்டும் உணரும் சக்தி அந்தப் பழங்களுக்கு இருந்திருந்தால், அவை அந்தக் கணமே அவள் கையில் வந்து விழுந்திருக்காதா?

வாசு கூட ஜடமா, என்ன, அம்முவின் ஆவலை உணர்ந்தும், நிறைவேற்றுமலிருக்க? ஜன்னல் கட்டைமீது ஒரு காலை வைத்துக் காம்பவுண்டுச் சுவர்மீது ஏறப் போனார்.

''என்ன நீங்களா சுவர்மீது ஏறப்போகிறீர்கள்? சிங்காரம் கடையிலிருந்து வரட்டுமே. வேண்டாம், இறங்கி விடுங்கள்'' என்று கத்தினாள் அம்மு.

''பரவாயில்லை தேவி. 'காதற் பெண்களின் கடைக்கண் பணியிலே காற்றிலேறி விண்ணையும் சாடுவோம்' என்று மார்தட்டி யிருக்கிருரே கவிஞர்! அவர் வாக்கை மெய்ப்பிக்க, உனக்காக இந்தச் சுவரேறி முந்திரிப் பழம் கூடப் பறிக்கக் கூடாதா?''

'லபக்'கென்று சுவருக்குத் தாவிவிட்ட வாசுவின் கால்பட்டு உப்புப் பொரிந்து காரை உதிர்ந்திருந்த சுவரிலிருந்து செங்கல் துண்டு ஒன்று கீழே நழுவிற்று. 'ஆ! அப்பா!' என்ற வேதனைக் குரலைக் கேட்டுக் குனிந்த வாசுவின் கால்கள் நடுங்கின. கல்லடி பட்டுத் தலையைத் தடவிக் கொண்ட பெண்மணி, கனியும் கையுமாக நிற்கும் அவரைக் கண்டு என்ன நினைப்பாள்? 'ஐயோ! மானக் கேடு! எம். ஏ. பட்டம் பெற்றவர்! ஒரு கலெக்டர்! கௌரவமான உத்தியோகஸ்தர். திருடுவதா? அதுவும், கேவலம் ஒரு முந்திரிப் பழத்தை? நாலுபேர் கள் காதில் பட்டால், ஐயோ! அவர் உயிர் ஏன் இன்னும் போகவில்லை?' தலை சுற்றித் தடுமாறிய வாசு கீழே விழுந்து விட்டார்.

''ஐயையோ! சிங்காரம்! ஓடி வாயேன்'' என்றாள் அம்மு அலறிப் புடைத்துக் கொண்டு.

வாசு கண்ணை விழித்த பொழுது, கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் அம்முவைத் தேற்றிக் கொண்டிருந்தாள் ஒரு பெண்மணி.

'யார் இவள்? இவள் இங்கே எப்படி வந்தாள்?'

''அடி ரொம்பப் பலமாகப் பட்டுவிட்டதா? இல்லையே. நான் ஒரு நிமிஷம் துடித்துப் போய் விட்டேன். ஏதாவது எக்கச்சக்கமாகி யிருந்தால் இந்தப் பெண்ணின் கதி? மரம் ஏறப் பழக்கம் வேண்டாமா சார்?''—கலகலவென்று பேசினாள் அந்தப் பெண்மணி.

வாசு மெள்ள எழுந்து உட்கார்ந்தார்: ''நீங்கள்?...நீங்கள்...''—வாசு பேச முடியாமல் தடுமாறினார்.

''நான், நானேதான். டீச்சர் உத்தியோகத்தை விட்டு ஐந்தாறு வருஷங்கள் ஆயிற்று. நாம் சந்தித்துப் பத்து வருஷங்களுக்கு மேல் இருக்கும். இல்லையா? அதுதான் உங்களுக்குச் சட்டென்று அடையாளம் தெரியவில்லை. பழங்களைச் சாப்பிடுங்கள். இவை என் கணவர் தம் கையாலேயே நட்டுப் பயிரிட்ட மரங்களின் பழங்கள். நீயும் சாப்பிடு அம்மு!'' என்று பழங்கள் நிறைந்த கூடையை அவர்கள் எதிரே நகர்த்தினாள்.

தன் எதிரே அமர்ந்திருக்கும் பெண் தெய்வத்தைக் குடலை குடலையாகப் பூ எடுத்துப் பூஜிக்க விரும்பிற்று வாசுவின் உள்ளம். ஆனால் அவருடைய பூவில் ஒட்டிய தூசைக்கூட ஏற்கமாட்டாள் என்பதை அவளுடைய பாழ் நெற்றியும், வெறுமையான கழுத்தும் பறை சாற்றின. உடல் வலியை விட, உள்ளத்தில் பட்ட அடியின் வலிமையைத் தாளாத வாசு படுக்கையில் 'தொப்'பென்று விழுந்தார்.


மே மாதச் சிறுகதைப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற கதை

நொண்டிக் குழந்தை

உயர்ந்திருந்த மாதா கோவிலின் நெடுங்கோபுரம் பளிச்சென்று பன்னிரண்டு மணி வெய்யிலில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மாதா கோயிலைச் சுற்றியும் மௌனத்திலே உழலும் தூங்குமூஞ்சி மரங்கள் நிழலைத் தந்தும் தராமலும் இருந்தன. வயது மிகுந்தவர்கள் நரம்பு புடைத்திருப்பது போல வேர்கள் திரண்டு உருண்டு பூமிக்கு மேலே எட்டிப் பார்த்தன.

ஒரு மரத்தின் அடி நிழலிலே அருள்தாஸ் அமர்ந்திருந்தான். சுற்றிலும் தோல் மயம். பக்கத்திலே சோர்ந்து துவண்டு காது இழந்த தோல் பை பரிதாபமாக இருந்தது. கையிலே சிலுக்கு ஊசி (தோலைத் துளைக்க உதவும் ஊசி) வைத்துக் கொண்டு செருப்பு தைத்துக் கொண்டிருந்தான் அருள்தாஸ். ஆம், அவன் ஒரு சக்கிலியன்.

தேன்மெழுகுப் பொட்டலம் அவனருகே சாதுவாக அமர்ந்திருந்தது. அதன் காதைப் பிடித்துத் திருகுவது போல அதிலிருந்து சிறிது பிய்த்தெடுத்துத் தோய்த்திருந்த நூலிலே தடவினான் அருள்தாஸ். பிறகு சுருங்கியிருந்த தொண்டையிலே நூலை வைத்துத் திரைத்தான். டள பள வென்று மின்னி இரும்புக்



கம்பியாக ஆன நூலைத் திரித்துக்கொண்டே சிலுக்கு ஊசியிலே வைத்துச் செருப்பு தைக்க ஆரம்பித்தான்.

'பரக்'—சிலுக்கு ஊசி அநாயாசமாகத் தோலிலே பாய்ந்து அடுத்த பக்கத்திலே ஆவலுடன் எட்டிப் பார்த்தது. கை பர பரவென வேகமாக ஓடியது.

ஒரு வழியாகச் செருப்பைத் தைத்து முடித்துவிட்டு மலையிலிருந்து பனி உருகி நீர் வழிவது போலப் பெருகிய வியர்வையைக் கையால் வழித்தான் தாஸ்.

''நயினா!''

வேறு யாருமில்லை; அழைத்தது அவன் மகன் இருதயராஜ்தான். அவன் பின்னாலே மேரி கையிலே கஞ்சிக் கலயத்துடன் வந்தாள்.

''க்கும்...ரொம்ப நாழியாயிடுச்சே, சாமியார் கூடச் சாப்பிடப் போயிட்டார். கோயிலு மணிகூட அடிச்சிடுத்து...''

''ஒண்ணுமில்லே, பையனும் வரேன்னு சொன்னான் அதுக்காட்டியும் நேரமாச்சு!''

''.........''

''ஒங்களைத்தானே!''

''என்ன?''

''ராஜுக்கு ஒரு நல்ல பூட்சு தைச்சுத் தர்றீங்களா?''

அருள்தாஸ் மேரியை நிமிர்ந்துபார்த்தான். ''கருத்தர் கஞ்சி குடுக்கிறது போறாதா? பூட்சு வேறே போட்டுக் இடணுமா?''

''ஆமாம், எல்லாரும் அழகா காலிலே மாட்டிக்கிட்டு வாறாங்களே. எல்லாருக்கும் தைச்சுக் குடுக்கிறீங்களே. பையன் காலுக்கும் மாட்டினா என்ன?''

''அட, சொம்மனா இரு! வேலை மேலே இருக்கேன். இந்தா, கஞ்சிக் கலயத்தை இப்படி இழு!''

மடக் மடக் என்று கருங்கிய வயிறு பானைக் கஞ்சியை இரண்டே நிமிஷத்தில் இழுத்துக் கொண்டது.

''அப்பாடி!...என்னா வெயிலு.''

''ஆமாம் வெயிலிலே குழந்தைக்குக் காலிலே கூட ஒண்ணு மில்லாமல் நடக்க முடியுமா?...சின்னதா ஒண்ணு தைச்சுக் கொடேன்.''

''ஒன்னை யாரு அவனை இழுத்துக்கிட்டு வரச் சொன்னது? சரி சரி வீட்டுக்குப் போ... இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. கோயிலுக்குப் போவணும்.''

''அப்ப, மாட்டியா!''

''அட, போன்னா போ. ஏதாவது கிராக்கி வந்தாலும் வரும். சும்மா நின்னு பேசிக் கிட்டே இருக்காதே!''

மேரி இருதயராஜைத் தூக்கிக் கொண்டு போய் விட்டாள்.

டாண் டாண் என்று மாதாகோயில் மணி கம்பீரமாக முழங்கியது. சிலுக்கு ஊசியைக் கீழே வைத்து விட்டுச் சிலுவையிட்டு வணங்கினான் அருள்தாஸ்.

*   *   *

அன்று மாலை, அருள்தாஸும், மேரியும் இருதயராஜுடன் சர்ச்சுக்குப் புறப்பட்டார்கள். கோயிலிலே அன்றைக்கு ஏகக் கூட்டம். பிரார்த்தனை தொடங்கியது. எல்லோரும் முட்டிக் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்தனர்.

''எரேமியா சொன்னது என்ன? 'எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத் தக்கவன் யார்? கர்த்தராகிய நானே இருதயத்தை ஆராய்கிறவரும் உள் இந்திரியங்களைச் சோதித்து அறிகிறவருமாய்





காரைக்குடி அழகப்பா பொறி இயல் கல்லூரிப் பேராசிரியர் ஸ்ரீ என். ஏ. மணி அய்யர் அவர்களின் பேத்தியும், புது தில்லி திட்டக் கமிஷன் உதவி அதிகாரி திரு வி. கல்யாணசுந்தரம் அவர்களின் புதல்வியுமான திருமதி சரோஜாவுக்கும் திரு வி. கோபாலகிருஷ்ணன் பி.காமுக்கும் சென்னை மைலாப்பூர் பாஸ்கரபுரத்தில் மே 24ந்தேதி வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. முகூர்த்தத்துக்கும் மாலையில் நடந்த வரவேற்பு வைபவத்துக்கும் உறவினர்களும் பிரமுகர்களும் விஜயம் செய்து சிறப்பித்தனர். வாழ்க மணமக்கள்!

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

இருக்கிறேன்' என்று சொன்னார்'' என்று பாதிரிச் சாமியார் பேசினார். ''பாவத்தின் சம்பளம் மரணம் என்று ரோமர் சொன்னதை உற்று நோக்குங்கள்'' என்று உபதேசித்தார். எல்லோரும் மனம் உருகிப் போய்க் கேட்டுக் கொண்டிருந்தனர்.

இருதயராஜின் எண்ணமோ இந்தக் கவிசேஷத்தில் இல்லை! அவன் முன்னாலே ஐந்து வயசுப் பையன் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன் பாதம் இவன் முன்னால் இருந்தது. அந்தப் பாதத்திலே இருந்த சிவப்புப் பூட்ஸைக் கண்டு வியந்தான் இருதயராஜ். பாவம் அவனும் குழந்தை தானே! அவனுக்கும் ஐந்து வயசுதான் இருக்கும். பளபளவென்று பளிச்சிட்டன அந்தப் பூட்ஸுகள். ராஜ் மெதுவாக அதைத் தொட்டுப் பார்த்தான். அவன் கண்கள் ஏக்கத்தை உமிழ்ந்தன. அந்தப் பையன் திரும்பினான். ராஜ் அசட்டுச் சிரிப்பு சிரித்துத் தான் செய்ததை மறைக்க முயன்றான்.

பிரார்த்தனை முடிந்தது!

'' நயினா, அதோ பாத்தியா அந்தப் பையன் செகப்பு பூட்ஸ் போட்டுக்கினு வந்திருக்கான். பக்கத்து வீட்டுப் பீட்டர்கூட கறுப்பு பூட்ஸ் போட்டுண்டு வந்திருக்கான்.''

'' சும்மா பேசாம வாடா '' என்று பாக்கு வெட்டுவது போல நறுக்கென்று பேசினான் அருள்தாஸ்.

''ஐய, கொளந்தைகிட்ட கன்னுன்னு விழுறதைப் பாரு! சாமியார் என்ன சொன்னாரு! கொளந்தைங்க கிட்ட அன்பு காட்டினால் ஆட்டுக் குடியானவருக்கு மிக்க சந்தோஷம்னு சொன்னாரே, மறந்து பூட்டியா?''

''அட நீயும் ஆரம்பிச்சிட்டியா!''

''ஆமாம்! கொளந்தை ஆசைப்பட்டுக் கேட்கிறதேன்னு இல்லியே உங்களுக்கு.''

அவன் பதிலே சொல்லவில்லை. மௌனமாக நடந்து வந்தான். ராஜ் எல்லாக் குழந்தைகள் காலிலேயும் இருக்கும் அழகான செருப்புகளைப் பார்த்து ஏங்கிப் பெருமூச்சு விட்டுக் கொண்டே வந்தான்.

''ஒன்னுமில்லாத ஆளுகளெல்லாம் செருப்பு போட்டுக்கினு வருதாம். ஊருக்கெல்லாம் செருப்புத் தைக்கறவரு மவனுக்கு ஒன்னு போட மாட்டேன்னு உலகம் சிரிக்கும்!'' என்றாள் மேரி.

''சரி சரி...சிரிச்சுட்டுப் போவட்டும்; நீ சும்மா இரு!''

* * *

மணி பதினொன்று ஆகிவிட்டது. சிறுக்கு ஊசி சோம்பல் முறித்துக் கொண்டிருந்தது. தேன்மெழுகுப் பொட்டலம் தூங்கிக் கொண்டிருந்தது. பாவம்! அன்றைக்கு ஒருவருமே தாஸிடம் வரவில்லை. அருள்தாஸ் புதுசாகப் பூட்ஸ் ஒன்று தைத்து வைத்திருந்தான். அதை வாங்குவதற்கும் ஆள் ஒருவரும் வரவில்லை.

''அட சீ! என்ன பொழைப்பு இது'' என்று நொந்து கொண்டான் தாஸ். தூங்குமூஞ்சி மரம் இலையுதிர்த்துத் தோல் பைக்குப் போர்வையிட்டது. ''அட நல்ல ரோடு போட்டாலும் போட்டாங்க, செருப்பு ஒருத்தருக்கும் பிஞ்சு போவமாட்டேங்குது'' என்று நினைத்துக் கொண்டான் அருள்தாஸ். பிறகு அந்த எண்ணத்தை நினைத்துத் தானே ஒரு தடவை சிரித்துக் கொண்டான்.

''ஏய்...''

''யாரு..வாங்க வாங்க..இன்னாவேணும்?''

''ஒன்னும் வாண்டாம். செருப்பு ஒன்னு தைச்சுத் தருவியா?''

''இன்னாங்க...பூட்ஸ் போட்டுக்கிங்க. உங்க காலுக்கு இந்தப் பூட்ஸ் இருந்துதின்னு ரொம்ப எடுப்பாக இருக்குமுங்க.''

இருபது ஆண்டு அனுபவம் இப்படித் தாஜா செய்தது.

வெயில் வேளையிலே தலையில் ஐஸ் வைத்தது போல் ''சரி'' என்று பூட்ஸை எடுத்துப் பார்த்தான் வந்தவன்.

''ஐய, என்ன தோலு இது. தம்பட்டத்துக்குப் போடுவாங்களே அது மாதிரி.''

''அட, இன்னா இப்படிச் சொல்றீங்க. கத்தக் கான்பூர்த் தோலுங்க. இஸ்பெஷலாச் செய்ததுங்க.''

''உம். நானு வைச்சிருக்கேன் ஒன்னு மிலிடேரி பூட்ஸு...''

''அது நோத்துப் பூடுங்க இதுகிட்ட.''

''ஐயய! என்ன லாடம் இது. நல்ல சிங்கப்பூர் லாடமா இருந்தால் போதும்.''

''ஆமோ, சிங்கப்பூரு லாடமா?'' அருள்தாஸ் திகைத்தான். சிங்கப்பூர் லாடத்திலே கூரிய முள்போல நிறைய இரும்பு ஆணிகள் வெளியே அடிப்பாகத்தில் நீட்டிக் கொண்டிருக்கும். விலை மிகவும் அதிகம்.

'' சிங்கப்பூரு லாடம் எங்கிட்டே இல்லிங்களே. அது சோடி நாலணாங்காட்டியும்.''

''இருந்தால் என்ன, போடக்கூடாதோ... சரிசரி அது இல்லாம பூட்ஸ் எனக்கெதுக்கு?''


ஐஸ் டீயை
நீங்கள் ஏன் முயற்சித்துப் பார்க்கக்கூடாது?
அமெரிக்காவில் மக்கள் ஐஸ் டீயை காலன் காலன்களாக அருந்துகிறார்கள்! ஏன்?
ஏனென்றால் அது உங்களை சாந்தப்படுத்தி, புத்துணர்வூட்டி உங்கள் வேலையை புதுத் தெம்புடன் எதிர்பார்க்கச் செய்கிறது

வந்தவன் திரும்ப ஆரம்பித்தான்.

"அட இருங்க, நான் அந்த வாடம் நாலு சோடி வாங்கி அடிச்சி வைக்கிறேன். நீங்க வெளியிலே போய் விட்டு வாங்க...செஞ்சு வைக்கிறேன்."

குழைந்து பேசினான்.

"உம். நல்லா செஞ்சு வையி" என்று சொல்லிவிட்டு அவன் போய் விட்டான்.

அருள்தாஸ் 'வாங்கி அடிச்சு வைக்கிறேன்' என்று சொல்லி விட்டானே தவிர அவனிடத்தில் ஒரு ரூபாய் ஏது? அவன், விழுந்திருந்த இலைகளை நீக்கி விட்டுத் தோல் பையைத் தூக்கி அதைத் துழாவினான். கருத்துக்கிடந்த இரண்டணா நாணயம் அவன் கரத்தைத் தஞ்சம் அடைந்தது. அதை வைத்துக் கொண்டு என்ன செய்வது? அந்தப் பூட்ஸை விற்றால் குறைந்தது எட்டு ரூபாயாவது கிடைக்கும். அதை விட்டுவிடலாமா?

மேரி அப்போது கஞ்சிக் கலயத்தோடு வந்தாள். அவளுடன் இருதயராஜும் வந்தான். அருள்தாஸோ எண்ணக் கடலிலே மூழ்கியிருந்தான். எப்படி ஒரு ரூபாய் சம்பாதிப்பது என்ற பிரச்னை மலைபோல எதிரே நின்று கைகொட்டிச் சிரித்தது.

"இன்னா இது, மணி அடிச்சதுகூடக் காதிலே விழாம குந்திக்கினு இருக்கிங்களே!"

"......"

"அடஉங்களைத்தான்!"

அருள்தாஸின் கிழிந்த கோட்டை உசுப்பினாள் மேரி.

"உம். என்ன....சிங்கப்பூர்வாடம். ஓ,மேரியா!"

"ஆமாம், நானு கஞ்சியைக் கொடுத்திட்டு இப்படியே ராஜைக் கூட்டிக்கினு வெளியே போவலாம்னு நெனைச்சேன்."



"எங்கே போவப் போறே?"

"எங்கியுமில்லே."

"இல்லே நயினா, செருப்பு வாங்கப் போறோம் நாங்க!"—ராஜ் மெதுவாகக் குட்டை உடைத்து விட்டான்.

"செருப்பா?"

"ஆமாம், ஆமாம். நீங்கதான் கொளந்தைக்கு ஒண்ணு செஞ்சு குடுக்க மாட்டேன்னு சொல்லிட்டிங்க. கடைத் தெருவுக்குப் போயாவது யாருக்கிட்டேயாவது கொளந்தைக்குச் செருப்பு வாங்கிடலாம்னு" என்று மேரி ஆத்திரத்துடன் பேசினாள்.

"உம். அது சரி, காசு ஏது?"

"பக்கத்து வீட்டுப் பீட்டர் அம்மாகிட்டே ஒரு ரூபாய் கடனுக் கேட்டு வாங்கிக்கிட்டு வந்தேன்."

"எங்கே காட்டு, பார்க்கலாம்!"

"ஊஹூம்."

"அட! காட்டுன்னு."

மேரி சுருக்குப் பையை அவிழ்த்து ரூபாய் நோட்டைக் காண்பித்தாள்.

அதை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டான் அருள்தாஸ்.

"அட இது என்ன வெளையாட்டு?"

"விளையாட்டு இல்லே, நல்ல கிராக்கி ஒண்ணு புடிச்சிருக்கேன். பூட்சுக்கு வாடம் அடிச்சுப் போடணும். ரூவா ஒண்ணு வேணும். சமயத்துக்கு நீ வந்தே!"

"அட ஆளைப் பாரு ஆளை, இங்க அதைக் குடுத்துப் பூடுங்க. கடனே உடனே வாங்கிக் கொளந்தைக்கு வாங்கிடலாம்னு அப்பவும் சுவருமாதிரி குறுக்கே நிக்கிறீங்களே. இந்தாங்க, இப்படிக் கொண்டாங்க அதை!"

"சும்மாயிரு. இதுலே வாடம் வாங்கிக்கினு வாரேன். எட்டு ரூபாயல்ல கிடைக்கும் இந்தக் கிராக்கிக்கு!"

"அடப் பாவி!"

"உம், இதைப் பார்த்துக்க...நான் வாங்கிக்கினு ஓடியாறேன்."

பழஞ் செருப்பை மாட்டிக் கொண்டு கடைத் தெருவுக்கு ஓடினான் அருள்தாஸ்.

மேரி இடிந்து போய் உட்கார்ந்தாள். "இதுக்குத்தான் நானு சொல்லாம மறைச்சுப் போடலாம்னு நெனைச்சேன். இது சொல்லிடுச்சே!"

இருதயராஜ் இலைச் சருகுகளை அளைந்து கொண்டிருந்தான்.

அருள்தாஸ் கையிலே சிங்கப்பூர் வாடத்தோடு வேகமாக வந்தான்.

"யாரானும் வந்தானுங்களா?"

"ஒத்தரும் வரலே."

தாஸ் வாடத்தை எடுத்துப் பூட்ஸிலே அடித்தான். "ஆத்தாடி! இன்னா வாடங்க இது பல்லுக்கணக்கா நீட்டிக்கிட்டு இருக்குதே!"

"உஸ்...!"

வாடம் அடித்த பிறகு, பாலிஷை நன்கு வழித்தெடுத்து அதிலே அப்பித் தடவினான். சிறிது நேரத்தில் கண்ணாடியை உருக்கித் தடவிய மாதிரி பளபளத்தது அந்த பூட்ஸ். ராஜ், தாஸ் பக்கத்தில் உட்கார்ந்து இதை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் சின்ன முகம் அதிலே பளிச்சென்று நன்கு தெரிந்தது.

"அப்பாடி!" தாஸ் பாலிஷ் போடுவதை முடித்துவிட்டு அந்த ஜோடி பூட்ஸைக் கட்டை மேலே வைத்து அழகு பார்த்தான்.

"மேரி, இங்கேயே இரு. சர்ச்சுக்குப் பின்னாடி குழாய் இருக்குது. தண்ணி குடிச்சிட்டு ஓடியாந்திடறேன்."

"உம்" என்று முக்கிக் கொண்டே எழுந்தான் அருள்தாஸ். மரத்தோடு மரமாகக் கால்களும் மரத்துப் போயிருந்தன.

அமைதியைக் கிழித்துக் கொண்டு குருவிகள் கூச்சலிட்டன. சர்ச் மாடத்திலே குடியிருந்த புறாக்கள் கொம்மாளமிட்டன. பருந்துகள் கோபுரத்தின் உச்சியில் உட்கார்ந்து ஊரை நோட்டம் விட்டன.

தாஸ் மெல்லக் குழாயடிக்குச் சென்று தண்ணீர் குடித்தான். எட்டு ரூபாய் கிடைக்கும் என்ற சந்தோஷம் நெஞ்சை நிரப்பியது. தள்ளாடிக் கொண்டே மரத்தடிக்குத் திரும்பினான் அருள்தாஸ்.

"அட ராசகேல்..."

அருள்தாஸ் கூவினன். இருதயராஜ் இரண்டு கால்களையும் ஒரே பூட்டில் நுழைத்துக் கொண்டு நின்ருன். இன்னொரு பூட்ஸ் மண்ணிலே தலைகுப்புற விழுந்திருந்தது.

அருள்தாஸ் பதறி ஓடினன். "மேரி, என்ன எங்கேயோ பார்த்துக்கிறு உட்கார்ந்திருக்கியே" என்று கூவிக்கொண்டே 'சரக்'கென்று இருதயராஜைப் பிடித்து இழுத்தான். குழந்தை தலைகுப்புற விழுந்தது.

"பாவி கெடுத்திட்டியே. பாவிஞ உசிரு போகப் போட்டு வைச்சிருக்கேன்."

சருகிலே பற்றிய தீ போலக் கோபம் பற்றி எரிந்தது.

"இந்தக் கால்தானே விஷமம் செய்தது" என்று கீழே கிடந்த பூட்ஸை எடுத்துப் பட் பட் என்று அடித்தான் அருள்தாஸ்.

"ஐயோ அம்மா!"

"அட மிருகமே, ஐயோ லாடம் போட்டிருக்கிற பூட்ஸாலே..." மேரி தாவி ராஜை வாரி எடுத்தாள்.

லாடத்தின் கால் அங்குலப் பற்கள் காலிலே புதைந்து, நொறுக்கி, குருதி ஊறிக் கசிவாக வழிந்தது.

"ஆ...அம்மா!"

"ஐயோ! கருத்தரே..." மேரி அலறினள். இருதயராஜின் வலது கால் ரத்தம் வழிந்து செப்பு பூட்ஸாக மாறியது. அருள்தாஸ் திகைத்து அமர்ந்துவிட்டான். மேரி ராஜைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடிவிட்டாள்.

மாதாகோவில் மணி அடித்தது. தாஸின் கரம் தானகவே வணங்கியது. சிலுக்கு மணியைக் கையிலே வைத்துக் கொண்டு சிலையாய் உட்கார்ந்தான் தாஸ். அவனுக்கு ஒன்றும் ஓடவில்லை.

"இன்ரு. இந்தாப்பா, நான் கடையிலேயே பூட்ஸ் வாங்கிக்கிட்டேன். எனக்கு இந்தப் பூட்ஸ் வாண்டாம்" என்ற குரல் அவனைத் தலை சுற்ற வைத்தது. வந்தவன் போய் விட்டான். இரண்டு பூட்ஸும் அவனைப் பார்த்துக் கேலி செய்து கொக்கரித்தன.

அந்தப் பூட்ஸை எடுத்துப் பார்த்தான். இருதயராஜின் கால் ரத்தம் அதிலே ஒரு துளி சிந்தியிருந்தது.

* * *

நான்கு நாட்கள் கழிந்தன. இருதயராஜைக் காலிலே கட்டுப் போட்டுக் கட்டிலிலே படுக்க வைத்திருந்தாள் மேரி. அருள்தாஸுடன் அவள் பேசவே இல்லை. அவன் நெஞ்சைப் பிழிந்தது அந்த மௌனமும், அவள் செயலின் திண்ணப்பும்.

அன்றைக்கும் மரத்தடியிலே கண்களிலே நீர் வழியச் செருப்பு தைத்துக் கொண்டிருந்தான் தாஸ். "ஐயோ! என்னைக் கர்த்தர் மன்னிப்பாரா? குழந்தை கிட்டே அன்பு செலுத்தினல் குமாரனுகிய இயேசு கிட்டே பரிசுத்த அன்பு கொண்ட மாதிரி ஆகுமென்று சாமியார் சொன்னரே.......அதனலேதான் இயேசு, குமாரனும் அவதாரம் செய்தார் என்று சொன்னரே....எனக்கு மன்னிப்பே கிடையாதா?" சிலுக்கு ஊசி தோலைத் துளைப்பது போலச் சாமியாரின் பிரசங்கம் அவன் நெஞ்சைத் துளைத்தெடுத்தது அருள்தாஸுக்கு. 'இரத்தம் சிந்துதலில்லாமல்

மன்னிப்பு உண்டாகாது' என்று எபிரேயர் சொன்னது நினைவுக்கு வந்தது. கண்களிலிருந்து நீர் தாரையாக வழிந்து விழித்த கோட்டை நனைத்தது. கைகள் தானாகவே சிறுக்கு ஊசியுடன் தன் தொழிலைச் செய்து கொண்டிருந்தன.

சரக்....

"ஆ, அன்னையே!"

ஊசி கையில் இறங்கி விட்டது.

"ஆ, என்னைக் கருத்தர் மன்னித்து விட்டார். நான் ரத்தம் சிந்தி விட்டேன். கருத்தர் என்னை மன்னித்து விட்டார்."

அருள்தாஸ் வெறி பிடித்தவனாகக் கூவினான். "மன்னித்து விட்டார்" என்று மாதா கோவிலிலிருந்து எதிரொலி முழக்கமிட்டது!

தோல் பையைத் தூக்கிக்கொண்டு வீடு நோக்கி ஓடினான்.

"மேரி.....ராஜ்." அருள்தாஸ் கூவிக் கொண்டே நுழைந்தான்.

அங்கே யாரையும் காணோம். கட்டில் வெறிச்சென்று இருந்தது!

"மேரி கொளந்தையைத் தூக்கிகிட்டு ஆசுபத்திரிக்குப் போயிருக்கா" என்றாள் பக்கத்து வீட்டு அம்மாள்.

"பணம் ஏது?"

"நான் அஞ்சு ரூபா கொடுத்தேன்."

தன் தோல் பையை விசிறி எறிந்து விட்டு அவன் ஆஸ்பத்திரிக்கு ஓடினான். அங்கே டாக்டர் மேரியிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

"மேரி மேரி, கொளந்தை எங்கே?"

மேரி குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

டாக்டர் அருள்தாஸைத் தனியாக அழைத்துச் சென்றார்.

"இதோ பாருப்பா, கொளந்தைகாலு 'செப்டிக்' ஆகி விட்டது. நரம்பெல்லாம் பிசகி விட்டது. அவன் உயிரோட இருக்கணுமின்னா..."

"என்ன டாக்டர் செய்யணும் அவன் உசிரோட இருக்கணுமின்னா.." தாஸ் அலறினான்.

"நீங்க ஒண்ணும் செய்ய வேண்டாம். அந்தப் பாதத்தை எடுத்துடணும்."

"ஐயோ, டாக்டர்!" அருள்தாஸ் கூவிக் கீழே உட்கார்ந்தான்.

இரண்டு நாட்கள் கழித்துக் தாஸிடம் குழந்தையை ஒப்படைத்தார்கள். அழகான கால் இப்போது தீப்பந்தத்துக்குத் துணி சுற்றின மாதிரி 'பாண்டேஜ்' கட்டப்பட்டு மொண்ணையாக இருந்தது.

"ஐயோ என் கண்ணே!" மேரியின் பெற்ற வயிறு அலறியது. தாஸ் குமுறினான்.

"இன்னொரு விஷயம், நாலு நாளிலே கட்டை அவுத்துடுங்க. அப்புறம் அந்தக் காலுக்கு பூட்ஸ் ஒண்ணு அவசியமா போடணும்" என்று டாக்டர் சொன்னார்.

நான்கு நாட்களில் இருதயராஜின் கால் கட்டை அவிழ்த்தான் தாஸ்.

"ஐயோ என் செல்வமே!" அழகான பாதங்களையும், உறுதியான பாதங்களையுமே பார்த்து ரசித்த அவன் இரும்பு உலக்கை போல பொழுமொழு வென்றிருந்த வலது காலைக் கண்டு அலறினான், துடித்தான், அதைப் பிடித்துத் தடவினான்.

விவாஹம்



குடந்தை நகராட்சித் தலைவரும் இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டின் நிர்வாக டைரக்டருமான டாக்டர் வி. ஆர். மூர்த்தியின் புதல்வன் சிரஞ்சீவி ஜோதிர்மயத்திற்கும் சென்னை ஸ்ரீ கே. வெங்கடேசுவர அய்யரின் புத்திரி சௌ. ஜெயலக்ஷ்மிக்கும் ஜூன் 2-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கும்பகோணம், டவுன் எக்ஸ்டென்ஷன், ஸ்ரீநகர் காலனியில் விவாஹம் வெகு சிறப்பாக நடைபெற்றது. காலையில் நடைபெற்ற முகூர்த்தத்திற்கும் மாலை வரவேற்பிற்கும் ஏராளமான பிரமுகர்களும், நண்பர்களும் விஜயம் செய்து சிறப்பித்தனர். கனம் மந்திரி மாணிக்கவேல் நாயகரும் திருமண வைபத்துக்கு விஜயம் செய்து மணமக்களுக்கு நல் வாழ்த்துக் கூறிக் கௌரவித்தார். மாலையில் வரவேற்பின் பொழுது ஸ்ரீமதி எம். எல். வஸந்தகுமாரியின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

தெரியுமா உங்களுக்கு?

ரசாயன ஆராய்ச்சியினால் ஏற்பட்டுள்ள அற்புதங்கள் எண்ணில் அடங்கா. வாழ்க்கையின் பல துறைகளிலும் இன்று ரசாயனக் கலை ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அது இல்லாவிடில் இன்று மனிதரின் வாழ்க்கையே ஸ்தம்பித்து விடும் என்பதில் ஐயமில்லை. ரசாயன சக்தியால் ஏற்படும் மாறுதல்கள் ஆச்சரியகரமானவை. உதாரணமாக இரும்பு துருப்பிடிப்பதற்குக் காரணம் ரசாயன மாறுதல்தான். அது துருப்பிடிக்காமல் பாதுகாப்பதற்கும் ரசாயனமே உதவி செய்கிறது.

கரி எரிந்தபின் சாம்பலாகி விடுகிறது. கண்ணுக்குத் தெரியும் தண்ணீர் நீராவியாக மாறி மறைந்து விடுகிறது. துத்தநாகப் பாத்திரத்தில் சில ரசாயனப் பொருள்களை ஒன்று சேர்ப்பதன் மூலம் மின்சார சக்தி உண்டாக்க முடிகிறது. ரசாயன சக்தியால் உணவுப் பொருள்களும் மாறுகின்றன.

ஒரு புத்தகத்தை எடுத்துக் கொள்வோம். அந்தப் புத்தகத்தின் வண்ண அட்டை ரசாயனத்தின் உதவியால் செய்யப்பட்டதாகும். மரத்தின் தசையை ரசாயன உதவியால் மாற்றியே காகிதம் செய்கிறார்கள். பல்வேறு ரகமுள்ள காகிதங்களின் உற்பத்திக்கும் ரசாயன முறைதான் இன்றியமையாததாக இருக்கிறது.

அச்சடிக்கும் மை ரசாயனச் சேர்க்கையினாலேயே உருவாகிறது. புத்தகத்தில் உள்ள படங்களைத் தயாரிப்பதற்கும் ரசாயனப் பொருள்கள்தான் அத்தியாவசியமாக இருக்கின்றன. ரப்பர் போன்ற இயற்கைப் பொருள்களைக்கூட ரசாயனத்தின் உதவியால் சிருஷ்டிக்கத் தொடங்கி, அதில் மகத்தான வெற்றியும் பெற்று வருகிறார்கள்.

மக்களின் ஆரோக்கிய வாழ்க்கைக்கும் நோய்களைக் கண்டு பிடித்துப் பரிகார முறைகளைக் கைக்கொள்வதற்கும் ரசாயனம்தான் பெருதவியாக இருக்கிறது. மனிதரின் உடலில் அவர்கள் உட்கொள்ளும் உணவு எப்படி வேலை செய்கிறது? மனிதரின் ஆரோக்கியத்துக்கு அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் எவை? இந்த உண்மைகளைக் கண்டு பிடிக்க நிபுணர்கள் ரசாயன முறைகளின் உதவியையே நாடவேண்டியிருக்கிறது. பலவித நோய்களுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லும் வழியையும் ரசாயன முறைகளால் தான் கண்டு பிடித்துள்ளனர்.

இப்போது வலி எதுவும் இல்லாமல் ரண சிகிச்சை செய்கிறார்கள் அல்லவா? அந்த அற்புதமான சாதனைக்கும் ரசாயனமே காரணமாகும்.

ரண வைத்தியர் ஆப்பரேஷன் செய்யும் போது கத்தி கொண்டு தசையை அறுக்கிறார். அப்போது இரத்தக் குழாய்களை அறுக்க நேரும். இரத்தமே உடம்பின் எல்லாப் பகுதிகளுக்கும் ஊட்டப் பொருள்கள் கொண்டு போய்க் கொடுக்க உதவுகின்றது. அதனால் திடீரென்று இரத்தத்தை மிகுந்த அளவில் அப்புறப்படுத்தினால் உடலுக்குப் பெரும் தீங்கு நேரும். அதனால் இயன்ற மட்டும் குறைந்த அளவு ரத்தம் சிந்துமாறு ஆப்பரேஷன் செய்து, உடலிலுள்ள இரத்தத்தைக் கூடிய மட்டும் பாதுகாக்க வேண்டியது ரண வைத்தியருடைய கடமையாகும். இரத்தம் அதிகம் வடியாமலிருக்கச் செய்ய அலகப் பெர்குளோரைடு, டானிக அமிலம், வெள்ளி நைட்ரேட்டு போன்ற இரத்தத்தை உறையச் செய்யும் ரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவார்கள். செடிகளிலிருந்தும் மிருகங்களிடமிருந்தும் கிடைக்கும் இயற்கை மருந்துச் சரக்குகளைக் கூட இன்று ரசாயனத்தின் உதவி கொண்டு செயற்கை முறைகளால் தயாரித்து வருகிறார்கள். கொயினா மாத்திரைக்குப் பிரதியாக இப்போது செயற்கை மாத்திரைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மக்களின் ஆரோக்கிய வாழ்க்கைக்கு இன்றியமையாத தண்ணீரைச் சுத்தப்படுத்தவும் ரசாயன முறைதான் இன்றியமையாததாகஇருக்கிறது.

"மேரி, நான் போய் வாரேன் மரத்தடிக்கு."

தாஸ் தோல் பையைத் தூக்கிக் கொண்டு மரத்தடிக்கு ஓடினான். உயர்தரக் கான்பூர் தோலை எடுத்து வைத்தான். ராஜுக்குப் பூட்ஸ் ஒன்று செய்து முடித்தான்.

பிறகு...

ஐயோ! அதை நினைக்கவே நெஞ்சம் கூசியது.

வலது காலுக்கும் ஒன்று செய்தான். பூட்ஸா அது? அதுபோல அவன் வாழ்க்கையிலேயே செய்ததில்லையே! வட்டமாகப் படி போலத் தோலைவெட்டி.....ஆமாம், அது தானே அந்தக் காலுக்குப் பொருந்தும். கண்ணீர் தோலை நனைத்தது. பூட்ஸைச் செய்து விட்டுப் பார்த்தான் தாஸ். தோலிலே செய்த பாத்திரம்போல அது இருந்த கோலத்தைக் கண்டு நெஞ்சம் விம்மியது.


அந்தப் பூட்ஸிலே வெப்புச் சாயத்தைப் பூசிக் குழைத்தான். அழகாகப் பாலிஷ் போட்டான். அதை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு ஓடினான்.

"ராஜு...செல்லமே...இதைச் சரியாய் இருக்கான்னு போட்டுப் பாருடா" என்று அவனை அருகிலே அணைத்து இழுத்து அதைப் போட்டுக் கொள்ளச் செய்தான் தாஸ்.

வாழைத்தண்டு போல இருந்த வலது கால், குழியிலே கொம்பை நடுவதுபோலப் பூட்ஸிலே அமுங்கியது.

பூட்ஸ் கிடைத்த பெருமையுடன் நொண்டி நொண்டிச் சென்ற இருதய ராஜைக் கண்களிலே நீர் மறைக்க மேரியும், தாஸும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இந்தக் கதையில் வரும் ஒரு காட்சிதான் இவ்வாரத்து அட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது.


மரச்சாமான்களைக் காப்பாற்றுவது அவசியம்
மரச்சாமான்கள் எந்த மரத்திலும் செய்யப்பட்டிருந்தாலும், அவைகளின் மேற்புறம் எப்படி இருந்தாலும், அவைகளுக்கென்று இருக்கும் ஷாலிமார் பெயின்டைப் பூசினால், அச்சாமான்கள் அதிக காலம் உழைப்பதுடன், பார்ப்பதற்கு அதிக வசீகரமாகவும் இருக்கும்.
. . . ஏனெனில், இந்தியாவில், ஷாலிமார் பெயின்ட் கம்பெனியாருக்கு மாத்திரம் தான், 55 வருடத்திற்கு மேலாக பெயின்ட் தயாரிக்கும் அனுபவம் இருக்கிறது. ஷாலிமார் பெயின்ட்கள் இந்தியாவின் பலவித கடுமையான சீதோஷ்ண நிலைமைகளையும் தாங்கக்கூடும் என்பதற்கு, ஷாலிமாரின் பரந்த ஆராய்ச்சியும், தொடர்ந்த முன்னேற்றமுமே அத்தாட்சியாகும்.
எந்த உபயோகமாயினும், பெயின்ட் ஆர்டர் செய்யும் பொழுது, அவ்வுபயோகத்தை தெரியப்படுத்தவும்.
ஷாலிமார்
பெயின்ட்கள்
SHALIMAR
SPW 357R


இருட்டு நேரங்களில்
உங்களுக்கோர்
வழிகாட்டி
BRIGHT LIGHT
LONG LIFE
ESTRELLA BATTERIES LTD.
BOMBAY
எஸ்ட்ரேலா
எஸ்ட்ரேலா பாட்டரீஸ் லிட்.
பம்பாய்—மதராஸ்—டில்லி—நாகப்பூர்—கல்கத்தா—கான்பூர்


உங்கள் வாழ்க்கையை
மலச் சிக்கல்
ஒரு பாரமாக்க வேண்டாம்.
FOR CONSTIPATION
BROOKLAX
CHOCOLATE LAXATIVE
ப்ரூக்லாக்ஸ்
ஒரே இரவில்
இன்டெண்டிங் ஏஜண்டுகள் :
99-A. அரமனைக்காரத் தெரு, மதராஸ்-1



பாலர் மலர்
அப்பா தந்த புத்தகம்!
அப்பா வாங்கித் தந்தது
அருமையான புத்தகம்!
அதில் இருக்கும் படங்களோ
ஆஹா, மிக அற்புதம்!
யானை உண்டு, குதிரை உண்டு,
அப்பா வாங்கித் தந்தது
அருமை யான புத்தகம்!
அழ.வள்ளியப்பா

மணப்புயல் சித்திரத் தொடர் கதை ⑦





என்ன, போனதும் திரும்பிவிட்டீர்களே?
விழா முடிந்து விட்டது; வந்து விட்டேன், ஹேமா!
மறுநாள் காலை பொழுது விடிந்தது.
ஐயா! சப் இன்ஸ்பெக்டர் ஐயா வீட்டில் நேற்றிரவு வைர நெக்லஸ் திருட்டுப் போய்விட்டது. உங்கள் மீது சந்தேகம். உங்கள் வீட்டைச் சோதனை போட வந்திருக்கிறோம்!
சப் இன்ஸ்பெக்டரும் வந்து சேர்ந்தார்.
என்ன பராங்குசம்? உனக்குக் கூடவா என் மீது சந்தேகம்?
சோதனை நடக்கட்டும்!
ஸார்! இதோ நீங்கள் அடையாளம் கூறிய நெக்லஸ் கிடைத்துவிட்டது! கீதாவின் மேஜையில் கிடந்தது!
தொடரும்

பாலர் மலர்

செய்து பாருங்கள்

ஒன்று என்று போடப்பட்டிருக்கும் படத்தில் உள்ள பையன்களுக்கு 'விழி' போடவில்லை. விழிகள் [illegible] இரண்டு என்று போடப்பட்டுள்ள படத்தில் இருக்கின்றன. முதல் படத்தில் கண்ணைக் கத்திரித்துப் புள்ளிக் கோடுகள் ஓரமாகக் எடுங்கள். பிறகு அந்தப் பக்கவாட்டில் படத்தில் கோடுகள் புள்ளிக் போட்ட இடத்தில் அதன் பக்கமாக வெட்டித் துவாரம் செய்து கொண்டு, நம் விழிகள் உள்ள இமே அந்துவாரங் படத்தை களில் செலுத்துங்கள். பக்கவாட்டில் இழுத்தால் பையன்களின் கண்கள் உருட்டி பலவிதமாக விழிப்பதைக் காணலாம்.



இந்தப் படத்தில் புள்ளியிட்ட இடங்களை வர்ணம் செய்தால் இரண்டு உருவங்கள் வெளிவருவதைக் காணலாம்.







மாயப் பந்து

12. மந்திர மரம்!

அரண்மனையோ பார்ப்பதற்கு மிகவும் பெரிதாக இருந்தது. அதைச் சுற்றி இருக்கும் காவல்காரர்களைப் பார்த்தாலே மால்கோஷுக்குப் பயமாக இருந்தது. இவர்களை யெல்லாம் தாண்டி எப்படி உள்ளே போவது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது மாலைப்பொழுது ஆனதால் அரண்மனை விளக்குகளெல்லாம் கொளுத்தப்பட்டன. அவை பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தன. அரண்மனையின் அழகைப் பற்றிச் சிந்தனை செய்து கொண்டு அரண்மனை வாசலில் மால்கோஷ் நின்று கொண்டிருந்தான்.

அப்பொழுது அரண்மனைக்கு உள்ளே பிரவேசிக்கும் அரசாங்க அதிகாரி கம்பீரத் தோற்றத்துடன் ஒரு அழகான வாலிபன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். “இந்தப் பட்டணத்துக்கு நீ புதிதுபோல் இருக்கிறதே. எதற்காக அப்பா நீ இங்கே நிற்கிறாய்? உள்ளே அரண்மனையைச் சுற்றிப் பார்க்க விரும்புகிறாயா?” என்று அந்த அதிகாரி கேட்டார்.

உடனே மால்கோஷ்தான் யார் என்றும், தான் எதற்காக அங்கே வந்திருக்கிறான் என்றும், அரசாங்கத்தில் வேலை பார்த்து வரும் குல்மாவின் உறவினன் என்றும் பதில் சொன்னான்.

மால்கோஷ் சொன்னதைக் கேட்ட அந்த அதிகாரி அவனைப் பார்த்து, “ஏன் அப்பா, இந்த அரசாங்க விஷயத்தில் தலை யிடுகிறாய்? பல மாதங்களாகக் காணாமல் இருக்கும் ராஜகுமாரியைத் தேடாதவர்கள் கிடையாது. அவளைத் தூக்கிக்கொண்டு போன மந்திரவாதி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்தில் கொண்டு போய் அவளை ஒளித்து வைக்கிறானாம். ராஜகுமாரியைக் கண்டு பிடிக்காமல் திரும்பியவர்களை யெல்லாம் மகாராஜா கடுமையாகத் தண்டிக்கிறார். கட்டாயம் உனக்கும் ஏதாவது தண்டனை கிடைக்கும். நீயோ பார்ப்பதற்கு ஒரு ராஜகுமாரனைப் போல அழகான தோற்றமுடையவனாக இருக்கிறாய். மகாராஜாவோ மிகவும் பொல்லாதவர். அதுவும் சில மாதங்களாக, ராஜகுமாரியைக் காணாததிலிருந்து அவனது மன நிலைமை சரியாக இல்லை. உனக்குப் பிரியம் இருந்தால் நான் உன்னை அரசர் முன்னிலையில் அழைத்துச் செல்லுகிறேன். உன் எண்ணங்களை யெல்லாம் அவரிடம் சொல்லு” என்று கூறி அவர் அவனை அரண்மனைக்குள் அழைத்துச் சென்றார்.



அதிகாரி மால்கோஷை அரசன் எதிரில் கொண்டு வந்து நிறுத்தி அரசனிடம் எதற்காக அவன் வந்திருக்கிறான் என்பதையும் தெரிவித்தார்.

அச்சமயத்தில் அரசன் மிகவும் கோபமாக இருந்தான். " ஹா ஹா ஹா " என்று பெரிதாகச் சிரித்துவிட்டு, " யார் யாரோ வந்து எனது அன்பான "ரூபியா"வைக் கண்டு பிடித்துத் தருகிறேன் என்று சொல்லிவிட்டு ஏமாற்றமடைந்து எனது தண்டனையும் பெற்றிருக்கிறார்கள். உன்னால் என்ன முடியும்? உன்னைப் பார்த்தால் நல்ல உயர் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று தோன்றுகிறது. மிகவும் அழகான வாலிபனுமிருக்கிறாய். நீ இந்த விஷயத்தில் தலையிட வேண்டாம். தயவு செய்து திரும்பிப் போய்விடு" என்ற அரசன் சொன்னான்.

அரசன் அப்படிச் சொல்லுவான் என்று மால்கோஷ் எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல், " அரசே ! அப்படிச் சொல்லாதீர்கள். எனக்குத் தகுந்த உதவி கொடுத்தீர்களானால் நான் முயற்சி செய்து உங்கள் ராஜகுமாரியைத் திருப்பிக் கொண்டு வருவேன். என்னிடத்தில் மந்திரப் பந்து இருக்கிறது. அதன் உதவியால் நான் வெற்றி பெறுவேன். தயவுசெய்து உத்தரவு கொடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டான். ஆனால் அரசனுடைய கோபம் அதிகரித்தது. " இந்த இடத்தை விட்டுப்போ. உன் மந்திரப்பந்து ஒன்றும் அந்த மந்திரவாதியிடம் பலிக்காது. என் நேரத்தையும், உன் நேரத்தையும் வீணாக்காதே. போ " என்றான் அரசன்.


ஆனால் மால்கோஷ் அவ்விடத்தை விட்டு நகருவதாகத் தெரியவில்லை. மறுபடியும் " அரசே! அப்படிச் சொல்லக் கூடாது. எனக்குத் தகுந்த உதவி கொடுங்கள். நான் ராஜகுமாரியைக் கண்டு பிடித்து வருகிறேன் " என்று சொல்லவே அரசனுக்குக் கடும் கோபம் வந்தது. உடனே அரசன் " என் குமாரி ரூபியாவைக் கண்டு பிடித்து வர வேறு ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். அதனால் நீ போகலாம் " என்று உத்தரவிடவே மால்கோஷுக்கு என்ன செய்வது என்று புரியாமல் அரசனுக்கு எதிரிலேயே நின்றிருந்தான்.

" இவனை இந்த இடத்தை விட்டு அகற்றச் சொல்லுங்கள். நான் என்ன சொல்லியும் கேளாமல் உபத்திரவம் செய்ததற்காக அவனை அரண்மனை வாசலுக்கருகில் உள்ள ஒரு மரத்தில் சற்று நேரம் தலைகீழாகக் கட்டிவிட்டுப் பிறகு அவனை அவன் வந்தவழியே செல்லும்படி செய்யுங்கள் " என்று உத்தரவிடவே, இரண்டு மூன்று வேலையாட்கள் மால்கோஷை வேகமாக இழுத்துச் சென்று அரண்மனைக்கு வெளியே கொண்டு வந்தார்கள்.

அரசன் கட்டளைப்படி அருகே இருந்த மரத்தில் அவனைத் தலைகீழாகக் கட்ட ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். பாவம், மால்கோஷ்! அரசன் கட்டளைக்கு எதிராக அவன் என்ன செய்ய முடியும்? அவனைத் தலைகீழாகக் கட்டும்பொழுது எங்கேயாவது தவறி மாயப் பந்து கீழே விழுந்து விடப் போகிறதோ என்று பயந்து தன் கையினால் பந்து வெளியில் வராதபடி சட்டைப் பையைப்பிடித்துக்கொண்டான். அந்தச் சமயம் அவனது மற்றொரு பையில் வைத்திருந்த மந்திரக் கிழவி கொடுத்த விதை கீழே விழுந்தது.

விதை கீழே விழுந்ததுதான் தாமதம் : ஒரு மரம் விதை விழுந்த இடத்திலேயே மேல்நோக்கி வளர்ந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த மால்கோஷ் அப்பொழுதுதான் மந்திரக் கிழவி கொடுத்த வித்தினால் வந்த மரம் அது என்று அறிந்தான். உடனே அந்த மரத்தைப் பிடித்துக் கொண்டு அது வளர்ந்து போகிற பக்கமாகவே மரத்தைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறிப் போய்க் கொண்டிருந்தான்.

மால்கோஷைத் தலைகீழாகக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த அரசாங்கச் சிப்பந்திகள், திடீர் என்று ஒரு மரம் தோன்றியதையும், அது வளர்ந்து கொண்டு போவதையும், அதன் வழியாக மால்கோஷ் மரத்தைப் பற்றிக் கொண்டு போவதையும் பார்த்து, பிரமித்து நின்றார்கள். உடனே அரச





இங்கிலாந்துக்குச் செல்லும் திரு சுந்தரவுக்குத் தில்லி எழுத்தாளர்கள் 2-6-57 அன்று விருந்தளித்துக் கௌரவித்தார்கள். திருவாளர்கள் புரசு பாலகிருஷ்ணன், தி. முத்துஸ்வாமி (நான்), கஜமுகன், கே. எஸ். அம்புநாதன், எஸ். ஸ்ரீனிவாசன், பூர்ணம் விசுவநாதன் முதலிய அன்பர்கள் விருந்தில் கலந்துகொண்டு, ஸ்ரீ சுந்தரவின் லண்டன் வாசம் இனிமையாகவும் இன்பமாகவும் இருக்க வேண்டும் என்று வாழ்த்தினார்கள்.

னிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்தனர். அரசன் ஓடோடியும் வந்து அரண்மனை வாசல் பக்கம் பார்க்கவே, புதிதாக ஒரு மரம் முளைத்து இருப்பதைப் பார்த்துப் பிரமித்து நின்றான். புதிய மரம் வெகு தூரம் கண்ணுக்கு எட்டாத வரையில் வளர்ந்து கொண்டு போவதையும் பார்த்தான். மேலும் தான் விரட்டியடித்த சிறுவனுடைய முயற்சியினால்தான் இந்த மந்திர மரம் தோன்றியிருக்கிறது என்பதை யறிந்துகொண்ட அரசன் மிகவும் திகைப்படைந்தான்.

உடனே சிப்பந்திகளைக் கூப்பிட்டு, "இந்த மரத்தை மிகவும் ஜாக்கிரதையாக ஒருவரும் அதனருகில் போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வந்தவனை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. பார்த்தால் அவனிடம் ஒரு மந்திரவாதியிடம் இல்லாத புதிய சக்தி இருப்பதுபோல் தோன்றுகிறது. இதனால் ஏதாவது நன்மை வரும் என்றுதான் தோன்றுகிறது. இரவு முழுவதும் அதனருகிலே காவலுக்கு இருங்கள்" என்று சொல்லிவிட்டு அரசன் உள்ளே போனான். அரசனின் கட்டளையை நிறைவேற்றச் சேவகர்கள் அந்த மரத்தைக் கண் கொட்டாது காவல் காத்து நின்றார்கள்.

அந்த மாயமரம் வளர்ந்து கொண்டே போயிற்று. அதைச் சளைக்காமல் மால்கோஷ் பின்பற்றிக் கொண்டே போனான். அந்த மரம் காட்டிலேயும், மலைகளின் மேலும் ஆற்றைக் கடந்தும் போய்க் கொண்டே இருந்தது. பாவம், மால்கோஷ் ஒரு துணையில்லாமல் தைரியமாக மரத்தின் மீது ஏறிக் கொண்டிருந்தான். அவனுக்கு எங்கு போனாலும் அப்பொழுது துணையாக இருந்தது வானத்தில் உதித்திருந்த சந்திரனும் நக்ஷத்திரங்களும்தான். அந்த மரம் வளர்ந்துகொண்டு போவதைப் பார்த்தால் ஆச்சரியமாகவே இருந்தது. அதற்கு எதிரில் மேலே போக முடியாமல் பெரிய மலைகள் தென்பட்டன. மலை உச்சி வரையிலும் வளர்ந்து பிறகு தாழ்ந்து வளர்ந்து கொண்டே போகும் மரம் ஒரு அடர்ந்த காடு வழியாக வளர்ந்து கொண்டே போயிற்று. அப்பொழுது சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய தீ உண்டாகி ஆகாயம் வரையிலும் உயர்ந்திருந்தது. அதைப் பார்த்ததும் மால்கோஷ் பயந்தான்.

காட்டுத் தீ என்றால் யார்தான் பயப்பட மாட்டார்கள்? எங்கே காட்டுத் தீ வழியாக மரம் வளர்ந்து கொண்டே போகுமோ என்ற பயந்த மால்கோஷ், மரம் வேறு திக்கை நோக்கி வளைந்து போனதைப் பார்த்து ஆனந்தப்பட்டான்.

மந்திரக்கிழவி கொடுத்து உதவிய விதையின் சக்தியை நினைத்துச் சந்தோஷப்பட்டான். அந்த இரவில் மந்திர மரம் சுற்றியும் வளைந்தும், வெகு உயரத்திலும் மிகவும் தாழ்ந்தும் சமயத்துக்குத் தகுந்தபடி வளர்ந்து கொண்டும் போயிற்று.

பல மைல்கள் போய்க் கொண்டே இருந்த அந்த மரம் கொடிய மிருகங்கள் வசிக்கும் வனப் பிரதேசத்தில், ஒரு மலைக் குகைக்கு எதிரில் பூமியைக் குத்தியபடி வளராமல் நின்றது.

அந்த மரத்தை விட்டு மால்கோஷ் அவசரம் அவசரமாகக் கீழே இறங்கினான். அந்த மந்திர மரம் இத்துடன் வளராமல் நின்றபடியால் இந்த மலைக் குகையில்தான் ஏதாவது விசேஷம் இருக்க வேண்டும் என்று கருதி மலைக் குகையை நோக்கி வேகமாகச் சென்றான். (தொடரும்)

மாதவியின் பிரார்த்தனை

கோபத்தோடு சென்ற கருணாகரன் நேரே மலைச்சாரல் பங்களாவில் போய்த் தன் தமக்கையைத் தேடினான். அவளிடம் தான் கண்டதைச் சொல்ல வேண்டுமென்று அவனுக்குத் தாபமாக இருந்தது. ஆனால் பூட்டியிருந்த கதவைப் பார்த்ததுமே மாதவி வீட்டில் இல்லை என்பது அவனுக்குத் தெரிந்து போயிற்று. தன்னிடம் இருந்த மற்றொரு சாவியால் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான்.

உள்ளே நுழைந்ததும், சிவசங்கரன் அங்கே வந்து விட்டுப் போயிருக்க வேண்டும் என்று அவனுக்குத் தெரிந்தது.





கூடத்தில் ஒரு தண்ணீர்ச் செம்பும், ஒரு டம்ளரும் இருந்தன.

கருணாகரனுக்கு எல்லா வற்றின் மீதும் வெறுப்பு பொங்கிக் கொண்டு வந்தது. ஜயந்தி, மாதவி, சிவசங்கரன், விஜயராகவன் இவர்கள் எல்லார் மீதும் அவனுக்குக் கசப்பு ஏற்பட்டது. 'என்ன உலகம்? இன்று நம்முடைய ஆப்தர்களாக இருப்பவர்கள் நாளை விரோதிகளாகி விடுகிறார்கள். இந்த மாதவிதான் எனக்காக எத்தனை உருகி யிருக்கிறாள்? இப்போது சிவசங்கரன் என்னைவிட உயர்ந்தவராகப் போய்விட்டார். அவர் வாக்கு அவளுக்குத் தேவ வாக்காகி விட்டது. என்னை லட்சியம் செய்கிறாளா?' என்றெல்லாம் நினைத்துக் கொண்டே குளித்து விட்டு வந்து உடை மாற்றிக் கொண்டான்.

கோவிந்தனும், ஜயந்தியும் பேசிய காட்சி அவன் கண் முன்னால் வந்து நின்றது. அவர்கள் பேசியது அவனுக்குக் கஷ்டமாக இல்லை. தன்னை ஜயந்தி அலட்சியம் செய்ததுதான் அவனுக்கு வருத்தமாக இருந்தது.

இப்படி அவன் குருட்டு யோசனை செய்து கொண்டிருக்கும்போது வெளியே பேச்சுக் குரல் கேட்டது. மாதவியும், சிவசங்கரனும் உள்ளே வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் கருணாகரனின் மனத்தில் புதியதொரு அமைதி ஏற்பட்டது. தூய அன்பினால் பிணைக்கப்பட்ட இருவருடைய உள்ளங்களிலிருந்து பெருகி வரும் அன்புப் பிரவாகம், அவர்கள் அருகில் இருப்பவர்களுடைய இதயங்களுக்கும் பாய்ந்து அமைதி பெறச் செய்து விடும் என்பதைக் கருணாகரன் அப்போது உணர்ந்தான்.

கருணாகரனுக்கு உடனே ஜயந்தியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. கோவிந்தனுடன் அவள் பேசிக் கொண்டிருந்ததற்காகத் தான் ஆத்திரமடைந்தது எவ்வளவு முட்டாள்தனம் என்று எண்ணி வெட்கப்பட்டான்.

"எப்போது வந்தாய் தம்பி?" என்று மாதவி கனிவுடன் கேட்டாள்.

"இப்போதுதான் வந்தேன், அக்கா!" என்றான் கருணாகரன்.

"ஜயந்தியைப் பார்ப்பதற்கு இன்று போகவில்லையா?" என்று கேட்டார் சிவசங்கரன்.

"நீங்கள் போகச் சொன்னால் நான் இப்போதே வெளியே போய் விடுகிறேன்" என்றான் கருணாகரன் இலேசாகச் சிரித்துக் கொண்டே.

"வேண்டாம்! வேண்டாம். நான் இப்போது வீட்டுக்குப் போக வேண்டும். என் நண்பர் ஒருவர் வருவதாகக் கூறியிருக்கிறார்" என்று சொல்லி விட்டு இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார் சிவசங்கரன்.

சிவசங்கரனைப் பார்க்க அன்று அச்சுதன் வருவதாகச் சொல்லி அனுப்பியிருந்தான். அதைக் கருணாகரனிடம் கூற அவர் விரும்பவில்லை. வீட்டு வாசலில் நுழையும்போதே கார் வரும் சத்தம் கேட்டது. ஆகவே வாசலிலேயே நின்றார் சிவசங்கரன்.

காரிலிருந்து முதலில் அச்சுதன் இறங்கினான். பின்னால் இறங்கிய ஒருவரை, "இவர்தான் என்னுடைய நண்பர் கோவிந்தன்" என்று அறிமுகம் செய்து வைத்தான் அச்சுதன்.

சீக்கிரத்தில் மூன்று பேரும் கலகலப்பாகப் பழகிப் பேச ஆரம்பித்து விட்டார்கள். கோவிந்தனின் சாமர்த்தியமான பேச்சு சிவசங்கரனைக் கவர்ந்தது.



அச்சுதன் சிவசங்கரனைப் பார்த்து, "நாளை இரவு நான் இவருக்காக ஒரு விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன். விஜயராகவனும் வருவதாகக் கூறியிருக்கிறார். நீங்களும் கட்டாயம் விருந்துக்கு வர வேண்டும்" என்றான்.

"அதற்கென்ன? பேஷாக வருகிறேன். விருந்து வேண்டாமென்று யாராவது சொல்வார்களா?" என்றார் சிவசங்கரன்.

"இந்த விருந்து எனக்காக நடக்கவில்லை, மிஸ்டர் சிவசங்கரன். இவனுக்கு நாளை பிறந்த தினம். அதற்காக ஆண்டு நிறைவு விழா கொண்டாடுகிறான். அதற்கு என் மேல் பழியைப் போடுகிறான்" என்றார் கோவிந்தன்.

"ஆண்டு நிறைவு விழாவா? அல்லது வேறு ஏதாவது விசேஷம் உண்டா? அச்சுதனுக்குத் திருமணம் செய்து வைக்க இவனுடைய தந்தை முயற்சி செய்வதாகக் கேள்விப் பட்டேனே?" என்றார் சிவசங்கரன்.

"என் விவாகத்தைப் பற்றித் தயவு செய்து பேச வேண்டாமே! எனக்கு அதைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய் விட்டது. இந்த ஜன்மத்தில் கல்யாணமே வேண்டாமென்று தோன்றும்படி செய்து விட்டார் என் தந்தை" என்றான் அச்சுதன் வருத்தத்துடன்.

"பெரியோர்கள் கல்யாணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டுதான் இருப்பார்கள். அதற்காக யாராவது வருத்தப் படுவார்களா? என் தாயார் கூட எத்தனையோ வருடங்களாக என் விவாகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறாள். அதற்காக என்ன செய்வது?" என்றார் சிவசங்கரன்.

"உங்கள் விஷயம் வேறு. என் விஷயம் வேறு. அது கிடக்கட்டும். நான் உங்களை ஒரு விஷயம் கேட்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். நாளை விருந்துக்குக் கருணாகரனைக் கூப்பிட வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது. கூப்பிடட்டுமா?" என்று கேட்டான் அச்சுதன்.

"உன் தந்தை அதை விரும்புவாரா?"

"அவர் ஒன்றும் சொல்ல மாட்டார்."

"இருந்தாலும் கருணாகரனை நீ கூப்பிட வேண்டாமென்றுதான் தோன்றுகிறது. அவன் சுபாவம்தான் உனக்குத் தெரியுமே? கூப்பிட்டு வரா விட்டால் உனக்குக் கஷ்டமாக இருக்கும். அப்படியே வந்தாலும் அவன் சரியாக நடந்து கொள்ள வேண்டும். ஏதாவது தாறுமாறாகப் பேசினால் உன்னுடைய தந்தைக்குக் கோபம் வரும். ஆகவே கூப்பிடாமல் இருந்து விடுவதே மேல்."

"விஜயராகவன் வருவதால் கருணாகரனையும் அழைக்க ஆசைப் படுகிறேன். அவர் எதிரில் என் தந்தை சரியாகத்தான் நடந்து கொள்வார். கருணாகரனும் தாறுமாறாகப் பேச மாட்டான் என்றுதான் நினைக்கிறேன். எப்படியாவது எங்கள் இடையே இருக்கும் விரோதத்தைத் தீர்த்துக் கொள்ள விரும்புகிறேன்!" என்றான் அச்சுதன்.

கோவிந்தன் குறுக்கிட்டு, "எனக்கும் இவர் கூறுவதுதான் சரியென்று படுகிறது, அச்சுதா! கொஞ்ச நேரத்துக்கு முன்னால் கருணாகரனை விஜயராகவன் வீட்டில் பார்த்தேன். மரியாதையே தெரியவில்லை. ஜயந்தியோடு நான் பேசிக் கொண்டிருந்தேன். அவள் கவிதை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள். பாதியில் அவன் எழுந்து போய் விட்டான். உள்ளே போனவன் திரும்பி வந்து, 'போய்விட்டு வருகிறேன்' என்று மரியாதைக்குக்கூடச் சொல்லிக்கொள்ளவில்லை. விர்ரென்று சைக்கிளில் ஏறிக் கொண்டு போய்விட்டான். ரொம்பக் கர்வக்காரன் போல் இருக்கிறது" என்றார்.

"கர்வம் கிடையாது. கொஞ்சம் முன் கோபம் உண்டு; அவ்வளவுதான்" என்றார் சிவசங்கரன்.

"அதற்குள்ளே மைத்துனனுக்குப் பரிந்து கொண்டு வருகிறீர்களே?" என்றான் அச்சுதன்.

"அட! அப்படியா சமாசாரம்? எனக்குத் தெரியாதே. மாதவியை இவருக்கு நிச்சயம் செய்தாகி விட்டதா? 'கங்க்ராஜுலேஷன்ஸ்!'" என்று சொல்லி விட்டுக் கோவிந்தன் கையை நீட்டினார்.

நீட்டிய கரத்தைப் பிடித்துக்கொண்ட சிவசங்கரன், "அதற்குள் அவசரப்படுகிறீர்களே. இன்னும் எதுவும் நிச்சயமாகவில்லை" என்றார்.

"மற்றவர்கள் யாரும் நிச்சயிக்கவில்லை. ஆனால் அவர்களைப் பொறுத்தமட்டில் எல்லாம் நிச்சயமாகிவிட்டது" என்று கூறிவிட்டு நகைத்தான் அச்சுதன்.

இருவரும் சிவசங்கரனிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள்.

மறு நாள் விருந்து மிக நன்றாக நடந்தது. ஒரே குதூகலமும் கொண்டாட்டமுமாக இருந்தது. சிவசங்கரன் மிக உற்சாகமாக இருந்தார். கருணாகரன் வராமலிருந்ததே நல்லதாயிற்று என்று அவர் இரண்டொரு தடவைகள் நினைத்துக் கொண்டார்.

ஆனால் கருணாகரன் அவ்வாறு நினைக்கவில்லை. தன்னைக் கூப்பிடாதவர்கள் வீட்டுக்குச் சிவசங்கரன் போனதைக் குறித்து வேதனைப் பட்டான். விஜயராகவனையும், சிவசங்கரனையும் அழைத்துவிட்டுத் தன்னை மரியாதைக்குக்கூடக் கூப்பிடாமல்இருந்தது அவனுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. அவனுடைய மனத்தில் என்னவெல்லாமோ விபரீதமான சந்தேகங்கள் எழுந்தன.

மாதவி ஒரு நாவலைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவனிடம் தன் குறையைச் சொல்லி மன ஆறுதல் பெற வேண்டும் போல இருந்தது; ஆனால் கூச்சமாகவும் இருந்தது. இப்படி அவன் தனியாய்த் தவித்துக் கொண்டிருக்கும்போதுதான் ஜயந்தி அங்கே வந்து சேர்ந்தாள்.

மாதவி புத்தகத்தை மூடி வைத்து விட்டு, "வா அம்மா, ஜயந்தி! என்ன சமாசாரம்?" என்று விசாரித்தாள்.

ஜயந்தி மாதவியின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். கருணாகரன் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"ஏன் அக்கா! இவருக்கு என்னிடம் என்ன கோபம்?" என்று வியப்புடன் கேட்டாள் ஜயந்தி.

"என்னிடம் ஏதாவது கேட்கவேண்டுமானால் நேரில் கேட்கலாம். அக்காவிடம் எதற்காக முறையிட வேண்டும்?" என்றான் கருணாகரன்.

"என்ன தம்பி இது? ஏன் இவ்வளவு கடுமையாக ஜயந்தியிடம் பேசுகிறாய்?"

"அக்கா! இனம் இனத்தோடுதானே சேரும்? இவர்களெல்லாம் பணக்காரர்கள். விருந்து கொடுப்பார்கள். விருந்துக்குப் போவார்கள். நம்மைப் பொருட்படுத்துவார்களா? கவிதைகள் படிப்பதும் கலைகளை ரஸிப்பதும் அவர்களுடைய பொழுதுபோக்கு. உழைத்துப் பாடுபடுவதுதான் நம்முடைய பொழுதுபோக்கு. அவர்களுக்கும் நமக்கும் ஏணி வைத்தால்கூட எட்டாது. நீ ஏமாந்து போய் விடாதே, அக்கா!" என்றான் கருணாகரன் கோபத்தோடு.

ஜயந்தியின் கண்களிலிருந்து நீர் முத்துக்கள் உருண்டோடிக் கீழே விழுந்தன.

"பாருங்கள் அக்கா! இவ்வளவு நிஷ்டூரமாகப் பேசும்படி நான் என்ன



செய்து விட்டேன்? நான் 'அச்சுதன் வீட்டு விருந்துக்குப் போனேனா? அப்பா போனால் நான் அதைத் தடுக்க முடியுமா?" என்று விம்மினாள்.

"ஏன் தம்பி, இப்படி அர்த்த மின்லாமல் கோபித்துக் கொள்கிறாய்? சிவசங்கரன் கூடத்தான் விருந்துக்குப் போயிருக்கிறார். அழைக்கப்பட்டவர்கள் போகாமல் இருக்க முடியுமா?"

"உனக்கு ரோசமே கிடையாதா, அக்கா? இவள் தந்தையையும், சிவசங்கரனையும் கூப்பிட்டு விட்டு என்னை வேண்டுமென்று அவமானப் படுத்துவதற்காகத்தானே கூப்பிடாமல் இருந்திருக்கிறான் அச்சுதன்? அப்படிப்பட்டவன் மற்றவர்களிடம் ரொம்ப நல்லவன் மாதிரி நடிப்பானேன்? என்னுடைய சிநேகத்தை விரும்புவது போலப் பாசாங்கு செய்வானேன்?"

"அவன் கூப்பிடுவதாகத்தான் இருந்தானாம், தம்பி! இவரும், அந்தக் கோவிந்தனும்தான் வேண்டாமென்று கூறினார்களாம். இன்று காலை அவர் சொன்னார். சித்தப்பாவும் நீயும் ஏதாவது சண்டை போட்டுக் கொண்டால் விரசமாகப் போய் விடும் அல்லவா?"

"ஓகோ! உன்னுடைய 'அவர்' வேண்டாம் என்று சொன்னாரா? இது இன்னும் நன்றாக இருக்கிறது. எத்தனை நாட்களாக இப்படி என்னை அவமானப்படுத்த வேண்டுமென்று காத்துக் கொண்டிருந்தீர்கள்?" என்று கத்தினான் கருணாகரன்.

மாதவி பயந்துபோனாள். பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் வந்து முடிந்ததே என்று வருந்தினாள். ஜயந்தி எழுந்து நின்று, "நீங்கள் இப்படிச் சத்தம் போடுவது கொஞ்சங் கூட நன்றாக இல்லை. உங்களுடைய மன வருத்தங்களுக்கெல்லாம் காரணம் இந்தக் கோபம்தான். இதனால்தான் உங்களைப் பார்த்து எல்லாரும் பயப்படுகிறார்கள். நான் எத்தனையோ தடவை சொல்லி விட்டேன். ஆனால் என்னை நீங்கள் புரிந்து கொள்ளாமல் குத்திக் காட்டுவது மாத்திரம் மகா பாவம்!" என்று கூறிவிட்டு வேகமாக ஓடிப்போய்க் காரில் ஏறிக்கொண்டாள். காரின் கதவு படாரென்று சாத்தப்படும் சத்தம் கேட்டது. கருணாகரனுக்கு அந்தக் கதவின் இடுக்கில் தன் இதயம் அகப்பட்டுக் கொண்டு நசுங்குவது போல இருந்தது.

மாதவியும் எழுந்து உள்ளே சென்றாள். குருவாயூரப்பன் படத்துக்கு எதிரில் நின்று, "என் தம்பிக்கு நல்ல புத்தியைக் கொடுக்க வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தாள்.

அத்தியாயம் 30
ஆலையில் அமளி

சிவசங்கரனும் மாதவியும் சந்தித்துக் கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிவிட்டது. அதை எண்ணிப் பார்க்கும் போதே சிவசங்கரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. நேற்றுத்தான் மாதவியை மலையருவிக் கரையில் பார்த்தமாதிரி இருக்கிறது. அதற்குள் இவ்வளவு நாட்கள் ஆகிவிட்டனவே என்று வியந்தார்.

கருணாகரனுக்கும் இந்த உண்மை வியப்பைத்தான் அளித்தது. அவனுக்குச் சிவசங்கரனிடம் அன்பும் மரியாதையும் எவ்வளவுக் கெவ்வளவு இருந்தனவோ, அவ்வளவுக் கவ்வளவு அசூயையும் ஆங்காரமும் கூடவே இருந்தன. இந்த இரண்டு உணர்ச்சிகளையும் அவனாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை. இப்போது அவனுக்கு உலகமே ஒரே கசப்பாகத் தென்பட்டது. தன்னையே அவனுக்குப் பிடிக்கவில்லை.

ஜயந்தி அன்று கண்ணீருடன் சென்ற பிறகு நாலைந்து நாட்கள் வரை அவள் வீட்டுப் பக்கமே கருணாகரன் போகவில்லை. தன் அருமைத் தமக்கையிடமும் அதிகமாகப் பேசவில்லை. சிவசங்கரன் இரண்டொரு தடவைகள் வீட்டுக்கு வந்தபோது அவன் வீட்டில் இருக்கவில்லை. ஆலையிலும் அவனுக்கு வேலை ஒன்றும் ஓடவில்லை.

கோவிந்தனையும் ஜயந்தியையும் நினைத்து வேதனைப்பட்டான். கோவிந்தன் ஊரில் இருக்கும் வரை விஜயராகவன் வீட்டுப் பக்கமே போகக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டான். ஆனால் விரைவிலேயே அவனுடைய தீர்மானத்தைக் கைவிடும்படி நேர்ந்தது.

விஜயராகவனுக்கு உடம்பு சரியாக இல்லாதபடியால் ஆலைக்கு வர முடியவில்லை என்றும், முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டியிருப்பதால் உடனே வீட்டுக்கு வரும்படியும் சொல்லியனுப்பியிருந்தார். கருணாகரனால் போகாமல் இருக்க முடியவில்லை.

அவன் அங்கே சென்றபோது கோவிந்தன் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார். ஜயந்தி தன் தகப்பனாருக்கு அவுன்ஸ் கிளாஸில் மருந்து கொடுத்துக் கொண்டிருந்தாள்.

விஜயராகவன் கருணாகரனைப் பார்த்ததும், "வா, அப்பா! உன்னிடம் சில முக்கியமான விஷயங்கள் சொல்ல வேண்டும்" என்றார்.

கோவிந்தன் உடனே, "நான் வெளியே போய் இருக்கிறேன், பேசி முடித்ததும் கூப்பிடுங்கள்" என்று கூறிவிட்டு எழுந்தார்.

"நீங்கள் இங்கேயே இருக்கலாம், கோவிந்தன்! ரகசியம் ஒன்றுமில்லை" என்றார் விஜயராகவன்.

"பரவாயில்லை. நான் பிறகு வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே போய் விட்டார் கோவிந்தன்.

ஜயந்தி தன் தகப்பனாருடைய தலைமாட்டுக் கருகில் வந்து தயங்கி நின்றாள்.

"நீயும் வேண்டுமானால் சற்று நேரம் மாடிக்குப் போய்விட்டு வா அம்மா, வெகு நேரமாய் நிற்கிறாயே!" என்றார்

விஜயராகவன். ஜயந்தி பதில் சொல்லாமல் வெளியே சென்றாள். கருணாகரனுக்கு ஜயந்தி அங்கிருந்து போவதில் விருப்பமில்லை. ஆனாலும் அதை அவன் தெரிவிக்கவில்லை. அவளைப் பார்க்காமல் உட்கார்ந்திருந்தான்.

விஜயராகவன் ஆலை விஷயமாகச் சில முக்கியமான கடிதங்களைக் கொடுத்து அவற்றுக்கு என்ன பதில் எழுத வேண்டுமென்று சொன்னார். பிறகு வரவு, செலவு விவரங்கள் சிலவற்றை யெல்லாம் பற்றிக் கேட்டார்.

''வீடுகளெல்லாம் எந்த மட்டில் இருக்கின்றன? நான் போய்ப் பார்க்க முடியவில்லை. நீயாவது இன்று போய்க்கவனி. நாளாக ஆக நமக்குச் செலவு அதிகம்!'' என்றார்.

''கவனிக்கிறேன்'' என்றான் கருணாகரன்.

கடைசியில் அவர், ''உன் திருமணத்தைப் பற்றி ஒரு முடிவு செய்துவிட வேண்டும், கருணாகரா! உன் தமக்கை மாதவிக்கும் சேர்ந்தாற் போலவே ஏற்பாடு செய்து விடுகிறேன். சிவசங்கரன் அதற்குச் சம்மதிப்பாரல்லவா?'' என்று கேட்டார்.

''எனக்குத் தெரியவில்லை. நீங்கள் அவரையே கேட்டு விடுங்களேன்'' என்றான் கருணாகரன்.

''வருகிற சித்திரையில் நடத்தி விடலாமா? நான் பார்க்கட்டுமா? ஜயந்தியின் சின்னம்மாவும் சீக்கிரம் கல்யாணம் பண்ணிவிட வேண்டும் என்று நச்சரிக்கிறாள். உன் அக்காவிடம் கேட்டு விட்டுச் சொல்லு. என்னைக் கேட்கச் சொன்னால் நானே வந்து கேட்கிறேன்'' என்றார் விஜயராகவன்.

''கல்யாணத்துக்கு இப்போது என்ன அவசரம்? இன்னும் சில மாதங்கள் போகட்டும், பார்த்துக் கொள்ளலாம்'' என்று கருணாகரன் மிகவும் அசிரத்தையாகக் கூறினான்.

அவன் சங்கோசப்படுகிறான் என்று விஜயராகவன் நினைத்துக் கொண்டார்.


''சில மாதங்கள் போவானேன்? சுபஸ்ய சீக்கிரம் என்று சொல்லுவார்கள். அதனால் நாள் பார்க்கச் சொல்லுகிறேன். மாதவியிடம் நானேக்கு இதைப் பற்றிப் பேசுகிறேன்'' என்றார்.

''ஜயந்தியிடம் முதலில் பேசிவிடுங்கள். அவளுக்குப் பரிபூரண இருப்தியா என்பதை அறிந்து கொண்ட பிறகு தான் நீங்கள் என் அக்காவிடம் கேட்க வேண்டும்'' என்றான் கருணாகரன்.

''ஜயந்தியின் மனம் எனக்கு நன்றாகத் தெரியும், கருணாகரா! உனக்கும் தெரியும். ஏன் கவலைப்படுகிறாய்? அவளுக்கு இஷ்டமில்லை என்றால் என்னிடம் முன்பே கூறியிருப்பாள்'' என்றார்.

''இருந்தாலும் நேரில் நீங்கள் இன்னொரு தடவை கேட்டு விடுங்கள்'' என்றான் கருணாகரன்.

''ஆகட்டும். உன் இருப்திக்காகக் கேட்கிறேன்'' என்றார் விஜயராகவன்.



சென்னை சர்க்கார் வைத்தியத் துறைத் தலைவராக இருந்து ஓய்வுபெற்று, தற்போது சென்னை கான்சர் இன்ஸ்டிடியூட்டின் கௌரவ டைரக்டராகப் பணியாற்றி வரும் டாக்டர் பி. அருணாசலம் அவர்களின் குமாரர் ஸ்ரீ ஏ. விசுவநாதனுக்கும், மத்தியசர்க்காரின் காரியதரிசியாகப் பதவி வகிக்கும் டாக்டர் ஆர். சங்கரன் அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி மீனலோசனிக்கும் ஜூன் மாதம் ஒன்பதாம் தேதி சென்னையில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கும் மறுநாள் நடைபெற்ற வரவேற்புக்கும் ஏராளமான பிரமுகர்களும் நண்பர்களும் விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினார்கள்.

"நான் வருகிறேன்" என்று புறப் பட்டான் கருணாகரன். விஜயராகவ னுடைய பேச்சினால் அவன் மனம் மறு படியும் ஓரளவு அமைதி யடைந்தது. ஆனால் மறுநாளே புயலும் பூகம்பமும் ஏற்படப் போகிறதென்பதை அவன் அறிந்திருக்கவில்லை.

தொழிற்சாலையில் பொதுவாக எல் லாத் தொழிலாளிகளுக்கும் கருணாகரன் மீது பொறாமை. விஜயராகவன் அவனி டம் பிரியமாக இருப்பதால் பலருக்குக் கோபம். மேலும் கருணாகரனின் முன் கோபம் அவனை அனைவரும் வெறுக்கும் படி செய்தது. சீக்கிரத்தில் அவன் மானேஜராகி விட்டபடியால் எல்லாரும் அவனைக் கண்டு அசூயைப்பட்டார்கள்.

கருணாகரனின் திறமையினால் எண் ணெய் ஆலையின் நிர்வாகம் எவ்வளவோ சீரடைந்தது. ஒவ்வொரு சிறிய காரி யத்தையும் அவனே நேரில் கவனிப் பான். சின்னஞ் சிறிய திருகுகளிலிருந்து, பெரிய இயந்திரங்கள் வரை தானே கூர்ந்து கவனிப்பான். இதனால் தொழி லாளர்கள் எப்போதும் மிக ஜாக்கிரதை யாக இருக்க வேண்டி யிருந்தது.

இந்தமாதிரி ஆலை இயந்திரங்களைக் கவனித்துக் கவனித்து ஒரு இஞ்சினீய ருக்குத் தெரியக் கூடிய அளவு விஷயங் களை அவன் தெரிந்து கொண்டிருந்தான். ஆகவே ஒரு சிறிய தவறு நேர்ந்தாலும் அவனால் பொறுக்க முடியாது. மேலும் தனக்கு இவ்வளவு விஷயங்கள் தெரியும் என்பதை மற்றவர்களுக்குக் காட்டிக் கொள்வதில் அவனுக்கு ஒரு பெருமை. அதற்காக எதையாவது பழுது சொல் லிக் கொண்டே இருப்பான்.

இருந்தாலும் கருணாகரன் தன் முன் கோபத்தை மாத்திரம் அடக்கிக் கொண் டிருந்தானானால் தொழிலாளிகளிடம் நல்ல பேர் எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அற்ப விஷயங்களுக்குக் கூட அவன் கூப்பாடு போடுவதும், ரொம்ப ரொம்பக் கண்டிப்பாக இருப்பதும் யாருக்கும் பிடிக்கவில்லை.

தன் குழந்தை மிகவும் நோய்வாய்ப் பட்டிருக்கிறதென்று ஒரு தொழிலாளி முன் பணம் கேட்டான். கருணாகரன் தர மறுத்து விட்டான். அவன் தந் திருந்தால்கூட அந்தக் குழந்தை பிழைத் திருக்காது. ஆனால் அந்தக் குழந்தை இறந்துபோனது கருணாகரனை எல்லா ரும் கல்நெஞ்சன் என்று திட்டுவதற்குக் காரணமாயிற்று. ஆகவே அவன் அவர் களுக்கு நன்மை செய்த போது கூடத் தொழிலாளர்கள் அதற்கு வேறு கார ணம் கற்பித்துப் பரிகசித்து வந்தனர்.

நல்ல லாபம் வந்த போதெல்லாம் கருணாகரன் தொழிலாளிகளுக்கு இரண்டு மாத போனஸ் கொடுக்க ஏற் பாடு செய்திருக்கிறான். ஆனால் அவர் கள் அதை அவனுடைய நல்ல எண்ண மாகக் கருதவில்லை. தனக்கும் இரண்டு மாதச் சம்பளம்கூடக் கிடைக்குமென்று தான் சிபாரிசு செய்தான் என்று பேசிக் கொண்டார்கள்.

தொழிலாளிகளுக்கென்று குறைந்த வாடகையில் கம்பெனியின் செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்கக் கருணாகரன் ஏற்பாடு செய்தான். அந்த வீடுகளைப் பற்றித்தான் விஜயராகவன் அவனை விசாரித்தார். ஆனால் இதையும் தொழி லாளிகள் பரிகாசம்தான் செய்தார்கள்.

விஜயராகவனிடம் பேசிவிட்டு வந்த மறு நாள் கருணாகரன், அவர் கூறிய வேலைகளைச் செய்வதற்காகச் சீக்கிர மாகவே ஆலைக்கு வந்தான்.

ஒரே இரைச்சலும் சந்தடியுமாக இருக்கும் ஆலை நிசப்தமாக இருந்தது. இன்னும் பெரிய இயந்திரம் வேலை செய் யத் தொடங்கவில்லை போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டே உள்ளே நுழைந்தான். கையிலிருந்த காகிதங்

களைத் தன் அறையில்வைத்துவிட்டு இயந்திரம் இருந்த அறைக்குச் சென்றான்.

போகும் போதே இருவர் பேசும் குரல் கேட்டது. இயந்திரத்துக்கு அடுத்த பக்கத்திலிருந்து பேச்சுக் குரல் கேட்ட படியால் கருணாகரன் அப்படியே திகைத்து நின்றான்.

''என்ன அண்ணே! வீடுகள் எந்த மட்டில் இருக்கு? மானேஜர் மகராஜன் புண்ணியத்திலே உங்களுக் கெல்லாம் நல்ல வீடு கிடைத்து விடும் போலிருக்கே!'' என்றது ஒரு குரல். கருணாகரனின் உச்சி குளிர்ந்தது. அவன் உடனே வெளியே போயிருக்கக் கூடாதா?

இன்னொரு குரல், ''ஆமாம்! நல்லாச் சொன்னே போ! மானேஜர்தான் வீடு கட்டுகிறானா? கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கிற மாதிரி, முதலாளியின் பணத்தில் வீடு கட்டி விட்டு இவன் நல்ல பேர் வாங்கப் பார்க்கிறான்.''

''தனக்கு உபயோகமில்லாமே எவனும் எந்தக் காரியமும் செய்துவிட மாட்டான், தம்பி!''

''என்ன, அப்படிச் சொல்லுறே, அண்ணே! உங்களுக்கு வீடு கட்டித் தருவதினாலே அவருக்கு என்ன லாபம்?''

''நீ என்னப்பா, சுத்த முட்டாளாக இருக்கிறாயே? இந்த மானேஜர் வந்ததிலிருந்து எங்களுக்கெல்லாம் எவ்வளவு கஷ்டம் தெரியுமா? நின்னா கூப்பாடு, உட்கார்ந்தால் கூப்பாடு, சாப்பிட்டால் கூப்பாடு, நடந்தா கூப்பாடுன்னு கத்தித் தீர்த்துப்பிடறான். அவனைக் கண்டாலே யாருக்கும் பிடிக்கல்லே'' என்றான்.

''அதனாலே வீடு கட்டிக் கொடுத்துச் சமாதானம் பண்ணப் பார்க்கிறார் என்று சொல்கிறாயா?''

''ஆமாம்! அதாவது நாங்கள் வேலை நிறுத்தம் செய்யறதாக இருந்தோம். அது நடக்காமல் செய்யறதுக்காகக் கண்ணில் மண்ணைத் தூவுகிறார். இவரை விட அனுபவத்திலேயும், வயதிலேயும் பெரியவர்கள் இருக்கும்போது இவருக்கு முதலாளி, மானேஜர் வேலை கொடுத்தது தப்பு இல்லையா?''

''அதற்குக் காரணம் இல்லாமல் இருக்குமா, அண்ணே?''

''ஏன் வேண்டிய காரணம் இருக்கு. முதலாளி ஐயா மகள் இருக்காளே, அவள் இவரைத்தான் கண்ணாலம் கட்டிப்பேன் என்று சொல்லி விட்டாளாம். இவர் அதற்கு என்ன சூழ்ச்சி செய்தாரோ, தெரியவில்லை. ஒன்னுமில்லாத ஒட்டாண்டிக்கு முதலாளி ஐயா பெண்ணைக் கொடுப்பாரா? அதனாலே இவருக்கு மானேஜர் பதவியும் கொடுத்து மகளையும் கட்டிக் கொடுக்கப் போகிறாரு. முதலாளி ஐயாவுக்கோ ஒரே மகள். அதனாலே இந்த ஆலையும் இவருக்கே சொந்தமாகி விடும். அப்போ ஆளுங்க எல்லாம் இவரை மதித்து நடக்க வேண்டாமா? அதற்காகத்தான் நல்லவர் மாதிரி நடிக்கிறாரு.''

''உங்க முதலாளிக்கு எப்படி இவரைப் பிடித்தது?''

''அதை ஏன் கேட்கிறே போ. தினம் பொழுது விடிஞ்சால் முதலாளி வீட்டுக்குப் போறதும், அவர் சொல்கிறதுக்கெல்லாம் தலையை ஆட்டுறதும், போது போனால் முதலாளி மகளோடே சுத்தறதும், ஊர் சிரிக்கிறதே தம்பி. உனக்குத் தெரியாதா? இவருதான் இப்படின்னா, இவருக்கு ஒரு அக்கா. அவளும் எவனோடேயோ மலைக்காட்டிலே அடிக்கடி சுத்துகிறாள். ஒன்னும் நல்லாவே இல்லே போ! பெரிய இடத்துச் சமாசாரம். சொன்னால் வெட்கக்கேடு!''

இந்தப் பேச்சைக் கருணாகரன் எப்படித்தான் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தானோ? அவனுடைய உடம்பு முழுவதும் பற்றி எரிந்தது.

அளவில்லாத ஆக்ரோஷத்துடன் கருணாகரன் இயந்திரத்தின் மறு பக்கத்துக்குப் பாய்ந்து சென்றான். சீறி வரும் புலியைப் போல அவன் பாய்ந்து வருவதைக் கண்டு, நிதானமாகப் பேசிக் கொண்டிருந்த இருவரும், பதறிப் போய் எழுந்து நின்றார்கள்.

தன்னைப் பற்றிக் குறை சொன்னவன் வேலாயுதமாகத்தான் இருக்க வேண்டுமென்று குரலிலிருந்தே கருணாகரன் ஊகித்து விட்டான். என்ன செய்கிறோமென்பதையே அறியாமல் வேலாயுதத்தின் அருகில் பாய்ந்து சென்று பலங் கொண்ட மட்டும் அவனை அறைந்தான். 'ஆ' என்று அலறினான் வேலாயுதம்.

வேலைக்கு ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்த தொழிலாளிகள், சத்தம் கேட்டு வேகமாக ஓடி வந்தார்கள். கருணாகரன் தங்கள் சகாவை அடிப்பதைப் பார்த்ததும், அவர்கள் எல்லாருக்கும் ஆத்திரம் மூண்டது.

கருணாகரன் தன் அறைக்குச் சென்று நாற்காலியில் பொத்தென்று விழுந்தான். வேலாயுதத்தை அடித்தபோது தோளில் சுரீலென்று வலித்தது. நெஞ்சம் அதைவிட எரிந்தது.

வேலாயுதத்தை வேலையிலிருந்து நீக்கி விட்டதாக எழுதி விட்டு, காஷியரைக் கூப்பிட்டு அவனுக்குப் பாக்கியுள்ள சம்பளத்தைக் கொடுத்து உடனே அனுப்பும்படி கூறினான்.

இந்தக் கலவரம் நடந்த பதினைந்து நிமிடங்களுக் கெல்லாம் வேலாயுதம் வீட்டுக்கு அனுப்பப்பட்டான். **(தொடரும்)**

தமிழை வளர்ப்பது எப்படி?

"கல்லூரிகளில் போதனமொழி தமிழ் மொழியாக இருக்கவேண்டும். மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரங்களையெல்லாம் தாய்மொழி மூலமாகவே போதிக்க வேண்டும்" என்று எங்கும் குரல்கள் எழுகின்றன. அரசாங்க நிர்வாகமும் தமிழில் நடத்தப்பட வேண்டும் என்று சட்டசபையில் சட்டமும் இயற்றியாகி விட்டது. அரசாங்க அலுவல்களில் அன்றாட உபயோகமாகும் ஆங்கிலச் சொற்றொடர்களுக்கு ஓரளவு சரியான தமிழ்ச் சொற்களும் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆனால் நமது விஞ்ஞான ஆசிரியர்களோ, விஞ்ஞான சாஸ்திரத்தைத் தமிழில் சொல்ல வேண்டும் என்றால் அதற்குத் தகுந்த தமிழ்ச் சொற்கள் இல்லையே என்று ஏங்குகிறார்கள். அரசாங்க அதிகாரிகள் ஆங்கிலத்திலுள்ள பல்வேறு நுட்பமான கருத்துக்களை வெளியிட நல்ல தமிழ் வார்த்தைகள் இல்லையே என்று பரிதவிக்கிறார்கள். இதனிடையில் அரசாங்கத்தார் விஞ்ஞானச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்கள் கண்டுபிடித்து அவ்வப்போது வெளியிட்டு வருகின்றனர். பாட புத்தகங்கள் எழுதுவோரும் பற்பல வகையான சொற்களைச் சிருஷ்டித்து வருகிறார்கள். இதனால் என்ன நேர்கிறது என்றால் ஒரு ஆங்கில விஞ்ஞானச் சொல்லுக்குப் பல தமிழ்ச் சொற்கள் சிருஷ்டிக்கப் படுகின்றன. உதாரணமாக 'தெர்மாமீட்டர்' என்ற சொல்லுக்கு ஜுரமானி என்றும், உஷ்ணமானி என்றும், சுடுமானி என்றும் பலவகைச் சொற்கள் வெளிவந்துள்ளன. எதுவும் 'தெர்மாமீட்டர்' என்ற சொல்லிலுள்ள பொருளை முழுதும் குறிப்பதாக இல்லை. அத்துடன் தமிழ்ப் பண்பு கமழும் சொல்லாகவுமில்லை.

இந்த நிலையில் சிலர் ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் கையாள்வது ஒன்றுதான் வழி என்று கூறுகின்றனர். ஆனால் இது தமிழில் நுட்பமான கருத்துக்களைக் கூறமுடியாது என்ற நிலையை ஒப்புக் கொள்வதற்கு ஒப்பாகும்.

செந்தமிழ் மொழியில் அற்புதமான சொற்களும் சொற்றொடர்களும் பழமொழிகளும் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கையாண்டு வந்திருக்கிறார்கள். அவற்றை இன்றையத் தமிழ் மக்கள் அறியாமலே இருந்து வருகிறார்கள். அந்த அரும் சொற்களைத் தொகுத்தாலே தமிழ் புது வேகம் பெறும் என்று இந்நூலின் ஆசிரியர் கூறுகிறார்.

ஒரு விஞ்ஞானக் கருத்தை இங்கு விளக்க வேண்டும். உயிரினங்களின் அடிப்படை இயல்பு எப்படியும் உயிர் வாழ வேண்டும் என்பதுதான். அதற்காக இயற்கை அளிக்கும் அத்தனை இடையூறுகளையும் எதிர்த்து நின்று உயிர் வாழ்ந்து உயிரினங்கள் பரிணாமரீதியில் வளர்ந்திருக்கின்றன என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. இந்தப் போராட்டத்தை ஆங்கிலத்தில் Struggle for Existance என்று சொல்லுவார்கள். இதற்குத் தமிழ்ச் சொல் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், கம்பர் கண்டு சொல்லியிருக்கிறார் என்கிறார் இந்நூலாசிரியர்.

கம்பர் ஏதோ ஓர் இடத்தில் உய்யப் பிணக்கம் என்று கையாண்டிருக்கிறார். அது இந்த விஞ்ஞானக் கருத்துக்குச் சிறந்த தமிழ்ச் சொல்லாகும் என்கிறார். ஆம். "உய்யப் பிணக்கம்" மிக அழகான சொல்தான்.

விவாகம் என்பது வட மொழிச் சொல். ரத்து என்பது அரபுச் சொல். இந்த இரண்டு சொற்களையும் எப்படியோ சேர்த்து "விவாக ரத்து" என்ற ஒரு சொல் தமிழ்ப் பத்திரிகையாளரிடையே வழங்கி வருகிறது. "அறுத்து முறி" என்ற அழகிய தமிழ்ச் சொற்றொடர் வழக்கில் இருக்கும் போது தமிழ்ப் பண்பில்லாத இரு வேறு பாஷைச் சொற்களைக் கூட்டி உபயோகிப்பதின் அவசியம் என்ன என்கிறார் இந்த நூலாசிரியர்.


"இன்னொரு செய்தி வாசகர்களே! கேளுங்கள். ஏறக்குறைய 1800 ஆண்டுகளுக்கு முன்பே செத்துச் சுண்ணாம்பாய்ப் போன ஹீப்ரு மொழிகளும் தொடர்களும் எந்த நாட்டில் கிடைத்தாலும் அவற்றைத் தொகுத்து அவை வழக்கிழந்து போனாலும் குற்றமில்லையென்று ஹீப்ரு மொழியில் சேர்த்துக் கொண்டு அம் மொழிக்குப் புத்துயிர் அளித்து வருகிறார்கள். இது மொழி வளர்ச்சியா? நம் நாட்டுத் தான்தோன்றிகளின் செயல் மொழி வளர்ச்சியா? சிறிது அமைதியுடன் கருதிப் பாருங்கள்!"

இந்தப் பத்தியைப் படிக்கும்போது மண்டையில் அடித்தாற்போல் ஒரு உணர்ச்சி ஏற்படுகிறதல்லவா? அப்படியே இந்த நூல் முழுதும் வேகம் மிகுந்த தமிழ் நடையில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கம் தரக்கூடிய பல கருத்துக்களையும் யோசனைகளையும் வெளியிட்டிருக்கிறார்.

"தமிழில் சிந்தனையைக் கிளறக்கூடிய நூல்களே இல்லை. முழுக்க முழுக்கத் தமிழ் மயமான நூல் இல்லையே!" என்ற பெருங்குறையை இந்நூல் தீர்த்து வைக்கிறது.

இந்த நூலாசிரியர் திரு ஏ. வி. ராமன் அவர்கள் தமிழ்ப் பண்டிதரோ புலவரோ அல்ல. சுகாதார இன்ஜினியராகச் சர்க்காரில் பணியாற்றிக் கொள்கை காரணமாகச் சர்க்கார் வேலையை உதறிவிட்டு வெளியே வந்தவர். அன்னிய ஆட்சி நடைபெற்ற காலத்தில் அன்னிய ஆட்சியாளரிடம் வேலை செய்து கொண்டே தன்மானமும் தேசப்பற்றும் கொண்ட காரியங்களைத் தீவிரமாகச் செய்தவர். அவர் சிறு பிராயம் முதல் தமிழ் மொழியில் அளவு கடந்த ஆசை கொண்டவர். ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களைத் தொகுப்பதையும், நல்ல தமிழ்ச் சொற்றொடர்களைக் காணும்போது தொகுத்து எழுதி வைத்து ரஸிப்பதும் தமது வாழ்நாளின் பெரும் பணியாகச் செய்து வந்திருக்கிறார். அந்தப் பணியில் தாம் கண்ட உண்மைகளைத் தமக்கே உரிய நடையில் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார். இந்த நூல் தமிழ் வளர்ச்சிக்கு உகந்த யோசனைகள் நிரம்பிய களஞ்சியமாகும்.

பிரசுரம்: தமிழகம், 59, பிராட்வே, சென்னை-1. விலை ரூ. 1. —எஸ். வி. எஸ்.


சக்தி மற்றும் திறம்பட்ட வேலை
அளிப்பதற்கென்றே அமைக்கப்பெற்றது
மோட்டார் பந்தயம் பார்ப்போருக்கு மயிர் கூச்சலூட்டும் ஒரு நிகழ்ச்சியாகும். கார்கள், எரிகரிகள், லூப்ரிகென்டுகள் மற்றும் டிரைவர்களுக்கும் இது ஒரு சோதனைக் களமும்கூட. மற்றும் கார் டிசைன் செய்தவர்களின் தொழில் நுட்ப திறனுக்கும் இது ஒரு நிரூபணமாகும். கால்டெக்ஸ் கம்பெனியார், எரிகரிகளையும் மற்றும் லூப்ரிகென்டுகளையும் தயாரித்து அவைகளை ஒன்று சேர்த்து கலப்பதில் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர்கள். இதுவே, அதிகப்படியான சக்தி, வேகம், நம்பகத்தன்மை, சுகமான ஓட்டம், மற்றும் சிக்கனத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறது.
உங்கள் காருக்குக்
கால்டெக்ஸ் 1 2 3 வழங்கி
1 சக்தி மற்றும் வேகத்திற்கு
கால்டெக்ஸ் ஐஸி-ப்ளஸ் பெட்ரோல்
2 சிக்கனத்திற்கும், நம்பகத்தன்மைக்கும்
கால்டெக்ஸ் ஆர்பிஎம்
மோட்டார் ஆயில்
3 சுகமான சவாரிக்கு
கால்டெக்ஸ் மார்பக் சர்விஸ்
சர்விஸ் லூப்ரிகேஷன்
CALTEX
அது எப்படி ஓடுகிறதென்பதைக் கவனியுங்கள்!
உங்கள் நண்பரான கால்டெக்ஸ் வியாபாரியிடம்
ஓட்டிச் செல்லுங்கள்.



(சென்ற வாரத் தொடர்ச்சி)

4

கௌதமி பேசினாள்; அந்த மலைச்சாரல்களில், காலையில் தங்கச் சூரியன் உதயமாகும் அழகைப் பற்றிக் கூறினாள். இரவில் ஊளையிடும் நரிகளைப் பற்றியும், உறுமும் புலிகளைப் பற்றியும் விவரித்தாள். நிர்மலமான நீல வானிலே தோன்றும் முழுமதியைப் பற்றிச் சொன்னாள். 'திடுதிப்' என்று வானம் முழுவதையும் மூடி மறைத்துக் கொள்ளும் கருமேகங்களைப் பற்றிக் கூறினாள். மழையை வரவேற்று இரவின் அமைதியைக் குலைக்கும் தவளைகளைப் பற்றி எடுத்துரைத்தாள். இடைவிடாமல் கொட்டும் மழையைப் பற்றிச் சொன்னாள். திடீரென்று பெருக்கெடுத்து ஓடும் ஆற்று வெள்ளத்தைப் பற்றியும், வெள்ளத்தினால் கிராமம் சேதப்படாமல் இருக்க அந்த நாகர்கள் படும் பாட்டையும் பற்றிக் கல்லும் கனிந்துருகக் கூறினாள். காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த அவளுடைய முன்னோர்களைப் பற்றியும், இப்போதும் தலை வேட்டை ஆடும் நாகர்களைப் பற்றியும் அவர்கள் சேகரித்து வரும் மண்டை ஓடுகளைப் பற்றியும் விவரித்தாள். ஆயினும் அவர்கள் நாகரிகம் அடைய எடுத்துக் கொள்ளும் முயற்சியைப் பற்றிக் கூறினாள். ரஜனிகாந்தன் அளவில்லாத ஆச்சரியத்தோடு அவள் கூறுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார்.

திடீரென்று மழை கொட்ட ஆரம்பித்தது. அவர்கள் கிராமத்தை நோக்கி வேகமாக ஓட ஆரம்பித்தார்கள்.

மறுநாளும் அவர்கள் அந்த ஆற்றங்கரையில் சந்தித்தார்கள்.

இரண்டாவது நாள் காலை ரஜனிகாந்தன் இனிமேல் தன்னால் பொறுக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார். பார்டோலியிடம் சென்று தாம் கௌதமியைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகத் தெரியப்படுத்தினார்.

பார்டோலி வெகு நேரம் யோசித்து விட்டு, "நாங்கள் மலைஜாதியினர்; உங்கள் நாகரிகத்தை அறியாதவர்கள். நீங்கள் பட்டணத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். உங்களுடைய வாழ்க்கை முறைகளும் எங்களுடைய வாழ்க்கை முறைகளும் ஒத்து வராது. நன்கு யோசனை செய்யுங்கள். அதன் பின்னரும் நீங்கள் கௌதமியைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பினால் நான் ஆட்சேபணை கூறப்போவதில்லை" என்றார்.


அன்று மாலை ரஜனிகாந்தன் கௌதமியைச் சந்தித்தபோது, "உன்னை நான் திருமணம் செய்து கொள்ள உன் தகப்பனார் சம்மதம் தந்து விட்டார். உன்னுடைய சம்மதம்தான் தேவை" என்று கூறினார்.

கௌதமியுடைய கண்களில் கண்ணீர் பெருகி வழிந்தோடியது. விம்மல்களுக்கிடையே, "உங்களை நான் கல்யாணம் செய்து கொள்ள முடியாது. ஒருக்காலும் முடியாது. நான் ஸாக்கியைத் திருமணம் செய்து கொள்வதாகச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன். அவரைத்தான் மணந்து கொள்வேன்" என்றாள்.

ரஜனிகாந்தனின் மனம் அளவில்லாத வேதனை அடைந்தது.

"என்னை மன்னித்துவிடு, கௌதமி! நான் உன்னைத் தவறுதலாகப் புரிந்து கொண்டு விட்டேன். உனக்கும் ஸாக்கிக்கும் இடையே ஒருக்காலும் நான் தடையாக நிற்கமாட்





டேன். உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை என்று உன் தகப்பனாரிடம் உடனே சொல்லிவிடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தார்.

'வேண்டாம் வேண்டாம்' என்று சொல்ல வேண்டும் என்று கௌதமியினுடைய மனம் எண்ணியது. ஆனால் வாய் பேச மறுத்தது!

அன்று இரவே ரஜனிகாந்தன் பார்டோவி யைச் சந்தித்தார். ''நீங்கள் கேட்டுக் கொண்டபடியே நன்கு யோசித்தேன். நீங்கள் கூறியது சரிதான். மலைச்சாதியினரான உங்க ளுடைய சுதந்திர வாழ்க்கையும் எங்களுடைய நாகரீக வாழ்க்கையும் ஒன்று சேரமுடியாது தான்'' என்று கூறினார்.

பார்டோவின் முகத்தில் புன்னகை அரும் பியது. ''நல்ல வேளையாகக் கல்யாணம் செய்து கொள்வதற்கு முன்பாகவே இதை நீங்கள் உணர்ந்து கொண்டீர்களே. ரொம்ப சந்தோஷம்'' என்றார்.

5

மூன்றாவது நாள் காலை லாக்ரி திரும்பி வந்தான். ''அவர்கள் இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து விட்டேன். உங்களை அங்கு அழைத்துப் போகிறேன். ஆனால் அங்கு போவது மிகக் கடினம். பாதை ஏதும் கிடையாது. கரடுமுரடான காட்டு வழியே செல்ல வேண்டும்'' என்றான்.

''அதனால் பரவாயில்லை. எப்போது புறப் படலாம்?'' என்று ரஜனிகாந்தன் கேட்டார்.

''இன்று எனக்குக் கட்டாய அனுமதி கொடுங்கள். நாளை அழைத்துப் போகி றேன்'' என்றான் லாக்ரி.

''நாளைக் காலையில் புறப்பட்டால் எப்போது போய்ச் சேருவோம்?'' என்று ரஜனிகாந்தன் அவனிடம் கேட்டார்.

''நாளை மாலை போய்ச் சேருவோம்; நீங்கள் நினைத்ததற்கு மேல் அதிக தூரமே இருக்கிறது. அதிலும் காட்டு வழியே போக வேண்டும்'' என்றான் லாக்ரி.

''அப்படியானால் நாளை உச்சிப் பொழுதில் புறப்படுவோம். இரவு அங்கு போய்ச் சேர லாம்'' என்றார் ரஜனிகாந்தன்.

அன்று மாலை ரஜனிகாந்தன் கிராமத்தை விட்டு வெகு தூரம் நடந்து சென்றார். ஆற்றங்கரைப் பக்கம் செல்ல அவருக்குப் பிடிக்கவில்லை. அங்கு லாக்ரியும் கௌதமி யும் கூடிப் பேசிக் கொண்டிருப்பார்கள். அங்கு போவானேன்?

நடக்க நடக்க அடர்ந்த காடு அவரைச் சூழ்ந்து கொண்டது. சிறிது தூரத்தில் ஒரு பள்ளத்தாக்கு தென்பட்டது. மேலும் சில அடிகள் எடுத்து வைத்த லெப்டினண்ட் ரஜனிகாந்தன் அப்படியே திகைத்து நின்று விட்டார்.

பள்ளத்தாக்கின் முனையில் லாக்ரி நின்று கொண்டிருந்தான். ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பவன் போல் ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தான். இன்னும் ஒரு அடி அவன் எடுத்து வைத்தால் போதும். உருண்டு உருண்டு அதள பாதாளத்தில் விழுந்து விடுவான். எலும்புகளைக் கூடப் பொறுக்கி எடுக்க முடியாது.

அவனை அந்த இடத்தில் அந்தச் சந்தர்ப்பத்தில் பார்த்தவுடனே ரஜனிகாந்தனுக்கு மனக் குழப்பமெல்லாம் நீங்கி விட்டது. அவருக்குப் புரியாமல் இருந்த பல விஷயங்கள் இப்போது அவருக்குப் புரிந்து விட்டன.

ரஜனிகாந்தன் அந்தக் கிராமத்துக்கு வருவதற்கு முன்னால் லாக்ரியும் கௌதமியும் ஒருவரை ஒருவர் நேசித்தார்கள். அவனைக் கல்யாணம் செய்து கொள்வதாகக் கௌதமி வாக்களித்திருந்தாள். இதெல்லாம் ரஜனிகாந்தனை அவள் சந்திக்கும் முன்னர்தான். ரஜனிகாந்தனை அவள் சந்



தித்தவுடன் அவள் மனம் அவர் வயப் பட்டு விட்டது. ஆனால் லாக்ரிக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை அவளால் மீற முடியவில்லை.

ரஜனிகாந்தனுடன் அவள் பேசிக் கொண்டிருந்த போது அவள் அடைந்த சந்தோஷத்துக்குக் காரணம் அதுதான். ரஜனிகாந்தன் லாக்ரியைப் பற்றித் தன்னிடம் பேசக் கூடாது என்று அவள் கூறியதற்குக் காரணமும் அதுதான். கடைசியாக 'லாக்ரியைத்தான் நான் மணந்து கொள்ளப் போகிறேன்' என்று அவள் விம்மலுக்கும் விக்கலுக்கும் அழுகைக்கும் இடையே திக்கித் திக்கிக் கூறியதற்குக் காரணமும் அதுதான்!

'லாக்ரியைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்' என்று அவள் சொன்னபோது அவள் முகத்தில் சிறிது கூடச் சந்தோஷத்தின் அறிகுறிகளைக் காணவில்லையே? அதற்குக் காரணமும் அப்போது ரஜனிகாந்தனுக்குப் புரிந்துவிட்டது. அவருடைய கை தம்முடைய தோளில் தொங்கிக் கொண்டிருந்த துப்பாக்கியைத் தடவிக் கொடுத்தது' அவருடைய கை செய்து கொண்டிருந்த காரியத்தை அவர் மனம் உணர்ந்தபோது ரஜனிகாந்தன் திடுக்.

மக்ளீன்ஸ் பற்களை முன்னைவிட அதிவெண்மையாக சுத்தம் செய்கிறது!



MTY 44 TAM

கவலையற்ற
சைகிள்
சவாரிக்கு

ராலே
ராபின் ஹூட்

ஒவ்வொரு ஸென்–ராலே உற்பத்தியும் மிக்க உயர்ந்த சாமான்களைக் கொண்டு மிகுந்த நவீன விஞ்ஞான முறையில் தயாரித்தது! ஒவ்வொரு அங்கமும் தனித்தனியே பரிசோதிக்கப்பட்டது. இதன் பலன்–குறைந்த செலவில் கவலையற்ற சைகிள் சவாரி!



ஸென்-ராலே

SEN RALEIGH Products

விட்டுப் போனார். ஐயோ! எவ்வளவு பயங்கரமான எண்ணம்? ஆனால் ஒருவருக்கும் தெரியாது! லாக்ரி கீழே விழும்போது அந்தப் பள்ளத்தாக்கில்தான் விழுவான். அங்கு யாரும் அவனைத் தேடப் போவதில்லை.

தோளிலிருந்த துப்பாக்கி இப்போது ரஜனிகாந்தனின் கைகளுக்கு வந்து விட்டது. அவருடைய நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பி வழிந்தோடின.

லாக்ரிக்குப் பின்னால் சிறிது தூரத்தில் ஒரு புதர் அசைந்து ஆடியது. அதன் பின்னிருந்து ஒரு புலியின் தலை வெளிப்பட்டது. ஆகா! தாம் செய்ய நினைந்த காரியத்தை அந்தப் புலி செய்துவிடப்போகிறது. லாக்ரியின்மீது அந்தப் புலி பாயும். லாக்ரி அந்தப் பள்ளத்தாக்கில் விழுந்து விடுவான். புலியும் அந்தப் பள்ளத்தாக்கில் விழுந்துவிடும். ஒரு வேளை, புலி தப்பிப் பிழைத்தாலும் பிழைக்கலாம்! ஆனால் லாக்ரி தப்பிப்பிழைக்கப் போவதில்லை. ஒரு கண நேரத்தில் ரஜனிகாந்தனின் மனத்திலே இந்தச் சிந்தனை அலைகள் எழும்பின. அடுத்த கணம் அவர் கையிலிருந்த துப்பாக்கியிலிருந்து எழும்பிய குண்டு அந்தப் புலியைத் தாக்கியது. புலி அலறிக் கொண்டு கீழே சுருண்டு விழுந்தது.

லாக்ரி இடையிலிருந்த கத்தியை உருவிக் கொண்டு சடார் என்று திரும்பினான். புலி சுருண்டு விழுந்து கிடப்பதையும் சிறிது தூரத்தில் துப்பாக்கியுடன் ரஜனிகாந்தன் நிற்பதையும் பார்த்தான்.

மெள்ள மெள்ள அவர் அருகில் நடந்து வந்தான். ''நாளை இரவு உங்களைக் காட்டு வழியே நான் அழைத்துப் போகும்போது வழியில் எப்படியாவது உங்களைக் கொன்று விட வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தேன். இங்கு நின்றுகொண்டு அதைப்பற்றித் தான் யோசித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாகம் உங்களைத் தீண்டியிருக்கும். அல்லது கால் இடறி ஒரு பள்ளத்தாக்கில் நீங்கள் விழுந்திருப்பீர்கள்! ஆனால் இப்போது என் மனத்தை மாற்றிக் கொண்டு விட்டேன். என் உயிரைக் காப்பாற்றிய உங்களிடம் நன்றியுடையவனாக இருப்பேன்'' என்றான்.

ரஜனிகாந்தனுக்கு உடல் முழுவதும் வியர்த்து விட்டது. அவர் கால்கள் நிற்க முடியாமல் கெஞ்சின. துப்பாக்கியைத் தரையில் ஊன்றிக் கஷ்டப்பட்டு ரஜனிகாந்தன் நின்றார். மிகவும் சிரமப்பட்டு, ''என்னைக் கொல்ல வேண்டும் என்று ஏன் எண்ணினாய், லாக்ரி?'' என்று கேட்டார்.

''ஏனென்று நான் சொல்ல வேண்டுமா, என்ன? உங்கள் மனமே உங்களுக்குக் கூறும். இருந்தாலும் நீங்கள் கேட்டபடியால் சொல்லுகிறேன். இன்று நான் திரும்பி வந்ததும் கௌதமி என்னை எதிர்கொண்டு அழைக்கவில்லை. என்னைப் பார்க்க வரவில்லை. அதற்குக் காரணத்தை ஊரார் எனக்குச் சொன்னார்கள். நீங்களும் அவளும் ஆற்றங்கரையில் உட்கார்ந்து உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்ததைப் பற்றிச் சொன்னார்கள். நீங்கள் வரும்வரை அவள் என்னுடையவளாக இருந்தாள். உங்களைக் கண்ட பின் அவள் உங்களுடையவளாக ஆகி விட்டாள். உங்களைக் கொல்ல வேண்டும் என்று நான் எண்ணியதில் என்ன தவறு?'' என்று ஆத்திரத்தோடு லாக்ரி கத்தினான். உணர்ச்சி மிகுதியால் அவன் தொண்டையை அடைத்தது. அவன் நெஞ்சு விம்மி விம்மித் தணிந்தது.

ரஜனிகாந்தன் பதில் பேசாமல் கிராமத்துக்குத் திரும்பினார். லாக்ரியும் மௌனமாக அவரைப் பின் தொடர்ந்தான்.

6

மறு நாள் கிராமத்தில் இருந்த அனைவரும் ஓர் இடத்தில் கூடினார்கள். விதம் விதமான உடைகள் அணிந்திருந்தார்கள்.

'பம் பம்' என்று பறை ஒலி கேட்க ஆரம்பித்தது. முதலில் நிதானமாக ஆரம்பித்த அந்த ஓசையின் வேகம் சிறிது சிறிதாக அதிகரித்துக் கொண்டே இருந்தது. அதன் வேகம் அதிகமாக அதிகமாக அங்கு கூடியிருந்த நாகர்களின் உடல்களும் அசைய ஆரம்பித்தன. சிறிது நேரத்தில் அவர்கள் ஆட ஆரம்பித்தார்கள். வட்டமாக நின்று கொண்டு சுற்றிச் சுற்றி வந்தார்கள். பறைகளின் ஓசைக்கு ஏற்பக் கைகளையும் கால்களையும் உதைத்துக் கொண்டு ஆடினார்கள். ரஜனிகாந்தனையும் லாக்ரியையும் அந்த ஆட்டத்தில் சேர்த்துக் கொண்டார்கள்.

பறை ஓசையின்வேகம் உச்சத்தை அடைந்த போது ரஜனிகாந்தனால் அந்த வேகத்தைச் சமாளிக்க முடியவில்லை. ஆனால் லாக்ரி ஆடிக் கொண்டேயிருந்தான். சிறிது சிறிதாக ஆடுபவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. கடைசியில் லாக்ரி மட்டுமே ஆடிக் கொண்டிருந்தான். அவன் உடல் வியர்வையால் நனைக்கப்பட்டிருந்தது. சூரிய ஒளியில் பிரகாசித்தது.

அவனுடைய உடலின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு அணுவும் பறைத் தாளத்துக்கு ஏற்பத் துடி துடித்து ஆடியதாக ரஜனிகாந்தனுக்குத் தோன்றியது. திடீரென்று பறை ஓசை நின்றது. லாக்ரி ஒரு கணம் அப்படியே நின்றான். அடுத்த கணம் களைப்பு மிகுதியால் சுருண்டு விழுந்தான்.

யுத்தத்தில் ரஜனிகாந்தனின் படை வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அந்த நடனம் நடந்தது என்பதை லாக்ரியிடமிருந்து பின்னர் ரஜனிகாந்தன் அறிந்து கொண்டார். லாக்ரியைப் பின்பற்றி ரஜனிகாந்தனும் அவருக்குப் பின்னால் அவருடன் வந்த சிப்பாய்களும் நடந்து சென்றார்கள்.

பிலோவின் தலைமையில் அட்டூழியங்கள் புரிந்து வந்த கலகக்கார நாகர்களின் ஒரு பகுதியினர் முகாம் போட்டிருந்த அந்த இடத்துக்கு அவர்கள் போய்ச் சேர்ந்தபோது நன்கு இருட்டி விட்டிருந்தது. ஆங்காங்கே நெருப்பு மூட்டிக் கொண்டு அதைச் சுற்றிலும் நாகர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்வது ரஜனிகாந்தனின் காதுகளில் விழுந்தது.

''சுமார் எவ்வளவு பேர்கள் இருப்பார்கள்?'' என்று லாக்ரியைக் கேட்டார்.

''நாற்றைம்பது பேராவது இருப்பார்கள்''

''அவர்கள் தூங்க ஆரம்பிக்கட்டும். அது வரையில் பொறுத்திருப்போம்''

"அப்படியானால் நீங்கள் புரிவது யுத்தம் அல்ல. தூங்குபவர்களைக் கொல்வது கொலை!"

யுத்தத்தில் இந்த மாதிரியான சந்தர்ப்பங் கள் ஏற்படுவது இயற்கை. யுத்தத்தில் வீரத் தைக் காட்ட வேண்டியது அவசியம். ஆனால் பல சந்தர்ப்பங்களில் சாணக்கியத்தையும் கையாள வேண்டும் அல்லவா?

இதையெல்லாம் ரஜனி காந்தன் உணர்ந் திருந்தார். ஆனால் ஸாக்ரியிடம் இவற்றை யெல்லாம் எடுத்துச் சொல்ல அது சந்தர்ப்பம் இல்லை என்பதையும் உணர்ந்திருந்தார். ஆகையால் ஸாக்ரி கூறியதற்குப் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தார்.

ஆங்காங்கே எரிந்து கொண்டிருந்த நெருப்பு கள் ஒவ்வொன்றாக அணைய ஆரம்பித்தன. நாகர்களின் பேச்சு சிறிது சிறிதாகக் குறைந் தது. ரஜனிகாந்தன் தம் வீரர்களுக்கு அவர்கள் என்ன செய்யவேண்டும் என்ப தைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்.

பூரண அமைதி நிலவியது. ரஜனிகாந்தன் அருகில் இருந்த ஸாக்ரியைப் பார்த்து, "நான் சமிக்ஞை செய்ததும் என் வீரர்கள் முன்னேறி அந்தக் கலகக்காரர்களைக் கைப் பற்றுவார்கள். நீங்கள் இந்த இடத்தை விட்டு அசையாதீர்கள்" என்றார்.

"நீங்கள் யுத்தம் புரிவதை வேடிக்கை பார்க்கவா நான் வந்தேன்? நானும் சண்டை யில் கலந்து கொள்ளப் போகிறேன். இரண்டு வாரத்துக்கு முன்னால் பிலோவின் ஆட்க ளாகிய இவர்கள் எங்கள் கிராமத்தில் கொள்ளை அடித்த போது நான்கு பேர்களை எதிர்த்துக் கொன்றேன். ஆனால் இன்னும் திருப்தி அடையவில்லை" என்றான் ஸாக்ரி.

அவனுடன் அப்போது தர்க்கம் செய்வதில் பயனில்லை என்று ரஜனிகாந்தன் உணர்ந்தார். தம் இடையிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து அவனிடம் நீட்டினார். ஸாக்ரி தன் இடையில் செருகி இருந்த கத்தியை உருவி "எனக்கு இதுவே போதும்" என்றான்.

"பரவாயில்லை. வைத்துக் கொள்" என்று கூறி ஸாக்ரியின் கையில் அந்தத் துப்பாக்கியை ரஜனிகாந்தன் திணித்தார். வீரர்களுக்குச் சமிக்ஞை செய்து விட்டு முன்னேறினார்.

ஒரு மரத்தடியில் காவல் காத்து நின்ற ஒருவனை ஒரே அடியில் கீழே சாய்த்து விட்டு, தூங்கிக் கொண்டிருந்தவர்களின் ஆயுதங்களை ரஜனிகாந்தனின் வீரர்கள் கைப்பற்றினர்.

ரஜனிகாந்தன்எதிர்பார்த்தபடியே எல்லாம் நடந்திருக்கும். ஆனால் அங்கு நடப்பதை யெல்லாம் பார்த்துக் கொண்டே இருந்த ஸாக்ரி, வெறுப்படைந்து தன் கையிலிருந்த துப்பாக்கியால் ஆகாயத்தை நோக்கி நான்கு முறை சுட்டான். அந்தச் சத்தத்தில் எல்லா ரும் விழித்துக் கொண்டனர்.

"நான் வேண்டுவது யுத்தம். திருட்டுத்தன மும் கொலையும் அல்ல!" என்று கத்திக் கொண்டே ஸாக்ரி அருகில் இருந்த ஒருவன் மீது பாய்ந்தான். ஸாக்ரியிடம் துப்பாக்கி யைக் கொடுத்ததற்காக ரஜனிகாந்தன் அப் பொழுது வருந்தினார். ஆனால் உடனே எப்படி யிருந்தாலும் கூச்சல் போட்டாவது அந்த நாகர்களை அவன் எழுப்பி இருப்பான் என்று எண்ணினார். அவர் மனம் ஆறுதலடைந்தது.

சுமார் அரைமணி நேரம் போர் நடந்தது. மொத்தம் நூற்றுப்பதினாறு பேர்கள் இறந்து போனதாகப் பின்னர் கணக்கிட்டார்கள். இறந்து போனவர்களில் ஸாக்ரியும் ஒருவன். அவன் தேகத்தில் ஐந்து இடங்களில் குண்டு பாய்ந்திருந்தது.

காலையில் கைது செய்தவர்களைக் கயிற்றால் பிணைத்து நடத்திச் சென்றார்கள். இறந்து போனவர்களை அங்கேயே விட்டுச் சென்றார் கள். ஸாக்ரியை மட்டும் ரஜனிகாந்தன் தோளில் போட்டுக் கொண்டு நடந்தார்.

ஸாக்ரியின் உடலைப் பார்த்ததும் கௌதமி கதறி அழுவாள் என்று ரஜனிகாந்தன் எதிர் பார்த்தார். ஆனால் அவர் நினைத்தது தவறாகி விட்டது. ரஜனிகாந்தனும் அவருடைய வீரர்களும் ஸாக்ரியுடைய உடலை ராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்தார்கள். நாகர்களின் வழக்கமான ஈமச் சடங்குகளும் நடந்தன. மறு நாள் பார்டோஸியிடம் விடை பெற்றுச் செல்வதற்காக ரஜனிகாந்தன் புறப் பட்டுக் கொண்டிருந்தபோது கௌதமி அவ ருடைய இருப்பிடத்துக்கு வந்தாள்.

"ஸாக்ரி தம் உயிரை நீங்கள் காப்பாற்றி யதைப் பற்றிச் சொன்னார்" என்றாள்.

ரஜனிகாந்தன் மௌனமாக இருந்தார். அவள் இன்னும் ஏதோ சொல்லப்போகிறாள் என்று அவருடைய உள்ளம் உணர்ந்தது.

"ஒரு வேளை அவர் யுத்தத்தில் இறந்து போனால், அவருடைய உயிரைக் காப்பாற்றிய உங்களையே நான் கல்யாணம் செய்துகொண்டு சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றும் சொன்னார்" என்றாள் கௌதமி.

அந்தக் கணத்தில் ரஜனிகாந்தனின் மனத் தில் ஒரு பேருண்மை உதயமாயிற்று.

"கௌதமி, உன் தகப்பனாரிடம் நம்மைப் பற்றி நான் இரண்டாவது முறையாகக் கூறியது மறுக்க முடியாத உண்மை" என்றார் லெப்டினென்ட் ரஜனிகாந்தன்.

கௌதமி அவரைச் சில வினாடிகள் ஆடாமல் அசையாமல் பார்த்துக் கொண்டு நின்றாள். பின்னர் மெள்ளத் திரும்பி வந்த வழியே மெதுவாக நடந்து சென்றாள்.

மழை மீண்டும் கொட்ட ஆரம்பித்து விட்டது. ரஜனி காந்தனின் வீரர்கள் லிக் துபி கிராமத்தை விட்டு வெகுதூரம் நடந்து வந்து விட்டார்கள்.

"ரஜனிகாந்தன் மனிதன்தானா? அவனும் நம்முடனேயே வந்திருக்கிறான். களைப்பு என் பதையே அவனிடம் காண முடியவில்லையே?" என்று ஒருவன் சொன்னான்.

"அவன் மனிதன் என்று யார் சொன்னது? பிசாசாகத்தான் இருக்க வேண்டும்" என்று இன்னொருவன் சொன்னான்.

சிறிது தூரத்தில் நடந்து வந்து கொண் டிருந்த லெப்டினென்ட் ரஜனிகாந்தனின் காதுகளில் இந்தப் பேச்சு விழுந்தது.

'ஆமாம். நான் மனிதனல்ல. பிசாசாகத் தான் இருக்க வேண்டும்' என்று ரஜனி காந்தன் தமக்குள் எண்ணிக் கொண்டார்.



தேவியின் கடிதம்

வேடிக்கை விநோதங்கள்

வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சுஜாதா,

கல்யாணங்களில் வேடிக்கை விநோதங்கள் செய்வது அவசியமா? கேலி கூத்துக்கள் தேவையா? அதனால் காரியம் தாமதப்பட்டு விடுகிறதே யென்று கேட்கிறாய்.

கல்யாணம் என்று எடுத்துக் கொண்டால் அதில் பெற்றோர்கள், புதுத் தம்பதிகள், உறவினர்கள், சிநேகிதர்கள் இவர்கள் முக்கியத்துவம் பெற்றுக் கூடுகிறார்கள். கல்யாணத்தைச் சோபிக்கச் செய்யச் சிறந்த விருந்தும், இனிய கானமும் அவசியமாக இருக்கின்றன.

ஒரு புதுத் தம்பதிகள் வாழ்க்கையை ஆரம்பிக்கின்றார்கள். பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகளிடம் இதயத்தில் அன்பு பொங்குகிறது. இயற்கையாகப் பாசம் நிறைந்திருக்கிறது. எனவே தங்கள் பெண்ணுக்கு ஏற்ற கணவனைப் பாடுபட்டுத் தேடுகிறார்கள். ஊண் உறக்கமின்றித் தேடுகிறார்கள். ஆனால் மனத்தில் உள்ள சந்தோஷம் அவர்களுக்கு யானை பலத்தைக் கொடுக்கிறது. ஆயிரம் காலத்துப் பயிர் நன்றாக வாழ வேணுமென்ற நினைவில் ஒவ்வொன்றையும் கவனித்துச் செய்கிறார்கள்.

இப்படிப்பட்ட மகத்தான தினத்தில் கல்யாணத் தம்பதிகளைச் சந்தோஷப்படுத்த, தாங்கள் ஆனந்தம் அநுபவிக்க விரும்புவது சரிதானே. தேவதைகளை வணங்குகிறோம். ஆண்டவனை வேண்டுகிறோம். விருந்தைச் சாப்பிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். சங்கீதத்தைக் கேட்டு ரசிக்கிறோம். பட்டாடைகள் உடுத்திக் குதூகலம் அடைகிறோம். கண் குளிரக் கல்யாணப் பெண் பிள்ளையைப் பார்த்து ஆனந்திக்கிறோம். மகிழ்ச்சியும் குதூகலமும் பொங்க எல்லோரும் திருமண வைபவத்தைக்கொண்டாடி ஆனந்திக்கிறோம்.

செலவு செய்யும் தொகையிலும் ஏற்பாடுகளிலும் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் எல்லாப் புது மணப் பெண்ணும், பிள்ளையும் விஷ்ணு, லக்ஷ்மியென வேத மந்திரங்கள் வர்ணிக்கின்றன. இந்தத் தினத்தில் வேடிக்கையும், விநோதமும் இடம் பெற வேண்டியது அவசியம்தானே.

'அதிகச் சிரிப்பு தவறுதானே' என்று நீ கேட்டிருக்கிறாய். பிறரை ஏளனமாகச் சிரிப்பதுதான் தவறு. முகம் மலர்ந்து இருப்பது தவறாகாது.

சமீபத்தில் என் சிநேகிதி பெண்கள் கல்யாணம் அமோகமாக நடந்தது. அந்தக் கல்யாணத்தில் எல்லாவற்றையும் விட என் மனத்தைக் கவர்ந்தது: ஒருவருக்கொருவர் கோப தாபம் இல்லாமல் நடந்து கொண்டதுதான். கல்யாணத் தம்பதிகளை வேடிக்கை செய்ததும், சாஸ்திரங்களில் ஒன்றும் குறைக்காமல் செய்ததும் மிகவும் அழகாக அமைந்தன. ஏதோ கடமையென்று செய்யாமல் ஆசையுடன் செய்வது விசேஷமல்லவா?

வடக்கே ஹோலிப் பண்டிகை என்று கொண்டாடுகிறார்கள். அன்று அவர்கள் விரோதம், கோபம் எதையும் பாராட்டுவதில்லை. அதைப் போல முன் காலத்தில் பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் கேலி செய்து விளையாடுவதுண்டு. அப்படி அதீத வேடிக்கைகளுக்குத் தற்காலத்தில் அவகாசமில்லை. ஆயினும் கொஞ்சம்கூடக் கேலி இன்றி ராணுவப் பயிற்சி மாதிரி செய்வதும் அழகாயில்லை.

பரிசுகள் வழங்குவதில் ஒன்று முக்கியமானது. சில ஊர்களில் அபூர்வமான கைத்தொழில்கள் நடைபெறும். விலை உயர்ந்த பொருளாக வாங்கி வழங்க எல்லோராலும் சாத்தியமில்லை. எனவே தங்கள் ஊர்ச்சாமான்களை வாங்கிப் பரிசுகள் அனுப்பலாம்.

சிலர் விலையுயர்ந்த பரிசுப் பொருள்களை வழங்கினால்தான் மதிப்பு என்று தவறுதலாக எண்ணி வருகிறார்கள். ஆனால் உண்மையான அன்பின் பரிசாக அளிக்கும் எந்தப் பொருளும் விலையுயர்ந்ததுதான்; மனத்துக்குத் திருப்தியை யளிக்கக்கூடியதுதான். அவரவர்களுக்குச் சக்திக்கேற்ற முறையில் பரிசுகளைத் தம்பதிகளுக்குக் கொடுக்கலாம்.

சில கல்யாணப் பெண், மாப்பிள்ளைகள் எல்லாவற்றிலும் சந்தோஷமாகப் பங்கு எடுத்துக் கொண்டால் நாகரிகக் குறைவு என்று கருதுகிறார்கள். கைக் கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்துக் கொண்டு முக்கியமான நிகழ்ச்சியை அவசரப்படுத்துகிறார்கள். பெரி



யோர்கள் செய்வது தெரியாத்தனம்போலும், தாங்கள் சகலமும் அறிந்தவர்கள் என்றெல்லாம் நினைத்து விடுகிறார்கள். எனவே சகஜக் குறைவாக இருப்பது மற்றவர்களுக்கும், அவர்களுக்கும் அன்றையத் தினத்தில் அநுபவிக்கும் ஆனந்தத்தைக் குறைக்கிறது.

தம்பதிகள், முக்கியமாகப் பிள்ளைகள் சகஜமாகச் சிரத்தையாகத் திருமண வைபவங்களில் கலந்து கொள்வதுதான் உண்மையான நாகரிகமாகும்.

இப்படிக்கு,

பூமாதேவி

அணைந்த விளக்கு

ஆங்கரை ஜயராமன்.



"அப்பா!" என்ற குரல் தோப்பில் தென்றலுடன் தவழ்ந்து வந்தது. சிந்தனையிலிருந்த பூசாரி ராமசாமி திடுக்கிட்டு எழுந்தார்.

"யாரது? மரகதமா? என்னம்மா வேணும்?" என்று எதிரில் வந்து கொண்டிருக்கும் தம் அருமை மகளைப் பார்த்துக் கேட்டார் பூசாரி.

"அப்பா, இங்கேயா குந்தியிருக்கே! எங்கெல்லாம் உன்னைத் தேடறது? சோறு தின்ன வேண்டாமா? நீபாட்டுக்கு மரத்தடியிலே வந்து குந்திக்கிட்டியே?"

"அடடா, மறந்தே போயிட்டேன்! மணி என்ன ஆவுது குழந்தே! சூரியன்கூட நடுவானத்தை விட்டு மேற்காலே நகர்ந்துட்டானே! நீ குடிசைக்குப் போம்மா! நொடியிலே பூசையை முடிச்சுக்கிட்டு வந்துடறேன்."

"இன்னும் பூசை முடிஞ்சபாடில்லையா? இம்மா நேரம் என்ன செஞ்சுக்கிட்டிருந்தே! வயிறு பசிக்கலியா! உனக்காக அம்மாவும் நானும் சோறு திங்காமெ எம்மா நேரம் காத்துக் கிடக்கிறது?"

"குழந்தே, நீ இன்னும் சோறு திங்கலியா? வவுத்தைக் காயப் போட்டா உன் பச்சை உடம்பு என்னத்துக்காவும்! போம்மா....குடிசைக்குப் போ. இதோ நானும் வந்துடறேன்" என்றார் பூசாரி அன்புடன் மகளின் முதுகைத் தடவி விட்டுக் கொண்டே.

"அப்பா!"

"என்னம்மா?"

"அவரைப் பத்தின தகவல் ஒண்ணுமே கிடைக்கலியே! எனக்குப் பயமாயிருக்குதப்பா! அவரு உசிரோட...." என்று சொல்வதற்குள் மரகதத்தின் கண்களில் கண்ணீர் பெருகி விட்டது; தொண்டையும் அடைத்துக் கொண்டது.

ராமசாமி பூசாரிக்கு மகளை எப்படிச் சமாதானம் செய்வதென்றே புரியவில்லை. இவ்வளவு நாட்களாக மகள் எதைக் கேட்கக்கூடாதென்று நினைத்தாரோ அதையே இன்று கேட்டு விட்டாள். எந்த விஷயத்தை அவளுக்குத் தெரியாமல் மறைத்து வைத்திருந்தாரோ, அதே விஷயம் இன்று பகிரங்கமாகி விடும்போலிருந்தது. அவரையும் அறியாமல் பயமும் துக்கமும் பற்றிக் கொண்டன.

"அம்மா....கவலைப் படாதே! சண்முகம் வந்துடுவான். இரண்டு



மாசமானும் என்ன, வராமல் போயிடுமா? உன் சின்ன மனசைக் கஷ்டப்படுத்திக்காதே.''

''நிச்சயம் வந்துடும்னு சொல்றியா? என்னையும் நம்பச் சொல்றியா?''

''சும்மா எதினுக்கும் நினைச்சு வருத்தப் படாதே! நேற்றுக்கூடப் போலீசு ஸ்டேசனுக்குப் போயிருந்தேன். இன்னும் பத்து நாளிலே சண்முகம் வரலாமுன்னு சொன்னுங்க. நீ குடிசைக்குப் போம்மா'' என்று மகளைக் குடிசைக்கு அனுப்பி வைத்தார் பூசாரி.

குடிசைக்குப் போகும் மகளையே உற்றுப் பார்த்தார் பூசாரி. மகள் அடிக்கடி ''அவர் இருந்தால் எவ்வளவு சந்தோஷமா யிருக்கும்? அவரை இன்னும் காணுமே அப்பா?'' என்று கேட்பாள். அப்பொழுதெல்லாம் பூசாரிக்கு நெருப்பையள்ளித் தெளிப்பது போலிருக்கும். ஆனல் ராமசாமியோ ''எங்கப்பா சண்முகம்! நீ திரும்பிவருவியாடா? எம் மவளை ஏமாத்த றேண்டா? டேய், சண்முகம்! நீ வராமல் போயிட்டா...எம் மவள் புழுவாய்த் துடிப் பாளே! அவளை எப்படியடா தேற்றுவேன்?'' என்று வாய்விட்டுக் கூறிக்கொண்டே கோவிலை நோக்கிச் சென்றார்.

அவசரம் அவசரமாகத் தண்ணீரால் அபி ஷேகம் செய்தார். கொண்டு வந்திருந்த புஷ் பங்களை அம்மன்மேல் அர்ச்சித்தார். சின்ன விளக்கு சூரிய வெளிச்சத்தில் புன்னகை செய் தது. சிறிது நேரம் மெய் மறந்து சன்னதியில் நின்றார் பூசாரி. வழிந்து வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வெளி மண்டபத்துக்கு வந்தார். சின்னஞ்சிறு குறட்டில் மேல் துண்டை விரித்து உட்கார்ந்தார். எதிரி லிருந்த பெரிய புளிய மரம் மெள்ள அசைந் தாடியது. அவருடைய சிந்தனையும் பழைய சம்பவத்தை நோக்கிப் பாய்ந்தது.

* * *

ஆலங்குடி வயற்காட்டின் மத்தியில்தான் அந்தத் தோப்பு இருந்தது. பச்சைப் பசே லென்ற கதிர்கள் காற்றடிக்கும் பொழுது ஒன்றையொன்று கட்டித் தழுவும் அந்தப் பச்சைப்பாயில் படுத்துத்தூங்கலாம் போலிருக் கும். தோப்பிலிருக்கும் பிடாரி அம்மனுக்குப் பூசை செய்யப் பூசாரியாக நியமிக்கப்பட்டார் ராமசாமி. சுற்றிலும் உள்ள வயல்களின் சொந்தக்காரர்கள் அளக்கும் நெல்தான் அவ ருக்குச் சம்பளம். அறுவடைக் காலங்களில் தோப்பு உழவர்களின் நடமாட்டத்தில் கல கலப்பாயிருக்கும். ராமசாமிக்கு மரகதம் ஒரே பெண். அவள் மரகதமேதான்!

பகலில் ஒருமுறை வந்து அம்மனுக்குப் பூசை செய்வது; பிறகு மாலையில் மறுமுறை வந்து விளக்கேற்றி வைத்துவிட்டுப் போவார். இது அவருடைய தினப்படி வேலை. பகலில் அவருடன் கூட மரகதமும் கோவிலுக்கு வரு வாள். மிரண்டு பார்க்கும் குறுகுறு வென்ற கண்கள் கொள்ளை இன்பத்தைக் கொட்டுவது போலிருக்கும். சிவப்புச் சாயப் புடவையை இறுக்கிக் கட்டிய உடலில் பரிபூரண சௌந் தர்யம் பார்க்கும்தோறும் பார்க்கும்தோறும் பெருகிக் கொண்டே யிருக்கும். அங்கு மிங்கும் கள்ளமறியாத மான்குட்டியைப் போல் குதித்தோடுவாள்.

மரகதம் ஒன்றையும் லட்சியம் செய்வ தில்லை. தந்தை கோவில் பூசை முடிக்கும் வரையில் பக்கத்தில் பாம்பு நெளிவது போல் ஓடும் சின்னக் கால்வாயிலும் மாமரத்தின் கிளைகளிலும் தாவித் தாவிப் பாய்வாள்.

பூசாரி கோவிலுக்கு விளக்கேற்ற அன்றைக் கும் வழக்கம்போல் வந்தார். கோவிலுக்குள் தீபமேற்றிக் கொண்டிருந்தவர் ''சாமி!'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டார்.

''யாரப்பா?'' என்று கேட்டபடியே அவர் வெளியே வந்தார்.

மண்டபத்தை யொட்டி நிற்கும் மனிதனின் உருவத்தை இருள் மறைத்திருந்தது.

''நான்தானுங்க கறுப்பன்.''

''கறுப்பனு...எந்தக் கறுப்பன்?''

''வந்து நான் இந்த ஊர்க்காரனில்லீங்க. அம்மன் கோவிலுக்கு எப்பொழுதாவது வரு வேன். அம்மனைக் கும்பிட்டுப் போகிற வழக்கம்'' என்றான் அவன்.

எதிரில் நிற்பவனை நன்றாகப் பார்த்தார் பூசாரி. பரவியிருக்கும் இருள் கறுப்பா, நிற்கும் மனிதனின் நிறம் கறுப்பா என்று கண்டுகொள்ள முடியவில்லை.

''பகல் நேரத்திலே வரக்கூடாது? ஒரே யடியா இருட்டு மண்டிப் போச்சே!''

''பகல்லியா...அம்மாடியோ... அதுதானுங் களே முடியாது!'' என்றான் அவன் திகிலுடன்.

''ஏன்டா, ஐயா?''

''ஏன்னு கேட்கிறீங்களே? சொல்லட்டு முங்களா?...வேண்டாமுங்க! நீங்க என்னைக் கோவிச்சுப்பீங்க.''

''டேய், என்ன பயங்காட்டறே? பகல்லே வேலை வெட்டி முறியுதோ? பொழைப்பு கெட்டவன்.''

''சாமி!'' என்றான் கெஞ்சும் குரலில்.

''ஏதுக்குடா கொஞ்சறே? வந்த விசயத் தைச் சொல்லு. குடிசைக்குப் போவணும் எனக்கு'' என்றார் பூசாரி முறைப்புடன்.

''சித்தெ குந்துங்க. உங்ககிட்டே பேச ணும் போலே யிருக்குது.''

பூசாரி வந்தவனின் பேச்சில் மயக் கும் சக்தி யிருப்பதை யுணர்ந்தார். மண்டபத்தில் உட்கார்ந்தார். எதி



ரில் மேல் துண்டை இடுப்பில் கட்டிய வண்ணம் அடக்கமும் பணிவும் ஒன்றை யொன்று போட்டிபோட அவன் நின்றான்.

"சாமி உங்களுக்கு இந்த அம்மன்கிட்டே யிருக்கிற பக்தி போலே எனக்கும் இருக்குதுங்க. தினமும் ஆத்தா காலடியிலே விழுந்து கும்பிடணும்னு கொளுத்த ஆசையிங்க. ஆனால் அது முடியாதுன்னு நினைக்கிறப்போ மனசு உடைந்து தவிக்குதுங்க" என்றான் கறுப்பன். உள்ளே எரியும் எண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் அவன் கண்கள் கலங்கி யிருப்பது தெரிந்தது.

பூசாரியின் மனம் உருகியது. இருபத்தைந்து வயதுப் பையன் இவ்வளவு பக்தியை வைத்துக் கொண்டிருப்பதை எண்ண எண்ண அவருக்கு உணர்ச்சி ஊற்றுப்போல் பெருகியது.

"ஏண்டா பயலே! காலையிலே தினமும் வரக் கூடாது! நானும் பூசை செய்ய வருவேன். அம்மனை நல்லாக் கண் குளிரப் பார்த்துக்கிடலாமில்லே?"

"சாமி சூரிய வெளிச்சம் இருக்கிற வரை நான் வெளியே தலை காட்டக்கூடாதுங்க. காட்டினால் தலைக்கே ஆபத்து வந்துடும்."

"ஆபத்தா...உனக்கா! என்னாத்துக்குடா?"

"சொல்லட்டுங்களா? அப்புறம் என்னை விரட்ட மாட்டீங்களே."

"இல்லேடா, ஐயா. கம்மாச் சொல்லு!"

"நான் ஒரு திருடனுங்க!"

"ஆ...அடப் பாவி! கெடுத்துப்புட்டியே காரியத்தை! திருட்டுப்பயலா நீ! போடா இங்கிருந்து; இல்லாட்டி பிடிச்சுக் கொடுத்துடுவேன்" என்று கத்தினார் பூசாரி.

"சாமி! சாமி! விரட்டாதீங்க. ஐயோ! நான் சொல்றதைக் கேளுங்க. என்னைப் பெத்தவதானுங்க உங்ககிட்டே பணிவாக நடக்கச் சொல்லுது, சாமி!" என்று கெஞ்சினான் கறுப்பன்.

"ஒழுங்காப் பொழைச்சா உன்னை ஏண்டா பிடிக்கிறாங்க? அண்ணன், தம்பி உனக்கு ஒருத்தரும் இல்லையா!"

"இருக்கிறானுங்க. அண்ணன் என்னை வீட்டை விட்டுத் துரத்திப்புட்டானுங்க; என் திருட்டுப் புத்தியைக் காண அவனுக்குப் புடிக்கலீங்க!"

"சரி, என்னை என்ன செய்யச் சொல்றே? குடிசையிலே உனக்கு அடைக்கலம் தரச் சொல்றியா?"

"வேணாமுங்க! எப்பொழுதாவது கோவில் பக்கம் வந்தால் அம்மனைப் பார்த்துக் கும்பிட்டுப் போக அனுமதி கொடுத்தீங்கன்னு அதுவே போதும். உங்களை ஒரு நாளும் மறக்க மாட்டேன், ஆண்டவனே!"

பூசாரிக்கு ஒரே வியப்பு. அம்மனிடம் திருடன் கொண்டிருக்கும் பக்தியில் வாய் அடைத்துப் போனார்.

"பேசாம இருக்கிறீங்களே!"

"டேய்! உன்னை எப்படியடா நம்பறது! என் குடிசையிலேயே கொள்ளையடிச்சுக்கிட்டுப் போயிட்டியானா..."

"சாமி, அப்படிச் சொல்லாதீங்க. சத்தியமாகச் சொல்றேன். எங்க ஆத்தா... இதோ முன்னாடி நிற்கிறாளே, அவ சாட்சியா சொல்றேனுங்க. என்னாலே உங்களுக்கு ஒரு கெடுதலும் வராதுங்க. என்னை நம்புங்க" என்று கோவிலின் முன்பாக விழுந்து தொழுதான்.

பூசாரியின் மனம் இளகி விட்டது. "அப்பனே! எழுந்திருடா! ஆத்தா இருக்கா! அவள் காப்பாத்துவா! எப்ப வந்தாலும் என் குடிசைப் பக்கம் வந்து சத்தம் கொடு. நான் கோவிலுக்கு வந்து அணைஞ்சு போயிருக்கிற விளக்கை ஏற்றி வைக்கிறேன். நீபாட்டுக்கு இருக்குமிடம் தெரியாமல் கும்பிட்டுக்கிட்டுப் போ! அவளே உன்னைத் திருத்திடுவாள்" என்றார் பூசாரி.

"உங்களுக்கு ரொம்பப் புண்ணியமாப் போகட்டுங்க. நான் வரட்டுங்களா?" என்று கூறி இருளில் மறைந்தான் கறுப்பன்.

பூசாரிக்கு நடந்தது கனவா நினைவா என்று பிடிபட வெகு நேரமாயிற்று.

அடிக்கடி இரவு நேரங்களில் கறுப்பன் தோப்புக்கு வருவான். பூசாரியும் காற்றில் அணைந்து போயிருக்கும் விளக்கை ஏற்றி வைப்பார். கறுப்பன் வந்த சுவடு தெரியாமல் தொழுது விட்டு மறைவான். வெகு நாட்களாக இப்படி நடந்தது. இது ஒருவருக்கும் தெரியாது.

"யாராவது கண்டு பிடித்தால்..." என்று நினைக்கும் பொழுது அவர் உடம்பு நடுங்கும். ஆனாலும் கறுப்பன் கொண்டிருந்த பக்தியும் பணிவும் அவரை வசப்படுத்தின.

ஒரு நாள் பகல் வேளையில் போலீஸ் கான்ஸ்டேபிள் ஒருவன் குடிசைக்கு வந்தான். பூசாரிக்குத் தூக்கிவாரிப் போட்டது. கறுப்பன் இந்தத் தோப்புக்கு வரும் விஷயம் போலீசுக்குத் தெரிந்து விட்டதோ என்று அவர் கலங்கினார்.

"என்னாங்க பூசாரி, உங்களைத் தேடிக்கிட்டுத் தான் வந்தேன். எம்பேரு சண்முகம். போலீஸ் உத்தியோகத்துலே யிருக்கேன்" என்றான் வந்தவன்.

"அப்படியா....நல்லது. உங்களைப் பார்த்தாலே தெரியுதே போலீசுக்காரர்னு!"

"ரொம்பச் சௌகரியமாப் போச்சு. இன்னொண்ணுகூட உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணுமே! அதான், இந்தப் பக்கம் ஒரு பக்காத் திருடன் சுத்துறான்னு போலீசு ஸ்டேசனிலிருந்து என்னை அனுப்பிச்சாங்க! உங்க கண்ணிலே எப்பவாவது பட்டானுங்களா?"

"திருடனா...இந்தப் பக்கமா? எனக்குத் தெரியாதே!"

"தெரியாதா? நிசமாவா! அதிர்ஷ்டமில்லே எனக்கு. என்ன செய்யறது; அந்தப் பயலாலே என் பிழைப்பு ரொம்பக் கெட்டுப் போச்சு. ஹூம். நாய் வேஷம் போட்டால் குலைச்சுத்தானே ஆகணும். ராவு பகலாகத் தேடறேன். அகப்படுகிற வழியாகத் தோணலில்லை. பூசாரி! கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொடுப்பீர்களா? எனக்கு ரொம்பத் தாகமா யிருக்கிறது."

"ஓ.... மரகதம்.... செம்பிலே குடிக்கத் தண்ணீர் கொண்டா, அம்மா!" என்று வெளியில் இருந்தபடி சத்தம் போட்டார்.


"இதோ கொண்டாரேன்" என்று செம்பில் தண்ணீருடன் அன்ன நடை போட்டு வந்தவள், வெளியே கான்ஸ்டேபிள் நிற்பதைக் கண்டு வெட்கத்தால் தலைகுனிந்தாள்.

சண்முகம் வந்த பெண்ணைப் பார்த்தான். அவள் அழகில் சிறிது நேரம் தாகத்தைக்

உங்கள் கேசத்தை அதிக கருமையுடனும் பகட்டுடனும் வைக்க குளிர்ச்சியான வெண்ணிற **ப்ரீல்க்ரீம்** உபயோகியுங்கள்



கீர்த்திபெற்ற மற்றவர்களைப்போல்
வினு மான்காடும் ப்ரீல்க்ரீம்
உபயோகிக்கிறார்



* ப்ரீல்க்ரீமின் சுத்தமான க்ரீமாக்கப்பட்ட எண்ணெய்கள் உங்கள் கேசத்தின் இயற்கை கருமை நிறத்தை சோபிக்கச் செய்கின்றன. சுத்தமான வெண்ணிற ப்ரீல்க்ரீமை உங்கள் தலையில் தினந்தோறும் அழுத்தித் தேயுங்கள். பொடுகுகள் ஏற்படுவதை இது தடுத்து உங்கள் கேசத்தை சுத்தமாயும் ஆரோக்கியத்துடனும் வைக்கிறது.

* சிறிதளவு ப்ரீல்க்ரீம் நீடித்த உபயோகத்திற்கு வருகிறது! இன்றே ஒரு ப்ரீல்க்ரீம் ஜாடியை வாங்கி எவ்வளவு காலம் அது நீடித்த உபயோகத்திற்கு வருகிறதென்று பாருங்கள்.

வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள்

ப்ரீல்க்ரீம் BRYLCREEM

உபயோகிக்கிறார்கள்

குருப் லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்



பாதத்திலுள்ள புண்கள் நான்கு நாட்களிலேயே தகருகின்றன

குத்து வலியும் நமைச்சலும் 7 நிமிஷங்களில் நிறுத்தப்படுகிறது



வெறுப்பு தரும்படி பாதங்களில் அரிப்பு ஏற்படுகிறதா? பாதங்களில் ஏற்படும் வெடிப்புகளினால் தோல் உரிகிறதா? பாதங்களிலும், கால் விரல்களுக்கு இடையிலும் கொப்பளங்கள் உண்டாகி, அவைகள் உடைவதினால் வரும் அசுத்த நீரினால் புதிய கொப்பளங்கள் உண்டாகின்றனவா? பாதங்களின் புண்களிலிருந்து ரத்தக் கசிவு ஏற்படுகிறதா? இந்த உபாதைகளுக்கு மூல காரணம் சருமத்திலுள்ள வியாதிக் கிருமிகளே! அவைகளை அடியோடு அழிக்காவிடில் உபாதைகளினின்று விடுதலை அடைய முடியாது.

சாதாரண களிம்புகளும், தைலங்களும் அதிக பலனை அளிப்பதில்லை. ஏனெனில் அவை உபாதைக்கு மூல காரணத்தை அழிப்பதில்லை. அதிர்ஷ்டவசமாக இந்த உபாதைகளிலிருந்து விடுதலை யடைய, ஒரு பிரபல ஆங்கில சரும வைத்திய நிபுணரால் கண்டுபிடிக்கப்பட்ட நிக்ஸோடெர்ம் (Nixoderm) உள்ளது. இது மூன்று நிச்சயமான வழிகளில் குணமளிக்கிறது. (1) பாதங்களில் உபாதைக்குக் காரணமான கிருமிகளை அழிக்கிறது. (2) ஏழு நிமிஷத்தில் நமைச்சலைத் தடுத்து, சருமத்துக்குக் குளுமை தருகிறது. (3) சருமத்தைச் சுத்தமாக்கி, பட்டுபோல் வழவழுப்பாகச் செய்கிறது.

பரிசீலனைக்கு உத்தரவாதம்

மருந்து வியாபாரியிடமிருந்து நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்கி இன்று இரவு உபயோகித்து, அதன் அற்புத குணங்களை மறுநாள் காலை கவனியுங்கள். நான்கு தினங்களிலேயே உபாதைகளுக்குக் காரணமான வியாதிக் கிருமிகளை அழித்து சருமத்தைச் சுத்தமாகவும் ஆரோக்கிய முள்ளதாகவும் செய்கிறது. சரும உபாதைகளிலிருந்து பூரண பலனை அடைந்து திருப்தி பெற, தொடர்ந்து மூன்று நாட்கள் மருந்தை உபயோகிக்கவும். அந்த ஒரு வார முடிவில் உங்களுக்கு முழு திருப்தி ஏற்படாவிடில் அதன் காலி பாக்கெட்டைத் திருப்பி அனுப்பினால் அதன் விலை வாபஸ் செய்யப்படும். அதற்களிக்கப்படும் உத்தரவாதமே உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

கூட மறந்தான். செம்பைத் தகப்பனிடம் கொடுத்து விட்டு வேகமாக உள்ளே மறைந்தாள் மலர்க்கொடி.

"சாமி, உங்க மவளா? சரிங்க, நான் வர்றேன். அடிக்கடி குடிசைப் பக்கம் வரும் படியாயிருக்கும். உங்களுக்கு விசயம் கிடைத்தாலும் சொல்லுங்க" என்று பூசாரியை ஊடுருவிப் பார்த்தான் சண்முகம்.

தன் நெஞ்சைக் கான்ஸ்டேபிள் ஆழம் பார்ப்பதைக் கண்டதும் பூசாரிக்கு உதறல் எடுக்க ஆரம்பித்தது.

திடுமென்று சண்முகம் பிரவேசிப்பான். ஏதேதோ விசாரிப்பான். குடிசையில் சில மணி நேரம் தங்குவான். வெளியே செல்வான். இரவில் மறுபடியும் வருவான். இப்படியே அந்தத் தோப்பு முழுவதையும் அலசிப் பார்த்தான் சண்முகம். திருடனைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

பூசாரிக்குக் கருப்பனை எப்படி எச்சரிப்பதென்று புரியவில்லை. அவருடைய கிலியை அதிகப்படுத்த இன்னொரு விஷயமும் சேர்ந்து கொண்டது. திருடனைப் பிடிக்க வந்த சண்முகம் தன் உள்ளத்தை மரகதத்தினிடம் பறி கொடுத்து விட்டான். மரகதத்தைக் காணும்போதெல்லாம் சண்முகம் எல்லையில்லாத உவகை கொள்வான். சண்முகமும் பார்ப்பதற்கு வாட்டசாட்டமாக இருப்பான்.

போலீசு உத்தியோகம் வேறு! மரகதமும் சில சமயங்களில் சண்முகத்தைப் பார்த்ததுண்டு. பேசும் அளவுக்கு அவர்கள் காதல் வளரவில்லை.

ஒரு தடவை பூசாரியிடம் பேச்சுவாக்கில், "உங்கள் மரகதத்தை நானே கட்டிக்கிடலாம்னு முடிவு பண்ணி விட்டேன். உங்க சம்மதந்தான் பாக்கி. என்ன சொல்றீங்க?" என்று கேட்டான் சண்முகம்.

"மரகதத்தையா! கண்ணாலமா? போலீஸ்காரருக்கா?"

"என்னங்க, அலறிப் புடைக்கிறீங்க? என்னைப் புடிக்கலியா உங்களுக்கு?"

"இல்லையில்லை. என் மகள் சம்மதம்..."

"அதெல்லாம் வாங்கி ரொம்ப நாளாச்சு. நீங்கதான் ஒத்துக்கிடணும்."

"மரகதம் ஒத்துக்கிடிச்சா?" என்றார் பூசாரி ஒன்றும் புரியாமல்.

குடிசைக்குள்ளிருந்து பூசாரியின் மனைவி காத்தாயி வெளிப்பட்டாள்.

"ஏனுங்க? பிள்ளையைப் பார்த்தால் நல்ல மாதிரியாகத் தோணுது. மரகதத்துக்கும் பிடித்துப் போச்சு. நீங்கள் என்ன நினைக்கிறீங்க?" என்றாள் காத்தாயி.

மனைவியை நிமிர்ந்து பார்த்தார் பூசாரி. எல்லோரும் முடிவு செய்து கொண்டு கல்யாணத்துக்குத் தம்மை வரும்படி அழைப்பது போலிருந்தது.

"வர மாசமே கண்ணாலத்தை நடத்திடலாமே!" என்றான் சண்முகம் மிகுந்த சந்தோஷத்துடன்.

"அதுக்குள்ளேயா?..."

"ஆமாங்க. தீர்மானித்த விசயத்தைத் தள்ளிப் போடறதிலே என்ன லாபம்?"

"சரி" என்றார் பூசாரி. உள்ளூறத் தம்மை நம்பியிருக்கும் கருப்பனுக்கு ஒருவித ஆபத்தும் நேராமலிருக்க வேண்டுமேயென்ற கவலை வேறு அவரை வாட்டியது.

பூசாரியின் மகள் கல்யாணத்துக்குக் கருப்பனின் பரிசுதான் முதல்தரமாயிருந்தது. சண்முகம் கூட "இந்த வேட்டி யாரு வாங்கினது? ரொம்ப நல்லாயிருக்குதே!" என்றான். மரகதம் "ஆமாப்பா. என் சேலை கூட எவ்வளவு வளவளப்பாயிருக்குது! எம் மனசுக்குப் பிடிச்ச சேலையே எனக்கு வாங்கியிருக்கீங்களே!" என்றாள்.

பூசாரி தமக்குள் "நானா வாங்கினேன்? அந்தப் பாவிப்பய கருப்பன்லே கொடுத்தான். எம்மேலே உசிரையே வச்சிருக்கானே; அவன் நல்லாயிருக்கணும், கடவுளே!" என்று வேண்டிக் கொள்வார். கான்ஸ்டேபிள் சண்முகம் பூசாரிக்கு மருமகனாக வருவதில் பூசாரியை விடக் கருப்பனுக்குத்தான் ஆனந்தம் அதிகம். முடிந்தவரையில் வெகுமதிகளை வாங்கிக்



கொடுத்தான் கருப்பன். பூசாரி மறுக்க முடியாமல் பெற்றுக் கொண்டார்.

பிடாரியம்மன் திருவிழா தடபுடலாகத் தோப்புக் கோவிலில் அமர்க்களப்பட்டது. அதற்குத் தகுந்தாற்போல் போலீஸ் பாதுகாப்பு வேறு.

அன்று அம்மனுக்குக் காப்பு கட்ட வேண்டிய தினம். இரவில் கியாஸ் 'லைட்' வெளிச்சம் தோப்பைச் சுவர்ணபுரியாக்கியது. தோரணங்களும் வாழை மரங்களும் பந்தலையடைந்தன. கான்ஸ்டேபிளின் உடையில் சண்முகம் அங்குமிங்கும் அலைந்தான்.

திருடனைப் பிடிக்க எண்ணியவன் கல்யாணம் செய்து கொண்டு சுகமாக வாழ வேண்டியதாயிற்று. திருடனும் நன்றாக ஏமாற்றினான். சப்-இன்ஸ்பெக்டரிடமிருந்து புகார், 'ஏட்'டின் அதட்டல் உருட்டல் எல்லாம் சேர்ந்து கொண்டன.

பிடாரியம்மன் திருவிழாவில் எப்படியும் திருடனைப் பிடித்துவிடலாமென்று நம்பினான்

சண்முகம். அன்று மரகதம் பெண்கள் கூட்டத்தில் ராணி போல் வீற்றிருந்தாள்.

அம்மனை அலங்கரிப்பதில் மும்முரமாயிருந்தார் பூசாரி. அலங்கரிக்கப்பட்ட அம்மன் அன்று வெகு வனிதமாகக் காட்சியளித்தாள். பொய்க் கால் குதிரைகளின் ஆட்டம் பிரமாதம். இந்த அமளியில் புளியமரத்தின் அடியில் ஒரு உருவம் மறைந்து அம்மனை நோக்கி வந்துதொழுதது. அந்த உருவம்தான் கறுப்பன். தன் உடல் முழுவதையும் மறைத்துக் கொண்டு அம்மனைப் பார்ப்பதில் ஆனந்தம் கண்டு கொண்டிருந்தான்.

கூட்டத்தினர் பொய்க்கால் குதிரையாட்டத்தில் கவனத்தைச் செலுத்தினர். சண்முகம் அங்கு ஓரமாக நின்றான்.

''சாமி!'' என்ற மெல்லிய குரல் கேட்டது.

''அடப் பாவி! ஏதுக்குடா வந்தே. எம் மனசு பதறுதுடா. உன்னைப் பார்த்தால் எனக்கு மகனைப் போலத் தோணுது. அய்யோ புடிச்சுவிடப் போறானுகளே! கறுப்பா! சொன்னால் கேளு'' என்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னார் பூசாரி.

''சாமி!'' என்று காலில் விழுந்தான் கறுப்பன். தூக்கிப் பிடித்துத் தழுவினார் பூசாரி. இரண்டு உருவங்களும் சிறிது நேரம் அம்மன் அருளால் ஒன்றாகக் கலந்தன உணர்ச்சியில்.

''போடா கறுப்பா...'' என்றார் பூசாரி மேல் துண்டினால் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு.

''மாமா என்ன சத்தம்? யாரோடு பேசிக்கிட்டிருக்கீங்க?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான் சண்முகம்.

திடீரென்று புளியமரத்தடியில் ஒரு உருவம் மறைவதைக் கண்டு விட்டான் சண்முகம். ''யாரடா ஓடுகிறது?'' என்று கத்திக் கொண்டே ஓடினான்.

''சண்முகம்,! சண்முகம்!'' என்று பலமாகக் கதறினார் பூசாரி.

வாரி யடித்துக் கொண்டு எழுந்தார் பூசாரி. சூரியன் மேற்குக் கோடியில் மறையப் பார்த்தான். பழைய சம்பவத்தை எண்ணிய பூசாரி அம்மனுக்கும் விளக்கேற்றி வைத்து விட்டுக் குடிசைக்குத் திரும்பினார்.

பிடாரியம்மன் திருவிழா நடந்து இரண்டு மாதங்களாகின்றன. கறுப்பனைத் தூக்கிக் கொண்டு போன சண்முகம் இன்னும் திரும்பினபாடில்லை.

சில நாட்களில் மறுபடியும் விஷயம் கிடைத்தது. ''திருடன் சண்முகத்தினால் கொல்லப் பட்டான். தன் வேலையைச் சண்முகம் ராஜிநாமா செய்து விட்டான். திருடனைப் பிடிக்க அவன் பட்ட சிரமத்தையும் நேர்ந்த ஆபத்திலிருந்து சாதுரியமாகத் தப்பித்துக் கொண்டதையும் பாராட்டி அவனுக்கு உத்தியோக உயர்வு கொடுத்ததையும் வேண்டாம் என்று அவன் நிராகரித்து விட்டான்'' என்று தெரிய வந்தது.

பூசாரியினால் ஒன்றையும் நம்ப முடியவில்லை. வேலையை உதறிய சண்முகம் ஏன் குடிசைக்கு வரவில்லை? எங்கே போனான்? அதைப் பற்றிய கவலைதான் பூசாரிக்கு.

எங்கும் இருள் சூழ்ந்தது. குடிசையில் பலத்த பேச்சொலி கேட்டது. தந்தையைக் கண்ட மரகதம் ''அப்பா அவரு வந்துட்டாரு. நீ சொன்னாப்போலவே வந்து விட்டாரு'' என்றாள் ஒரே சந்தோஷத்துடன்.

''ஆ...சண்முகம், எங்கேடா போயிருந்தே? என் மகள் தவிச்சுப் போயிட்டாடா! கறுப்பன் செத்துப்போயிட்டானுமே? நீயாகொன்னாய்?''

''ஆமாம். இந்தக் கைகள்தான் அவனைச் சுட்டன. நான் என்ன பண்ணுவேன்? அவனைத் தூக்கிகிட்டுப் போனேன். சரியான இடத்திலே என்னை மடக்கிகிட்டான். கத்தியாலே குத்தியிருக்கப்படாதோ? அப்படிச் செய்யவில்லே! 'நீ யாரு'ன்னு கேட்டான். நான் கான்ஸ்டேபின்னு சொன்னேன். 'அது வேண்டியதில்லே. பூசாரிக்கு நீ என்ன வேணும்? மருமவனா?' என்று கேட்டான். ஆமான்னேன். உடனே ''ஐயோ! தெரியாமே தவறுசெய்ய இருந்தேன். சாமி! என்னை மன்னிச்சுடுங்க. உங்க மருமவனையா கொல்ல நினைச்சேன். நல்லவேளை தப்பிச்சேன்'' என்று கத்திக்கொண்டே ஓடினான். இந்தப் பாவி கையை விட்டு நழுவிக் கிடந்த துப்பாக்கியாலே அவனைச் சுட்டுப்புட்டேன்.''

''கறுப்பா...உன் குணம் தங்கமடா... எனக்கு நீதாண்டா உண்மையிலே மகனுக்கு மேலே'' என்று காட்டுக் கத்தலாய்க் கத்தினார் பூசாரி.

''மாமா...அதோடு போகவில்லே! கறுப்பன் தானுங்க என் தம்பி. கிட்டே போய்ப் பார்த்தேனுங்க. வெளிச்சத்திலே நான் செய்த பாவம் வெளியாகி விட்டதுங்க. அந்த வருத்தத்திலே எனக்குப் போலீசு உத்தியோகமே புடிக்கலீங்க. 'அண்ணா, நீயா... பூசாரி மருமவனா...சாமி ரொம்ப நல்லவரு. உன் அதிர்ஷ்டம் நல்லாயிருக்கணும். அம்மன் காப்பாத்துவாள்' என்று முனகிக் கொண்டே செத்தான்'' என்று சொல்ல முடியாமல் திணறினான் சண்முகம்.

மூவரும் பிடாரி அம்மன் கோவிலுக்குச் சென்றனர். அணைந்துபோயிருந்த விளக்கை ஏற்றினார் பூசாரி. மரகதம் கண்களில் நீர் வழியக் கண்களினால் பார்த்தறியாத கறுப்பனுக்காக வருந்தினாள். சண்முகம் உடன் பிறந்த பாசம் மேலோங்க அழுதான். பூசாரி பெற்ற மகனைப் பறி கொடுத்தது போல் அலறினார்.

கடையில் குடிசைக்குத் திரும்பினர். மூவரும் போகும் பொழுது ''அப்பா, விளக்கு அணைஞ்சு போயிடுச்சே? போயி ஏற்றவைச் சுட்டு வாப்பா!'' என்றாள் மரகதம்.

''குழந்தை! வேண்டாம். கறுப்பன் வர்ற நேரம் இதுதான். கோவிலுக்குள்ளே அவன் போயிருக்கான் போலிருக்கு. அது தான் விளக்கு அணைஞ்சு போயிடுச்சு. அம்மனைக் கும்பிடறதுக்காகக் காத்திருப்பவனைத் தடை செய்ய வேணும். வாங்க போவலாம்'' என்றார் பூசாரி. சண்முகம் துண்டினால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

பிடாரியம்மன் கோவில் இருண்டு கிடந்தது. 'புர்' ரென்று உள்ளிருந்து வந்த காற்று புளிய மரக்கிளைகளில் தவழ்ந்தது.

மாயேமியின் மகள்



" இதோ பார், அழப்படாது. சமர்த் தோல்லியோ நீ. நாதமுனி இப்பொழுது வருவான்" என்று முன்னைவிட உச்சஸ்தாயி யில் விறிட்டாள் செல்லம்மாள்.

"பார். பார். அதோ வருகிறான் பார்த் தாயா?" என்று தெருக்கோடியைக் குழந் தைக்குக் காண்பித்தாள் செல்லம்மாள்.

இரண்டு கைகளிலும் பைகளைச் சுமந்த வண்ணம் வந்துகொண்டிருந்தான் நாதமுனி. வந்து படியேறும் போதே, " ஏன் அழுவுது தங்கப் பாப்பா?" என்று ஆவலோடு கேட்டுக்கொண்டு வந்தான்.

இடுப்பிலிருந்த குழந்தையை இறக்கி விட்டு, " அப்பா, போ தும் பாப்பா பட்டபாடு! நீ போனது முதலாகக் கத்தித் தீர்த்து விட்டாள். அரை மணி நேரம் கடைக்குப் போனதற்கு இந்தப் பாடாக இருக்கிறதே. இன்னும் ஊரை விட்டுப் போய்க் காலட் சேபம் செய்வது எப்படி?" என்று கூறினாள் அவள்.

" நீங்கள் ஊரை விட்டுப் போவா னேன்?" என்று வினவியபடியே செல் லம்மாளைப் பின் தொடர்ந்து நாதமுனி யும் உள்ளே சென்று பைகளைக் கீழே வைத்தான். "அட கடவுளே! உனக்குச் சங்கதி தெரியாதா? உங்கள் எஜமானனை நிலக்கோட்டைக்கு மாற்றியாச்சே!"

" மாற்றியாச்சா?" என்ற சொல் லுடன் அப்படியே இடிந்து நின்று போனான் நாதமுனி.

செயலற்ற அவனுடைய வேதனையைக் கண்ட செல்லம்மாள் மிகவும் இரக்கத் துடன், " கவலைப்படாதே, நாதமுனி! என்ன பண்ணுகிறது? தாசில்தாரும் எஜ மானருக்கு ரொம்ப வேண்டியவர் தானும். அவரிடம் உன்னைப் பற்றிப் பிரத்தியேகமாக எடுத்துச் சொல்லிக் கவனிக்கச் சொல்லணும் என்று பக லெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார். உன் கவலைதான் அவருக்கு. கஷ்ட நிலைமையில்..." என்று இழுத்தாள்.

நாதமுனி சட்டென்று குறுக்கிட்டான். "கஷ்டத்தைப் பற்றி நான் என்றைக் குமே கவலைப்பட்டது கிடையாது, அம்மா! அதைப் போலச் சுகப்படணும் என்கிற ஆசையும் கிடையாது! எனக்குப் புத்தி தெரியாததற்கு முன்னும், புத்தி தெரிந்த பின்னும் கஷ்டத்திலேயே வளர்ந்து கஷ்ட காலட்சேபம் செய்து வருவதால் அதிலே வருத்தமே கிடை யாது. அதை மதிக்கிறதும் இல்லை. என்ன வருத்தம்னு. தோளிலே டவாலி மாட்டின இந்த இருபத்தேழு வருஷ அனுபவத்திலே எவ்வளவு சிரஸ்தாரு, தாசிலு, கலெக்டருங்களைப் பார்த்திருப் பேன்? அதிலே ஒருத்தராவது நம்ம எஜமான் மாதிரி புண்ணியமூர்த்தி யாரு மில்லே, அம்மா. மற்றவங்களைப் போல 'ப்யூன்'னு அதிகாரக் குரலிலே கூப்பிட்ட நாளே கிடையாது. அந்தச் சந்தோஷம்கூட எனக்கு நீடித்து இருக்கக் கூடாது என்கிறது ஆண்டவனுடைய திரு உள்ளம்! மணியா கிறது. நான் வரட்டுங்களா?" என்று கேட் கும் போது உணர்ச்சிப் பெருக்கினால் நாத் தழுதழுத்தது அவனுக்கு.

காலச்சக்கரம் உருண்டு பத்து ஆண்டுகளை நகர்த்தி விட்டது. நாதமுனிநாயுடுவின் மகன் அழகிரி கான்வென்ட் படிப்பை முடித்துக் கொண்டு திரும்பும் சமயம், கான்வென்ட் தலைவிக்குப் பர்மா கிளை ஸ்தாபனத்திலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது.

அதாவது யோக்கியப் பொறுப்பும் நிர்வாகத் திறமையுமுள்ள ஒரு 'ரைட்டர்'



தமது பள்ளிக்குத் தேவையென்பதை எழுதிக் கேட்டது அக்கடிதம்.

யோசித்தாள் கான்வென்ட் தலைவி. அந்தப் பதவி வகிக்கத் தக்க தகுதி பெற்றவன் அழகிரிதான் என்பதை நிச்சயித்து அவனை அழைத்து அவனது விருப்பத்தைக் கேட்டாள்.

அழகிரிக்குத் தர்மசங்கடமாகி விட்டது. இந்த அரிய சந்தர்ப்பத்தை இழக்கவும் மனமில்லை. கடிதம்தோறும் தன்னை வருந்தி அழைக்கும் தந்தையின் குரலை அலட்சியம் செய்யவும் துணிவில்லை. திணறினான்; தவித்தான். கைகளைப் பிசையாமல் அவஸ்தைப் பட்டான். அவன் சங்கடத்தை உணர்ந்த பள்ளித் தலைவி ஒரு யோசனை சொன்னாள்:

'போய் வேலையை ஒப்புக் கொண்டு ஒரு மாதம் வேலை பார்த்து விட்டுப் பிறகு தந்தையை அழைத்துச் சென்று விடுவது' என்பதுதான் அது.

அளவிலா மகிழ்வுடன் இந்த யோசனையின் படி புறப்பட்டு, பர்மாவின் கிளை ஸ்தாபனத்தின் ரைட்டராக அமர்ந்தான். அதன் பிறகு விவரங்களை விளக்கி, தந்தைக்கு விஸ்தாரமாகக் கடிதம் எழுதினான்.

அழகிரி பர்மாவுக்கு வந்து ஒரு மாதத்திலிருந்து ஒரு வருஷம் ஓடிவிட்டது. வேலையிலிருந்து ரஜா எடுக்க இயலாமலே இருந்தது. 'இதோ வருகிறேன். அதோ வருகிறேன்' என்ற கடிதங்கள் மட்டும் தவறாமல் கிடைத்து வந்தன வயோதிகத் தந்தைக்கு.

கு.ப.சேதுஅம்மாள்

சாமா

இப்போது நாதமுனியின் மனம் உறுதியடைந்து விட்டது. "மகனே! உனக்கு முடிந்தபோது வா. சேமச் செய்தி மட்டும் தவறாமல் எழுது. வர இயலாததற்கு வருந்தி மட்டும் எழுதாதே. முடியும் தருணம் உடனே வா. உன்னைப் பரமன் காப்பாற்றுவார்" என்று நாலு வரிகள் எழுதிப் போட்டுவிட்டு நிம்மதியடைந்து விட்டது போல நினைத்துக் கொண்டான் நாதமுனி.

மேலூர் சுந்தரகுப்பன் 'குட்டை'யருகிலிருந்த கூரைக்குச்சிலுள் நாதமுனி நாயுடு இவ்வாறு புலம்பித் தவித்துக் கொண்டிருக்க, அவன் அரும் புதல்வன் அழகிரிசாமி இதொன்றையுமே அறியாமல் பர்மியச் சூழ்நிலையில் உற்சாகமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தான்.

பள்ளி மாணவிகளில் பொறுக்குமணி போன்ற எழிலரசி மாயேமிக்கு அழகிரியின் நன்னடத்தை பற்றி மிருந்த சந்தோஷம்! கடையில் உட்கார்ந்து பணத்தோடு பணம் சேர்த்துக் கொண்டிருந்த தனது தந்தையிடம் 'ரைட்டர் அழகிரிசாமி'யின் நேர்மை மிக்க சுபாவத்தை வானளாவப் புகழ்வாள். இடைநேர உணவு வீட்டிலிருந்து வந்ததும் ரைட்டருக்கு அதில் பாதியைப் பகிர்ந்துகொடுப்பாள்.

"மாயேமி! உன் அன்புக்கு ரொம்ப நன்றி. ஆனால் நாளையிலிருந்து எனக்கு நீயேதும் இம்மாதிரி தரக் கூடாது" என்று ஒரு நாள் எச்சரித்தான் அழகிரி.

அழகி மாயேமி கன்னங்கள் குழியச் சிரித்து விட்டு, "ஓ, அப்படியா! பேசாமல் நான் கொடுப்பதை நீங்கள் சாப்பிட வேண்டியது. ரொம்பப் பேசினீர்களானால் அப்புறம் சாப்பாடும்கூட எங்கள் வீட்டிலிருந்து வந்து தான் நீங்கள் சாப்பிட்டாக வேண்டும்" என்று கூறினாள்.

அழகிரிக்கு அவளுடைய பரிகாசமும், உபசரணையும் இனிப்பாக இருந்தாலும் அதைச் சுவைக்க அவனுக்குத் தயக்கம்.

ஊரிலே பெரிய பணக்காரரான கோபாகமகளல்லவா மாயேமி? மேலும் பர்மியப் பெண்களின் சுபாவம் அவனுக்கு ஓரளவு புரிந்து விட்டிருந்தது! களங்கமற்ற முறையில் தாராளமாக ஆண்களோடு பேசிக் குலாவுவார்கள்; உபசரிப்பார்கள். உபகாரம் செய்வார்கள். அவர்களுடைய நடத்தையில் சிறிது பழுது ஏற்பட்டாலும், தலை, தாட்சண்யமின்றி நையப் புடைத்து அனுப்பும் சுய கௌரவமும், பண்பாடும் பர்மியப் பெண்களின் பிறவிக்குணம் என்பதை நன்கு தெரிந்து கொண்டிருந்ததால் அழகிரி அவ்வாறு நடுநடுங்கினான்.

"மாயேமி, நீ இன்னமும் சிறு குழந்தையல்ல, இதெல்லாம் நன்றாக இல்லை பார்!"

"எதெல்லாம் ரைட்டர்?" குறும்பாகச் சைகை செய்து கேட்டாள் மாயேமி.

"நீ இவ்வாறெல்லாம் என்னுடன் வம்பு செய்வதைப் பார்த்து உன் தோழிகளெல்லாம் சிரிக்கிறார்கள் பார்!" என்று கூச்சப்பட்டுக் கொண்டு சொன்னான் அழகிரி.

"சிரிக்கட்டுமே! நமது அன்பு எப்படி அவர்களுக்குத் தெரியும்!" என்று கூறிக் கலகலவென்று நகைத்தாள் மாயேமி!

ஆ! அந்த நகைப்பில்தான் என்ன பூரிப்பு! எவ்வளவு கர்வம்! எவ்வளவு நம்பிக்கை!

"மாயேமி, பரம ஏழையாச்சே நான்... உனக்குத் தகுந்தவனில்லையே...." என்றான்.

"நான் கூட ரொம்ப ரொம்ப ஏழையாக இருந்தவருடைய பெண்தான்! பணம் நிரம்ப இருக்கிறதா என்று பார்ப்பதைவிட மனம் சுத்தமாக இருக்கிறதா என்று பார்ப்பதுதான் முக்கியம், ரைட்டர்! உங்கள் நேர்மையும், ஒழுக்கமும் என்னை ஆட்கொண்டு விட்டன!"

"ஐயையோ, இதெல்லாம் என்ன மாயேமி, பெற்றோர்களுடைய இஷ்டம், சம்மதம் இதெல்லாம்...."

"என் பெற்றோர்களுடைய அனுமதி கிடைத்துவிட்டது! எங்களில் நாங்கள் விரும்பப்பட்ட ஆடவரை மணக்க எங்களுக்கு உரிமை உண்டு...!"

"உன் பெற்றோர் சம்மதம் மட்டும் போதாதே. என் தகப்பனார் இந்தச் சம்பந்தத்துக்கு ஒப்பமாட்டார், மாயேமி... நீ.,.என்னை மன்னித்து விடு..."

"அதெல்லாம் முடியாத காரியம், உடனே போய் உங்கள் தந்தையை அழைத்து வாருங்கள், நான் சம்மதம் கேட்கிறேன்..."

அழகிரி பேச்சற்று உட்கார்ந்து போனான்!

"அடடா, ரொம்பக் களைத்து விட்டீர்கள்! வாருங்கள் வீட்டுக்குப் போவோம்" என்று வற்புறுத்தித் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றாள் மாயேமி; அவனிடம் உள்ளத்தைப் பறி கொடுத்தாள் அந்த அணங்கு!

தந்தக் குமிழிமிட்ட கட்டிலில் பஞ்சணையில் இருக்கச் செய்து பாலும் பழங்களும் தந்து அன்புப் பணி செய்யும் ஏந்திழையாளின் கோரிக்கையை அவன் புறக்கணிக்க வகை தெரியாமல் தவித்தான்!

அவன் மனக்கண் முன், பட்டை நாமமும், பகவத் சிந்தனையுமே குடி கொண்ட அவன் தந்தை நாதமுனியின் முகமும் அவனுடைய அல்லல் பிழைப்பும் தாண்டவமாடின!

மாயேமியின் தந்தை நிலைமையை ஊகித்துக் கொண்டு, அழகிரிக்கு இதோபதேசம் செய்தார்! "எனக்கு இருப்பது ஒரே பெண் மாயேமிதான்! அவளுடைய சந்தோஷமே, எங்கள் வாழ்வின் இன்பம்! மணந்தால் உன்னைத்தான் மணப்பேன் என்று இரண்டு மாதங்களாகப் பிடிவாதம் செய்கிறாள். அழகிரி! இங்குள்ள அவ்வளவு பொருளும் ஐந்து லட்ச ரூபாய் ஆஸ்தியும் இந்த என் அருமைப் பெண் மாயேமியும் உன் ஒரு வாய்ச் சொல்லால் உயிர் பெற இருப்பவை! நீ சம்மதம் தராவிடில் மாயேமி என்ன ஆவாளோ? நாங்களும் இந்தச் சொத்துகளும் என்ன ஆவோமோ?"

"நான் ஒருவனாயின் கவலையில்லை..."

"அழகிரி! நாங்கள் மனிதர்கள், எங்களுக்கும் இதயமிருக்கிறது. உன் தகப்பனாரை அழைத்து வந்துவிடு. தள்ளாத வயதில் அவர் ஏன் கஷ்டப்பட வேண்டும்?" என்று கூறிவிட்டுத் தமது அலுவலை முன்னிட்டு அவர் அழகிரியிடம் விடைபெற்றுக் கொண்டார்!

தேவ தேவனான அந்த முக்கண் படைத்த சம்புவே—பார்வதியின் பணிவிடையையும், பக்தியையும் மெச்சி, மனமுருகி அவளைப்

பத்தினியாக ஏற்றுக் கொண்ட போது மனிதனை அழகிரி எம் மாத்திரம்?

நல்ல அழகியான மாயேமி தனது உண்மைக் காதலில் வெற்றி பெற்று விட்டாள்!

இப்போதும் அவனுடைய 'ரைட்டர்' உத்தியோகம் இருந்தது. மாதம் தவறாமல் வாங்கிய சம்பளம் அப்படியே நாதமுனிக்கு அனுப்பப்பட்டது.

''மாயேமி, இதெல்லாம் நன்றாக இல்லை'' என்று கெஞ்சிய வருஷம் ஓடி அடுத்த ஆண்டு அதே நாள் வந்ததும் மாயேமி—தன் காதல் கனியைக் கண்டு விட்டாள்! பர்மியர்களுக்குரிய சந்தன நிறமும், அழகிரிசாமிக்கு உள்ள மூக்கும் விழியும் பெற்றுச் சௌந்தரிய விக்ரஹமாக இருந்தான் — மாசியாங்!



இந்திய லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் மானேஜிங் டைரக்டர் திரு ஏ. ராஜகோபாலன் பம்பாய் மாதுங்காவில் தமது புதல்வி ஜமுனாவின் திருமணத்தை மே மீ 19ந் தேதி சிறப்பாக நடத்தி வைத்தார். மணமகன் பம்பாய் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணசாமி அவர்களின் சகோதரர் திரு வரதாச்சாரி. திருமணத்துக்கு ஏராளமான உறவினர்களும், நண்பர்களும், விஜயம் செய்து மணமக்களை ஆசீர்வதித்தனர். இந்தியாவிலுள்ள பல பிரமுகர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. வாழ்க மணமக்கள்!

அன்று ஏதோ வேலையாக வாசலுக்குச் சென்ற மாயேமி, தந்தித்தாளுடன் உள்ளே வேகமாக ஓடி வந்து, ''பார்த்தீர்களா, உங்கள் சோம்பலின் விளைவை?'' என்று தந்தித்தாளை வீசிப் போட்டாள்.

தந்தியைப் படித்துப் பார்த்தான். உடனே புறப்பட்டால் நாதமுனியின் 'முக முழி' கிடைக்கும் என்றது தந்தியின் வாசகம்.

மாயேமியின் சிவந்த முகத்தை நிமிர்ந்து பார்க்கக்கூடப் பயம் அழகிரிக்கு! அன்றே விமானம் மூலம் புறப்பட ஆயத்தம் செய்து விட்டு, ''மாயேமி'' என்றான் நாத்தழுதழுக்க.

''போதுமே உங்கள் கொஞ்சல். பாவம், முதியவர் எப்படித் தவிக்கிறாரோ? பகவான் கிருபையில் பிழைத்து விட்டால் அவரை அழைத்து வாருங்கள்! கொஞ்ச நாட்களாவது அந்தப் பெரியவருக்குச் சேவை செய்கிறேன்'' என்றாள் பெண்மையின் பெருமைக்கு எடுத்துக் காட்டான மாயேமி. நிறையப் பணமும் - காசும், கிழவருக்கு என்று இரண்டு கூடை நிறையப் பழங்களும், தித்திப்பு மிட்டாய்களும் கட்டிக் கொடுத்தாள்!

புறப்பட்ட மறு நாள் இரவு நாதமுனியின் சமீபம் அமர்ந்திருந்தான் அழகிரி. ஊரெல்லாம் கும்பல் கூடிச் செல்வச் சீமானாக வந்து இறங்கிவிட்ட அழகிரியைக் கண்டு அதிசயித்தார்கள். வதுவிழுந்து படுக்கையிலிருந்த நாதமுனி, ''அழகிரி, வந்துட்டியா? இனி என் நெஞ்சு வேகும்!'' என்று ஆனந்தக் கண்ணீர் பெருக்கினான்!

''அதெல்லாம் ஒன்றுமில்லே, அப்பா! நல்ல வைத்தியம் பார்த்தால் உடம்பு சுகமாவிடும். புறப்பட்டுப் போயிடலாம் நாம்!'' என்று ஆறுதல் கூறினான் அழகிரி.

''அப்பா, ஒரு தடவை போனது போதுமடா அப்பா! ஏதோ கடவுள் புண்ணியத்துலே அரை வயிற்றுக் கஞ்சிக்கு இருக்குது. பக்தவத்சலம் மகன் இருக்கா இனிமாதிரி. வேண்டிய சொத்து இருக்கு அவருக்கு. கலியாணம் கட்டிக்கிட்டு ஜோய்யாக இரு, அப்பா!'' என்றான் நாதமுனி.

நெஞ்சிலே நெருப்புக் கட்டமாதிரி துடிதுடித்தான் அழகிரி. தகப்பனார் இருந்த பலவீனத்தில், அவருக்கு ஆஸ்திக மதப்பற்றுதனில் - பர்மியப் பெண்ணை மணந்துகொண்டு விட்டேன் என்று கூறும் தைரியம் வரவில்லை அவனுக்கு! படுக்கையிலிருந்தபடி பக்தவத்சலத்தினிடம் மணம் பேசினான் நாதமுனி.

உண்மையைச் சொன்னால் தந்தையின் சாபத்தைப் பெற வேண்டுமே என்ற நிலை, உறவினருடைய நிர்ப்பந்தம், நாலு வருஷங்களாக அழகிரிக்குத்தான் கொடுப்பது என்று இருந்த பக்தவத்சலத்தின் பேரன்பு எல்லாமாகச் சேர்ந்து அழகிரியை ஊமையாக்கி விட்டன! நெஞ்சில் மாயேமி நர்த்தனமாடப் பல்லைக் கடித்துக் கொண்டு 'ஆண்டாளு'வின் கழுத்தில் தாலியைக் கட்டினான் அழகிரிசாமி! அதன் பிறகு மூன்று தினங்களுக்கு மேல் அவனால் அங்கு இருக்க முடியவில்லை.

நாதமுனிக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. வயோதிகமும் பிணியும் பறந்தோடிவிட்டன. மருந்து ஒரு கையும் நிம்மதி ஒரு கையும் கொடுத்து நாதமுனியைப் படுக்கையிலிருந்து தூக்கி விட்டன.

''நான் அழகா, மாயேமி அழகா? பார் நன்றாக!'' என்பது போலப் பதினெட்டு வயது யுவதியாக நின்றாள் ஆண்டாள்.

'ஐயையோ, மாயேமி! உன் அன்பை மறக்க முடியாது' என்று நெஞ்சு அலறியது. மாயேமியும் மாசியாங்கும் மன அரங்கில் சுற்றிச் சுழன்றார்கள். தான் போய் அங்குள்ள தனது உடைமைகளை எடுத்துக் கொண்டு மறுவாரம் வந்து விடுவதாகச் சொல்லி விட்டுப் பறந்து வந்து விட்டான் மாயேமியின் பக்கலுக்கு!

அதை மெய்யென நாதமுனி நம்பினான். அவன் ஆண்பிள்ளை. ஆண்டாள் பெண்ணல்லவா? அவள் நம்பவில்லை. தனக்குப் போட்டியாக அங்கு யாரோ இருக்கிறார்கள் என்பதை மட்டும் ஊகித்து அதை மனத்தில் வைத்து மறுகினாள். மறு வாரம், மறுமாதம், மறு வருஷமும் ஓடிவிட்டது.

வருவதாகக் கடிதம் வந்ததே தவிர ஆள் வரும் வழியாக இல்லை. கிழட்டு மாமனுக்குப் பணிவிடை புரிந்துகொண்டு கண்ணீரும் கம்பலையுமாகக் காலங்கழித்தாள் ஆண்டாள்.

ஆண்டாளின் வேதனையும் பிள்ளையின் கள்ளத்தனமும் நாதமுனியின் உயிரைக் குடித்துவிட்டன! வேதனையை எழுத்துக்களாக வடித்து ஆண்டாள் ஒரு கடிதம் எழுதினாள் கணவனுக்கு! பதிலை எதிர்பார்த்தாள்!

ஒரு நாள் கடிதம் வரும் நேரத்தில், ஒரு பெண் வந்து சேர்ந்தாள்!

"யாரது?"

"இதுதானே நாதமுனி என்பவரின் வீடு?"

"ஆமாம், நீங்கள் யார்?"

"என் பெயர் ரகுமாயி. உங்கள் கணவர் அழகிரிசாமி எங்கள் பக்கத்து வீட்டுக்காரர். வரும்போது உன்னை அழைத்து வரும்படி என் கணவர் மூலம் கடிதம் வந்திருக்கிறது. என்னை உனக்கு முன்பின் தெரியாததால் இந்தப் புகைப்படத்தை உனக்குக் காட்டச் சொன்னார்; கடிதமும் கொடுத்தார். அது எங்கோ தவறி விட்டிருக்கிறது!" என்றாள் வந்தவள்.

புகைப்படத்தை வாங்கிப் பார்த்தாள்! தனது திருமணக் கோலத்துப் படம் அது!

கணவனிடம் சேரப்போகும் ஆவலில் பெற்றோர்களுடைய ஆட்சேபணையைக் கூடப் பொருட்படுத்தாமல் துணிந்து அவளுடன் புறப்பட்டு விட்டாள் ஆண்டாள்.

ரங்கூன் விமான நிலையத்தில் இறங்கியதும் ரகுமாயி ஒரு ஹோட்டலுக்குச் சென்றாள். அங்கே ஆண்டாளை இருக்கச் சொல்லிவிட்டு நேராக ஷ்வேடாகான் பகோடாவுக்குச் சென்றாள். தலைமை பிக்ஷுவிடம் யாவற்றையும் கூறி இனி இல்வாழ்வில் தனக்கு இடமில்லை என்பதை எடுத்துக் காட்டி, பிக்ஷுணியாவதற்கு அனுமதி பெற்றாள். அடுத்த விநாடி அவளுடைய அழகிய கூந்தல் களையப்பட்டு—துவராடை கொடுக்கப்பட்டது!

அவளுடைய மனம் அதன் பிறகுதான் அமைதியடைந்தது. மாலையில் நாலு மணிக்கு ஆண்டாள் இருந்த விடுதிக்கு வந்தாள். அழகியாக இருந்த ரகுமாயி, சன்யாசினியாக உருமாறி வந்ததும் 'ஐயையோ!' என்று மிரண்டு அலறினாள் ஆண்டாள்.

"பயப்படாதே, ஆண்டாள். வா! உன் கணவரிடம் கொண்டு சேர்க்கிறேன்" என்று கூறி அவளுடன் புறப்பட்டாள்.

தாழ்வாரத்திலிருந்த சோபாவில் கவலை தோய்ந்த நிலையில் அமர்ந்திருந்தான் அழகிரி.

கட்டழகி மாயேமி காவியாடையுடன் முன்னேவர, அவள்பின்னால் வரும் ஆண்டாளையும் கண்டதும், அவன் நாடிகளில் ரத்தம் உறைந்து விட்டது! விழிகள் நிலைகுலைந்தன!

'அஹ்ஹா!' என்று சிரித்தாள் மாயேமி.

"அழகிரி! உண்மையான உன் உள்ளத்துக்குள் இவ்வளவு கள்ளம் எங்கு ஒளிந்திருந்தது—எனக்குத் தெரியாமல்? பகவான் அருளால் நான் சிறு வயதில்...கற்ற தமிழ் மொழி இன்று என்னைக் காத்தது!

"ஆண்டாளுடைய-அவள் உங்களுக்கு எழுதிய கடிதம் கையில் கிடைத்தது. அழகிரி, என்னை மறந்து அவளை மணந்தாய்! அவளை மறந்துவிட்டு என்னைச் சீராட வந்தாய்! ஐயோ, நேர்மையின் உறைவிடம் என்று உன்னை நம்பினேனே நான்! அழகிரி, இந்த இளம் பெண்ணின் வாழ்வு மலருவதற்கு நான் இடம் தந்து விட்டேன். ஆண்டாள், இதோ பார்! உன் கணவன் உன்னை மணந்து கொண்டதே உன் கடிதத்திலிருந்துதான் தெரிந்தது! பர்மியப் பெண்களுக்குப் பிறர் வருந்தப் பார்த்துச் சகிக்கும் குணம் கிடையாது. குழந்தை மாசியாங் இருக்கிறான். வேண்டிய அளவு செல்வம் இருக்கிறது!" என்று கூறிக்கொண்டே போனாள் மாயேமி.

"மாயேமி, எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்று வெறி பிடித்துக் கூவினான் அழகிரி.

"எனக்கும் ஒன்றும் வேண்டாம்......" என்று பொருமினாள் ஆண்டாள்.

"கூடாது. உங்களிருவருக்கும் எல்லாம் வேண்டும்! எனக்கு மனத்தில் எதிலும் பற்று கிடையாது. நிராசை பரம சுகம்! ஆசைப்பட்டு அழகிரியை மணந்தேன். நிராசையுடன் இதோ பகவானுடைய அருளை நாடிச் செல்கிறேன். என்னைப் பெற்றவர்கள் இன்றோ, நாளையோ பிக்ஷுக்களாகி விடுவார்கள்!"

தடதடவென்று படியேறி வரும் ஓசை கேட்டுத் திரும்பினாள் மாயேமி. மகளைத் துறவிக் கோலத்தில் கண்ட கோபாக அப்படியே பிரமித்து நின்றார் ஒரு கணம்.

கோபாஸா கண்ணீர் பெருக, "மாயேமி! போதிஸத்துவன் உனக்குச் சாந்தி அருளுக. இனி நாங்களும் உன்வழியே வந்துவிடுகிறோம்! ஏழையாக இருந்தோம். ஆண்டவன் செல்வமும் சுகமும் கொடுத்தான். அதை ஆண்டோம். இனி புத்த பகவான் அடிகளைத் தொழுவதே—அவனுடைய தரும நெறிகளைப் பரப்புவதே நம் பணி, குழந்தாய்.." என்று மொழிந்தார்.

அனைத்தையும்பார்த்த ஆண்டாளின் நெஞ்சு குமுறியது! தன் நிமித்தம் வாழ்வைத் துறந்து விட்ட மாயேமியின் அடிகளில் விழுந்து, "நான் என்ன அபராதம் செய்தேன்? ஏன் என்னைத் தண்டித்து விட்டுப் போகிறீர்கள் அக்கா?" என்று வீறிட்டாள் ஆண்டாள்.

தந்தையின் வருத்தத்தைக் கண்டு கலங்காத மாயேமி, ஆண்டாளுடைய அலறலைக் கண்டு கலங்கிவிட்டாள்; கண்ணீர் வழிய, "இதோ பார் உனக்கு மாசியாங்கைக் கொடுத்திருக்கிறேன். ..இந்தா," என்று கால்களைக் கட்டிக்கொண்ட குழந்தையை எடுத்து ஆண்டாளிடம் கொடுத்தாள்.

மாயேமிக்கு முன்னதாகக் கோபாஸாவும், அவள் தாயும் வெளியேறி நடந்தார்கள்!

மாசியாங் தாயிடம் தாவப் பார்த்தான்! வீறிட்டு அழுதான்.

மாயேமி "அதோ பார், அம்மா!" என்று ஆண்டாளைக் காட்டி விட்டு நடந்தாள்.

அழகிரி ஒன்றும் தோன்றாமல் அயர்ந்து போய் அசைவற்று நின்றான்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.


பாருங்கள்! ஒரு அரை வில்லை ஸன்லைட் தான்
இவ்வளவு சலவையும் செய்து
முடித்தது!
அதன் அதிகப்படியான நுரையே
இதை நிறைவேற்றியது!
SUNLIGHT SOAP
பளிச்சென்று வெண்மையாக
வெளுப்பது ஸன்லைட் சோப்
S. 248-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

